# பதிப்புரை

இன்று தமிழ் பேசும் உலகெல்லாம் அருணோதயம் வெளியீடுகள், தரமானவை அற்புத மானவை என்று பாராட்டப்படுகின்றன.

அதுவும் குறிப்பாக நாவல்களை விரும்பிப் படிக்கும் வாசகர்கள் அனைவரும் திருமதி ரமணி சந்திரன் நாவல்களைப் பெரிதும் வரவேற்கின்றனர்.

குடும்ப நிகழ்வுகளை கதைகளாக்கி, குடும்பப் பிரச்சினைகளை அலசி ஆராய்ந்து அதற்கான தீர்வுகளையும் சொல்லி மகிழவைக்கும் ஆற்றல் திருமதி ரமணி சந்திரன் அவர்களின் தனித்தன்மை என்பதை அனைத்து வாசகர்களும் அறிவார்கள்.

இந்தக் கதையிலும் இவர்களின் புதிய யுக்திகள் வாசகர்களை நிச்சயம் கவரும். படித்து சுவைத்து மகிழுங்கள்.

அருணோதயம் அருணன்

# என் உயிர் நீதானே ?

## 1



"அப்பா, இந்தாருங்கள் சாவி. நேற்று கடையை நான் பூட்டினேனா, அப்படியே சாவியை என் கைப்பையிலேயே வைத்து விட்டேன். பிடியுங்கள். தண்ணீர் பாட்டில், காஃபி ஃபிளாஸ்க் எல்லாம் தயார். கிளம்புவோமா? அண்ணன் எங்கே? முன்னாலேயே போய் விட்..." என்று தொடங்கிய சௌமியா, தந்தையின் கடுப்பும் சலிப்புமான முகத்தைப் பார்த்ததும், நாக்கைக் கடித்துக் கொண்டு பேச்சை இடையிலேயே நிறுத்திக் கொண்டாள். தினம் தினம் கண்முன்னே நடப்பதைப் பார்த்தும், யோசனையின்றிப் பேசி விட்டாளே!

அவர் அஞ்சியது போலவே தந்தை பொரியத் தொடங்கி விட்டார்.

"உன் அண்ணனாவது: முன்னாலேயே கிளம்புவதாவது? அங்கே பார். இன்னும் துரைக்குத்

திருப்பள்ளி எழுச்சியே நடந்தாகவில்லை. இனிமேல் அய்யா எழுந்து; பல் விளக்கி, குளித்து, சாப்பிட்டு முடித்தால், பெண்டாட்டியைப் பார்லருக்கு கூட்டிப்போகத்தான் நேரம் சரியாக இருக்கும். இதில் கடையாவது இன்னொன்றாவது? பணம்கேட்க வரும் போது தவிர, அவனுக்குக் கடை பற்றிய நினைவே இராதே!'' என்றார் தாமோதரன் மகனின் மூடியிருந்த அறைக்கதவை ஏளனமாகப் பார்த்த வண்ணம்.

''ஷ், அப்பா!'' என்று தந்தையை எச்சரித்தாள் மகள் ''வாருங்கள், நாம் போவோம். அங்கே மணிவாசகம் அங்கிள், சகாயம் எல்லோரும் வந்து காத்துக்கொண்டிருப்பார்கள். கிளம்புங்கள்'' என்றாள்.

அப்பா கோபமுற்று இருக்கும் சமயத்தில், அண்ணன் விழித்து வந்து ஏதாவது சொல்லி, வீணாக ஒரு வாக்குவாதம் ஏற்படுமுன், தந்தையை அழைத்துச் சென்று விடும் எண்ணம் அவளுக்கு.

பொதுவாக தாமோதரன், அனாவசியமாக அதிகம் பேசுகிறவர் அல்ல. மகனின் மன நிலை மாறுபட்டு விட்டதை உணர்ந்து, வெகுவாக விட்டுக் கொடுத்து விட்டவரும்தான். ஆனால் தேவையான சமயத்திலாவது, மகன் என்று இருப்பவன் உதவ வேண்டாமா?

அவர்களுடைய கடையில் இப்போது தினகரனுக்குத் தேவை இருந்தது. கடையின் மூத்த அலுவலருடைய மகளுக்கு பேறுகால வேளை, அவர் எப்போது வேண்டுமானாலும், கடையை விட்டுவிட்டு அவரது வீட்டுக்கு ஓட வேண்டி வரலாம்.



அத்தோடு, புத்தாண்டுப் பிறப்பு நெருங்கிக் கொண்டு இருந்தது. அன்று ஒருநாள் தள்ளுபடி விற்பனை செய்வது, தாமோதரனின் வழக்கம். கடையில் இருக்கும் சரக்கைக் கணக்கெடுத்து, அப்போது அதிகமாக விற்கும் பொருள் பார்த்து எதெது, எத்தனை எண்ணிக்கை கொள்முதல் செய்ய வேண்டும் என்று திட்டமிட்டு மொத்த விற்பனையாளரிடம் முன் கூட்டியே சொல்லி வைக்க வேண்டும்.

அந்த வேலைவேறு, தலைக்கு மேல் இருந்தது.

இந்தச்சமயம் மட்டிலுமாவது மகன் உதவுவான் என்று தாமோதரன் எதிர்பார்த்தார்.

ஆனால் அவனுக்கு அப்படி உதவுகிற எண்ணம் இல்லாதது போல் அவன் நடந்து கொள்ளவும், பெற்றவருக்கு ஆத்திரம் வந்தது. வீண்ரசாபாசம் கூடாது என்றே அதை அடக்கிக் கொண்டு உள்ளே மட்டும் குமுறும் எரிமலையாக நடமாடிக் கொண்டிருந்தார்.

தந்தையின் மனநிலையை சௌமியா நன்கு உணர்ந்திருந்தாள். எரிமலை வெடித்து, ஏடாகூடமாய் எதுவும் நடந்துவிடக் கூடாதே என்றுதான் அண்ணன் வருமுன் தகப்பனாரை அங்கிருந்து அழைத்துச் சென்று விட முயன்றாள்.

ஆனால் அது பயனின்றி, தினகரனின் அறைக் கதவு திறந்து கொட்டாவி விட்டபடி, அவன் வெளியே வந்தான். ஹாலில் தயாராக நின்ற தந்தை தங்கையைப் பார்த்ததும், ''என்ன அதற்குள் கிளம்பி விட்டீர்களா? ம். பை. அம்மா, காஃபி தர எவ்வளவு நேரம்? தொண்டை

காய்கிறது'' என்று எரிச்சல் பட்டவனாக வீட்டின் உட்புறம் திரும்பினான்.

''இதோ ஐந்தே நிமிஷத்தில் ரெடியாகி விடும். அல்லது பாப்பா, அந்த ஃபிளாஸ்க்கில் இருக்கும் காஃபியை அண்ணனுக்கு ஊற்றிக் கொடு. உனக்கும் அப்பாவுக்கும் அடுத்துக் கலப்பதில் தருகிறேன்'' என்று குரல் கொடுத்தாள், தாயார் திலகம்.

ஒன்பது மணிக்கு மேல் விழித்தெழுந்து வந்து மகன் காஃபி கேட்டதே தாமோதரனுக்கு ஆத்திரம். அதற்கு மேல் கடையில் இடையில் குடிப்பதற்காக வைத்திருந்த பானத்தையும் அவனுக்குக் கொடுக்கும் படி, சின்ன மகளுக்கு அண்ணனைப் போலன்றி, கடமை உணர்வோடு காலையிலேயே எழுந்து, குளித்துக் கடைக்குச் செல்லத் தயாராக இருக்கும் பெண்ணுக்கு மனைவி உத்தரவு போட்டது அவரது கோபத்தைத் தூண்டி விட, ''ஏன் காஃபி மட்டும் போதுமாமா, அல்லது தண்ணீர் பாட்டிலையும் சேர்த்து அவன் தலை மீது கவிழ்க்கட்டுமா?'' என்று சீற்றத்துடன் வினவினார். ''அப்போதேனும் இந்தத் தூக்கம் போகும்.''

வெடுக்கெனத் திரும்பிய மகனுக்கும் ஆத்திரமே.

தலைப்பிள்ளை ஒரே ஆண் பிள்ளை. செத்தால், கொள்ளி போட வேண்டிய வாரிசு. காஃபி கேட்டால், கையில் வைத்திருக்கிற ஃபிளாஸ்க்கைத் திறந்து, மூடிக் கப்பில் ஊற்றிக் கொடுத்து 'குடிம்மா, கண்ணா..' என்று கொடுக்காமல் இருப்பதே அப்பா செய்யும் தப்பு.



அம்மா அதைச் சொன்ன பிறகும் தங்கை உடனே செய்யாமல் இருப்பது அடுத்த குற்றம். அதற்கு மேலாகக் கோபம் வேறு காட்டுகிறதே, கிழம். ஆனந்தி சொல்வது போல அப்பாவுக்கு அவனிடம் பொறாமைதான். நம்மை விட, மகன் உயரமாக நிறமாக அழகாக இருக்கிறானே என்ற அசூயை.

''ஏன் ஏன்? தூங்கினால், என்ன தப்பு? பகலில் விழித்திருப்பதும், இரவில் தூங்குவதும் இயற்கை நியதி. அதை நான் செய்தால் மட்டும் உங்களுக்கு ஏன் எகிறுகிறது? உங்களுக்கு வயதானால் தூக்கம் வருவதில்லை. அதற்காக நல்லபடியாகத் தூங்குகிறவனைப் பார்த்து வயிறு எரியாதீர்கள்'' என்றவன் தங்கையை நோக்கி, ''ஏய், அம்மா சொன்னது காதில் விழவில்லை? அந்தக் காஃபியை ஊற்றிக் கொடுடீ'' என்று அதட்டினான்.

'டீ' யா?

சும்மாவே சூழ்நிலை சரியில்லாதபோது தான் கோபத்தைக் காட்டி, அதை மேலும் கெடுக்கக் கூடாது என்று கருதி அதை அடக்கிக் கொண்டு தயக்கத்துடன் அவள் தந்தையைப் பார்த்தபோது, நல்ல வேளையாகத் தாயாரே காஃபியுடன் வந்து விடவும், சௌமியாவின் பிரச்சினை தீர்ந்தது. இல்லாவிட்டால், ஊற்றிக் கொடுத்தால் அப்பாவுக்கும், ஊற்றிக் கொடுக்கா விட்டால் அண்ணனுக்கும் வரும் கோபம் அவள் மீது அல்லவா பாயும்.

அத்தோடு அவளும் அப்பா கட்சி என்பதால் காஃபியைக் கொடுக்க, அவளுக்கு மனமும் இல்லை.

ஆனால் அப்படி ஒன்றும் அவள் தப்பி விடவும் இல்லை. பானத்துடன் கூடிய பெரிய தம்ளரை, மகளிடம் கொடுத்ததோடு நில்லாமல் ''என்னடி சௌமி, அண்ணன் வந்ததும் அந்தக் காஃபியை அவனுக்கு நீயே கொடுத்திருக்க வேண்டாமா? வயதுப் பெண். இப்படியா மசமசவென்று நிற்பாய்?'' என்று மகளைக் கடிந்தாள் அன்னை.

''ஆமாம், காலையில் விழித்துக் கிளம்பி நிற்கும் அவளை அதட்டு. நீ ஒருத்தி போதும், பையனை உருப்படாமல் அடிக்க. காலை ஏழு மணிக்குள் வந்தால்தான் காஃபி என்று கண்டிப்பு காட்டி வளர்த்திருந்தால் இப்படித் தூங்குவானா?'' என்று மனைவியிடம் எரிச்சல் பட்டார் தாமோதரன்.

''என்னப்பா நீங்கள், திரும்பத் திரும்ப என் தூக்கத்திலேயே நிற்கிறீர்கள். காலை ஒன்பது மணி வரைதானே தூங்கியிருக்கிறேன். ஒன்பது மணியென்ன? இன்னும் கொஞ்ச நேரம் தூங்கினாலும்தான், அப்படி என்ன குடி முழுகி விடப் போகிறது?''

''முழுகி விடும் என்றுதானடா, அந்தக் காலத்திலேயே வள்ளுவர் எழுதி வைத்துவிட்டுப் போயிருக்கிறார். திருக்குறள் புத்தகத்தை எடுத்துப் படித்துப் பார். அதில் 'நெடுநீர் மறவி மடிதுயில் நான்கும், கெடுநீரார் காமக்கலன்' என்று ஒரு குறளே இருக்கிறது. ஒரு வேலையைச் சட்டு புட்டென்று



முடிக்காமல் இழுஇழு என்று இழுத்துச் செய்வது, மறதி, சோம்பல், தூக்கம் ஆகிய நாலும் மனிதனை அழிவுப் பாதையில் அழைத்துப் போகிறவை என்று உன் மாதிரி ஆட்களுக்காகத்தான் அவர் சொல்லுகிறார். படித்துப் பார்'' என்றார் தந்தை.

''அறிவியல் தெரியாத அந்தக் காலத்தில் எழுதியது. உடல் ஆரோக்கியத்துக்கு உறக்கம் இன்றியமையாதது என்று ஆராய்ச்சி பண்ணிக் கண்டு பிடித்திருக்கிறார்கள்'' என்றான் மகன், அலட்சியமாக.

காலை ஒன்பது மணிவரை தூங்குவதா, இன்றியமையாதது என்று நினைத்தும் கேளாமல், சௌமியா அடக்கியதை அவள் தந்தை கேட்டு விட்டார். தொடர்ந்து, ''உடல் ஆரோக்கியத்துக்கு மிஞ்சி மிஞ்சி ஏழு மணி நேரத் தூக்கம் போதும்ப்பா. அதையும் தெரிந்து கொண்டு பேசு'' என்று கூறினார்.

''எல்லாம் தெரியும்!'' என்றான் மகன் அசட்டையாக. ''இரவு வீடியோ பார்த்து விட்டுப் படுக்கப் போனால், நல்ல தூக்கம் பிடிக்க, இரண்டு மணிக்கு மேல் ஆகி விடுகிறது. ஒன்பது மணிக்கு முன் எழுந்தால் உடம்பு என்ன ஆகும்? இது தெரியாமல் உளறுவது நீங்கள்தான்.''

ஒரே பையன் என்று சற்று அதிகப் பாசம் காட்டும் தாய்க்கே, மிகவும் அதிகப்படியாகத் தோன்றிவிட, ''என்னடா, உளறுவது அது இது என்கிறாய்? அப்பாவிடம் மரியாதை வேண்டாம்? தினந்தோறும் அது என்ன வீடியோ? பத்துப் பத்தரைக்குப் படுத்து ஆறு மணிக்கு...'' என்றவளை

இடைமறித்து, ''அய்ய, நீங்களும் தொடங்காதீர்கள், அப்பா. ஆறு மணிக்கு விழித்து ஏழு மணிக்குக் கடை திறந்து அங்கே ஈ ஓட்டவா? டி.வி., ரேடியோ வாங்க வருகிறவர்கள் பத்துப் பத்தரைக்குத்தான் வீட்டை விட்டே கிளம்புவார்கள். அத்தோடு அப்படி எவனாவது வருகிறானா என்று காத்திருந்து வருகிறவனிடம் பல்லிளித்துப் பேசி வியாபாரம் பண்ணவும் எனக்குப் பிடிக்காது'' என்றான் தினகரன்.

''பிடிக்காது என்றால்? அப்புறம் துரை சாப்பாட்டுக்கு என்ன செய்வதாக உத்தேசமாம்?''

''எத்தனையோ செய்வேன். அதைப் பற்றி நீங்கள் கவலைப்பட வேண்டாம்'' என்றான் தினகரன், அலட்சியமாக. ''அம்மா ஆனந்திக்குக் காஃபி கலந்து கொடுங்கள். அவள் அசைகிற சத்தம் கேட்கிறது. விழித்தவுடன் காஃபி குடிக்காவிட்டால் அவளுக்குத் தலைவலி வந்துவிடும். சீக்கிரம்'' என்று தாயை விரட்டினான்.

மகனை ஏறிட்டுப் பார்த்துவிட்டு உட்புறமாக சமையலறையை நோக்கி திலகம் நடந்தாள்.

முன்னிலும் கோபமாக எதையோ சொல்லத் தொடங்கிய தந்தையின் கையை, சௌமியா அழுத்தமாகப் பற்றினாள். ''அப்பா நேரமாகி விட்டது. பாங்கிலிருந்து பணத்தை எடுத்துக் கொண்டு நேரே நம் கடைக்கு வந்து அந்த இருபத்தொன்பது அங்குலப் பெரிய டி.வி.யை வாங்க வருவதாகச் சொல்லிப் போனார்களே. சரியாக ஒன்பதரைக்கு வந்துவிடுவார்கள்



அப்பா. நாம் கடை திறக்கவில்லை என்று வேறு எங்காவது போய் விடப் போகிறார்கள் வாருங்கள்.'' என்று அவள் நினைவுபடுத்தவும், மகனை ஒருமுறை முறைத்துவிட்டு மகளுடன் நடந்தார் அவர்.

கடைக்குச் செல்லும் வரையும்கூட அவர் எதுவும் பேசவில்லை.

செல்லும் போதெல்லாம் உள்ளூர சௌமியா கலங்கிக் கொண்டே சென்றாள். பெரும்பாலும், இப்படி 'நாளை பணத்தோடு வருகிறேன்' என்று சொல்லிப் போகிறவர்கள் திரும்ப வர மாட்டார்கள். நாலு கடை அலசப் போகிறார்கள் என்றுதான் அதை எடுத்துக் கொள்ள வேண்டும். அதில் ஐந்தோ பத்தோ கிடைக்கிறதா என்று பார்ப்பார்கள். அப்படிக் கிடைக்கா விட்டாலும், அலைந்து அலுத்துப் போகும்போது அங்கங்கே சட்டென வாங்கிக் கொண்டு விடுகிறார்கள். அப்போதைக்கு அண்ணனுக்கும் அப்பாவுக்கும் ஒரு யுத்தம் நடப்பதைத் தவிர்ப்பதற்காகவே, அவள் அந்த வாடிக்கையாளர் பற்றிப் பெற்றவருக்கு நினைவூட்டியது. அந்த ஆட்கள் வேறு வரவில்லையானால், அப்பாவுக்கு இன்னும் வருத்தமாக இருக்குமே என்று மகள் இப்போது கவலைப்பட்டாள்.

நல்லவேளையாகப் பணத்தோடு வருகிறேன் என்றவர்களும் வந்துவிட, ஒரு பெரிய விற்பனையும் முடியவே, தாமோதரன் சற்றே அமைதியடைந்தார்.

அவர்களது கடையின் ஸ்பெஷல் பரிசான அலங்கார வேலை செய்த பை ஒன்றை எடுத்துக்

கொடுக்கவும், வாடிக்கையாளர் மிகவும் மகிழ்ந்து போனார்.

''இந்த பைக்காகத்தான் இங்கேயே வந்து வாங்கினோம். போன தடவை 'டு இன் ஒன்' வாங்கியபோது இது போலச் சின்னதாகக் கொடுத்தீர்களே, அது மிக நன்றாயிருக்கிறது என்று என் அக்கா கையோடு அமெரிக்காவுக்கே எடுத்துப் போய் விட்டாள். அதே நினைவில்தான் வீட்டு பக்கத்துக் கடையிலும் இதே விலை என்றபோதும் இங்கே உங்களிடம் வந்து வாங்கினோம். இப்போது அதிக விலை என்பதால் பெரியதாகத் தருகிறீர்கள் போல, ரொம்ப நன்றாக இருக்கிறது'' என்று சிலாகித்த வண்ணம், அந்தக் குடும்பம் கிளம்பிச் சென்றது.

'பைக்காக வந்தேன்' என்றதில் சௌமியாவுக்கு மிகுந்த மகிழ்ச்சி. ஏனெனில் அந்தப்பைகள், அவளது தயாரிப்புகள். நுண்கலையிலும், கல்ச்சுரலிலும் பயின்றது வீணாகாமல் இலகுவாகச் செய்வதுதான். ஆனால் பார்க்க மிக அழகாக பயனுள்ளவைகளாகவும் இருந்தன. அவைகளைச் செய்வது சிரமமோ, அதிகச் செலவோ இல்லை என்று கணக்கிட்டுத்தான் வாடிக்கையாளர்களை ஈர்ப்பதற்காக அவற்றை ஊக்கப் பரிசாகக் கொடுக்கத் தொடங்கியது. அப்படிக் கொடுப்பதும் அவளது ஐடியாதான். அந்தப் பைக்காகவே வந்ததாக வாங்கிய பெண்மணி கூறவும், சௌமியாவுக்குப் பெருமையாக இருந்தது.



பெரிய டீ.வி.யை அதற்குரிய பெட்டியில் வைத்துக் கட்டி வண்டிக்காரனை அழைத்து ஏற்றி விட்ட பிறகே தாமோதரன் மற்ற விஷயத்துக்குத் திரும்பினார்.

கடையின் மற்ற பணியாளர்கள் தத்தம், 'ஷோகேஸ்' வேலையைக் கவனிக்க, தந்தை மகளை அழைத்தார். ''என்னம்மா, அண்ணன் ஏதேதோ, ஒரு மாதிரிப் பேசுகிறானே, உனக்கு ஏதேனும் தெரியுமா?'' என்று மெல்லிய குரலில் விசாரித்தார்.

''இல்லையேப்பா'' என்று கையை விரித்தாள் பெண். ''அண்ணனுக்கு இந்த மாதிரி வியாபாரம் பிடிக்கவில்லை என்று தோன்றுகிறது...'' என்று இழுத்தாள்.

''ம்ம்... பிடிக்கவில்லையா? தலைவிதி?'' என்று தாமோதரன் பெருமூச்சு விட்டார். ''அருணா திருமணத்தின் போது அந்தப் பெண்ணைப் பார்த்துக் கிறங்கிப் போய் நின்றானே, பிள்ளையின் ஆசையை நிறைவேற்றுவோம் என்று முன் நின்று மணமுடித்து வைத்தது, முட்டாள்தனம் என்று இப்போது புரிகிறது. மாப்பிள்ளை குடும்பம் நன்றாக இருக்கிறது. அவர்கள் சொந்த பந்தமும் நன்றாக இருக்கும் என்று எண்ணியது தப்பாகிப் போயிற்றே'' என்று வருத்தப்பட்டார்.

''அப்பா, ப்ளீஸ்!'' என்றாள் மகள் கெஞ்சுதலாக. ''கொண்டு வைத்துக் கொண்டு, கோத்திரம் பார்க்கலாமா? என்று பழமொழி கூட இருக்கிறது. துணிந்தபின் எண்ணுவம் என்பதும் இழுக்குதானே?

அதிலும் திருமண விஷயத்தில் அப்படியெல்லாம் நினைப்பது கூட வேண்டாம், அப்பா'' என்றாள் இதமான குரலில்.

''என்னவோம்மா. 'மூத்தது மோழை' என்பது போல, எதற்கும் குனிந்து கொடுக்கிறானே, கொஞ்சம் திடமாக இருந்தால் தேவலையே என்று நான் நினைத்ததுண்டு. ஆனால் இப்போது தினா பேசுவதைப் பார்த்தால் மனதுக்குக் கஷ்டமாக இருக்கிறது. என்ன ஏது என்று யோசிக்கும் நிதானமே இல்லாமல் மட அடியாக... சரி எப்படியோ போகட்டும். போய்த் தானாகத் திருந்தி வரட்டும். ஆனால் புது வருஷம் பிறக்கப் போகிறதே. ஒன்றாம் தேதி விற்பனைக்காவது வருவானா? வராவிட்டால் சமாளிப்பது சிரமம் ஆயிற்றே'' என்று கவலைப்பட்டார் தந்தை.

ஒரு கணம் தயங்கிவிட்டு, ''வருஷப் பிறப்பு விற்பனைக்கு உதவ அண்ணன் கட்டாயம் வருவார் அப்பா'' என்றாள் மகள்.

கடவுளே, அண்ணன் வர வேண்டுமே என்று வேண்டிக் கொண்டது அவள் மனம்.

## 2

அண்ணன் தினகரனைப் பற்றியும் அண்ணி ஆனந்தியைப் பற்றியும், தந்தையிடம் நிறையச் சொல்லத்தான் சௌமியாவுக்கு ஆசை. ஆனால் சும்மாவே ஓரளவு விட்டு விலகிக் கொண்டிருக்கும் உறவு, ஒரேயடியாகப் பிரிந்து விடக் கூடாதே என்று எண்ணி வாயை இறுக மூடிக் கொண்டாள்.



தினகரன் கடையில் உட்கார்ந்து வியாபாரம் செய்வது பிடிக்காமல் போனது முக்கியமாக அண்ணி ஆனந்திக்குத்தான். மற்றபடி திருமணத்துக்கு முன்பாக அவன் செய்ததுதானே? 'இதை வாங்கிப் போட வேண்டும். அந்த மாதிரி அடுக்க வேண்டும்' என்றெல்லாம், கடையின் வளர்ச்சிக்காக நிறைய யோசித்துச் சொன்னவன்தானே?

என்ன, அவன் சொன்னது எதுவும் அனேகமாக நடைமுறை சாத்தியத்துக்கு ஒத்து வராததாக இருக்கும். அல்லது எண்ணிப் பார்க்க முடியாத அளவுக்கு அதிகச் செலவுக்கு வழி வகுக்கும்.

அத்தோடு மழை நாள், மாதக் கடைசி என்று விற்பனை குறைவாக இருக்கும்போது மிகவும் மனம் கலங்கிப் போவான். ஆனால் 'இதையெல்லாம் தொலை நோக்குப் பார்வையோடு பார்க்க வேண்டும். மழையே பெய்யாவிட்டால் பிற்பாடு, அடுத்த சீசனில் உள்ளதும் கெட்டு விடும். மாத முதலில் அதிக விற்பனை நடப்பதையும், மாதக் கடைசியில் உள்ளதையும் சேர்த்து சராசரி பார்த்துத்தான், லாப நஷ்டம் கணக்கிட வேண்டும்' என்றெல்லாம் தந்தை சொல்வதை ஏற்று உடனே பெருமளவு சரியாகியும் விடுவான்.

மனைவி வந்த பிறகு இந்த ஓர் ஆண்டாகத்தான் தினகரனுக்குக் கடை சலித்து விட்டது.

மணமான புதிது என்று கடைக்கு வருவதைக் கட்டாயப்படுத்தாமல் தாமோதரன் இருந்ததும், தப்பாகிப் போயிற்று.

முதலில் அது இது என்று சாக்குச் சொன்னவன், இப்போது கடைக்கு வர முடியாது என்று பிடிவாதமே பிடிக்கத் தொடங்கி விட்டான்.

வாடிக்கையாளருக்காகக் காத்திருப்பதும், அவர்களிடம் இன்முகமாகப் பேசுவதும் அவனுக்கு வெறுத்து விட்டது. பெற்ற தந்தையிடமே வெட்டிப் பேசுகிறவனுக்கு மற்றவர்களை அனுசரித்துப் போவது கடினம்தானே?

'உங்கள் கால் தூசி பெற மாட்டான். அவனுக்கெல்லாம் நீங்கள் சலாம் போடுவதா?' என்று மனைவி எடுத்துக் கொடுத்தபோது அதுதான் சரியென்று அவனுக்கும் தோன்றிவிட்டது. அத்தோடு பணத்தைக் கொடுக்கவும்தான், எத்தனை பேருக்கு மனம் வரும்? கடைக்காரர் அநியாய லாபம் சம்பாதிக்கிறார் என்றுதான் பெரும்பான்மை மக்கள் நினைப்பது. அது அவர்களது பேச்சில் செயலில், எப்படியும் வெளிப்பட்டுப் போகும் கொஞ்சமேனும்.

தாமோதரன் அதைக் கவனியாதது போல இருந்து இன்முகமாகவே பேசி அனுப்பி விடுவார். 'எருதின் வேதனை, காக்கைக்குத் தெரியுமா? நம் துன்பம், அவருக்கு என்ன தெரியும்?' என்ற அவரது பயிற்றுவிப்பில், தினகரனும் முன்பு இதற்காக ஆத்திரப்படுவது இல்லை. ஆனால் அந்த நிலை இப்போது முழுக்க மாறி விட்டது.



எதற்கெடுத்தாலும், கடையைக் குறைத்தே பேசுவது அவனது வழக்கமாகி விட்ட இப்போது அவனது பல குறைகளில் இதுவும் ஒன்றாயிற்று. தினம் தினம் லட்ச லட்சமாக, லாபம் வராதது, அடுத்த பெரும் குறை. இன்னும் காலை தொடங்கி இரவு வரை மாரடிப்பது. அடுத்த கொடுமையாம்.

குடும்பத்துக்குச் சோறு போடுவதும், கல்வியளித்ததும், அவனுக்கும் அவனுடைய மூத்த தங்கைக்கும் சிறப்பாகத் திருமணம் நடக்க வகை செய்ததும், இதே கடையின் வருமானம்தானே? அவன் மனைவிக்கு நிச்சயத்தின்போது வைர மோதிரம், பதினைந்து பவுனில் நகை செட் எல்லாம் வாங்கிப் போட்டபோது பெருமைப்பட்டதை எல்லாம் அடியோடு மறந்து அவன் பேசியது தாமோதரனுக்கு ஆத்திரமூட்ட, தகப்பனும் மகனும் சந்தித்தாலே ஒரு சச்சரவு, சிறியதாகவேனும் நடக்கும் என்பதாக ஆயிற்று.

சில மாதங்களாகச் சும்மா ஜாலியாகச் சுற்றிக் கொண்டு இருந்ததால்-பற்றிக் கொண்ட சோம்பலில், வேலை செய்யப் பிடிக்காமல் இப்படிப் பேசுகிறான். சற்று யோசித்தால் அண்ணன் உணர்ந்து கொள்வான் என்று எண்ணியிருந்த சௌமியாவும், இப்போது கவலைப்படத் தொடங்கியிருந்தாள். ஏனெனில் டி.வி. சீரியல் எடுத்தால் பணம் கொட்டோ கொட்டென்று கொட்டும் என்று அவளுடைய அண்ணி ஆனந்தி, ஒரு மாதிரித் தீவிரமான முக பாவனையுடன் திலகத்திடம் சொல்லிக் கொண்டிருப்பதை, அவ்வப்போது சௌமியா கேட்க நேர்ந்தது.

அதுபோல, அவள் பேசினால் கொஞ்ச நாளில் அதே விஷயத்தைத் தினகரன், தன் சொந்தக் கருத்தாகக் கூறுவதை, கடந்த பல மாதங்களில் சௌமியா பலமுறை கண்டிருக்கிறாள்.

அப்படியானால் சற்றும் தெரியாத இந்தத் துறையில் அண்ணன் மெய்யாகவே இறங்கப் போகிறானா? அண்ணன் இதில் எப்படி இறங்கி எப்படி நீந்திக் கரையேறப் போகிறான்? அடிப்படைத் தேவையான பணத்துக்குத் தந்தையிடம்தானே, வந்து நிற்பான்? அவன் கேட்க, தந்தை மறுக்க வீட்டில் ஒரு பெரும் தகராறு நிச்சயம் அல்லவா?

ஒரு வீட்டில் கருத்து வேறுபாடு இருப்பது இயல்புதான். ஆனால் வரவர தினகரன் பயன்படுத்தும் வார்த்தைகள், வருத்தமூட்டுவனவாக இருந்தன.

பசுவும் மாடும் ஒன்றுதான். ஆனால் ஒருவரைப் 'பசுப்போல' என்பதற்கும் 'மாடு மாதிரி' என்பதற்கும் வேறுபாடு உண்டில்லையா? தினகரனுக்கு 'மாடு'தான் இலகுவாக வந்தது.

வெகுவாக மனம் உளைந்த போதும் சௌமியா, தந்தையிடம் எதையும் சொல்லத் துணியவில்லை. ஒரு வேளை, அண்ணனும் அண்ணியுமே அந்த எண்ணத்தை மாற்றிக் கொண்டு விட்டால் அவள் சொல்வது வீண் கலகமூட்டுவதாகி விடும் அல்லவா?

எனவே எத்தனையோ சொல்ல விரும்பிய போதும், அவள் வாயைத் திறந்ததே இல்லை.

மாறாக, ஒரு பையை எடுத்துப் பூவேலை செய்யத் தொடங்கி விடுவாள்.



படிக்கும் காலத்திலுமே சௌமியா கல்லூரியிலிருந்து திரும்பி வந்தபின், கடையில் போய்ச் சற்று நேரம் உட்கார்ந்திருப்பது வழக்கம்தான். முதலில் அவளுடன் பயின்ற தோழிகளுக்கு சற்று அதிகக் கழிவுடன் டி.வி., டூ இன் ஒன், காசெட்டுகள் என்று வாங்கிக் கொடுக்கச் சென்றவள்தான். என்னவோ அவளுக்குக் கடையில் மிகுந்த ஈடுபாடு வந்துவிட, படிப்பு முடிந்த பிறகு தொடர்ந்து செல்லலானாள்.

பெண்கள் அடுப்படிக்குத்தான் லாயக்கு என்ற எண்ணம், தாமோதரனுக்குக் கிடையாதாகையால், அவர் மகளது வரவைத் தடுக்கவில்லை. அடுத்து மகனுக்குத் திருமணமானபோது கடைக்கு அவள் மிகவும் தேவையாகியும் விட்டாள்.

சௌமியாவும், கடைக்காக நிறைய யோசிப்பாள். அவள் அப்படி யோசித்துச் செய்ததில் ஒன்றுதான், பரிசாகப் பை கொடுக்கும் திட்டம். சுற்றுச்சூழல் சுகாதாரத்தை மனதில் வைத்து பாலிதீன் பைகளை விடுத்து சணல் பைகளை மொத்தமாக வாங்கி கிடைக்கும் நேரங்களில் அழகாய் ஏதாவது படங்களை வரைந்து வைப்பாள். வாடிக்கையாளர்கள் வாங்கும் பொருளின் விலைக்கேற்ப ஒன்றைச் சும்மா கொடுத்தால் வாங்குகிறவர் சந்தோஷமாகி விடுவார்.

இதேபோல, பக்கத்துக் கடை கிடைத்தால் அதையும் சேர்த்து பெரியதாக விரிவு படுத்தினால் விற்பனை அதிகம் ஆகும் என்பது அவளது கருத்து. ஆனால் அதற்குப் பணம் நிறைய ஆகும் என்பதால் இப்போதைக்கு முடியாது என்று தாமோதரன் சொல்லி

விட்டார். அத்தோடு இரு திருமணங்களுக்குச் செலவு செய்ததில் இருந்தும், கடை இன்னமும் மீண்டு வரவில்லை என்றார், அவர்.

ஆனாலும், கடை சற்று தாராளமாகச் செய்யும் வீட்டுச் செலவுக்குப் போக, ஓரளவு மிஞ்சுவதாகவும் இருந்ததால் எல்லோரும் திருப்தியாகவே இருந்தனர். தினகரனைத் தவிர, அவனும் தானாக வழிக்கு வந்து சேர்வான் என்பதுதான். என்ன, இடையில் கொஞ்சம் வீண் தகராறுகளுக்கு அப்புறமாக வருவான்.

இந்த எண்ணம் இருந்ததால் அவ்வப்போது காட்டும் எரிச்சல் தவிர தாமோதரன் அதிகமாக அலட்டிக் கொள்ளவில்லை.

சௌமியாவும் அப்படித்தான். ஆனால் சிறு வயது என்பதால் சற்று அதிகமாக மனம் உளைந்தாள்.

மற்றபடி, காலம் அதுபாட்டில் சென்றது.

பொதுவாக ஆடிட்டரைப் பார்ப்பது, முக்கியமான வசூல், கொள்முதல், பாங்க் போவது போன்ற அனைத்து வேலைகளையும், கடைக்கு அதிகம் ஆள் வராத நேரங்களில்தான் தாமோதரன் செய்வார். பின் காலைப் பொழுது அப்படிப்பட்டது.

முன்பெல்லாம் மகன் பொறுப்பில் கடையை விட்டுப் போவார். அவன் கடைக்கு வராததால் இப்போது மகளிடம்.

வழக்கம்போல, தொழில்துறை அதிகாரியைச் சந்திக்க மதியம் வருவதாகக் கூறி தாமோதரன் சென்றிருக்கையில் மூத்த அலுவலர் மணிவாசகத்துக்கு



எதிர்பார்த்துக் கொண்டிருந்த முக்கியமான சொந்த வேலை வந்து சேர்ந்தது. அவருடைய மகளுக்குப் பிரசவ வலியெடுத்து விட்டதாம்.

''பெரியவர் இல்லையே'' என்று தயங்கியவரை சௌமியாதான் கட்டாயப்படுத்தி அனுப்பி வைத்தாள். ''இது அதிகமாக வாடிக்கையாளர்கள் வரும் நேரம் அல்ல, அங்கிள். அப்படி யாரேனும் வந்தாலும் சகாயத்தை வைத்துக் கொண்டு என்னால் சமாளிக்க முடியும். என்னைப் பற்றிக் கவலைப்படாமல் நீங்கள் செல்வியைப் போய்ப் பாருங்கள். ஏதேனும் பணம் வேண்டுமா?'' என்று விசாரித்தாள்.

ஒருவேளை, பணத்துக்காகத்தான் மணிவாசகம் தயங்குகிறாரோ, என்றொரு சந்தேகம் அவளுக்கு. ஓரளவு பணம் கொடுத்தாலும் தந்தை ஒன்றும் சொல்லமாட்டார்.

ஆனால் இந்தத் தருணத்தை எதிர்பார்த்துப் பணம் தயாராகக் கையில் வைத்திருப்பதாக மணிவாசகம் கூறவும், அவரைக் கட்டாயப்படுத்தி அவளே அனுப்பி வைத்தாள்.

அவர் இல்லாமல், அவள் எந்தக் கஷ்டமும் பட்டுவிடவுமில்லை.

மணிவாசகம் சென்றபின், ஒரு தம்பதி வந்து 'போஸ்டர்' வாங்கினார்கள். அடுத்து ஒருவன் வந்து சின்ன காசெட் ப்ளேயர் பார்த்துவிட்டு வாங்காமல் போனான்.

மற்ற நேரம் எல்லாம், பை தயாரிப்பில் செளமியா தீவிரமாக முனைந்திருந்தாள்.

அப்போதுதான், அவன் வந்தான்.

புது வருஷப் பிறப்புக்கு அதிகம் தேவைப்படும் என்பதால் பைகளை நிறையச் செய்து அடுக்கிக் கொண்டிருந்தவளின் கண்களில் முதலில் பட்டது, அவனது கால்கள்தான்.

அந்த ஷூக்களும், உள்ளே சிவப்புக் கட்டங்கள் ஓடிய கரு நீல நிற சாக்சும் சாக்சை மறைத்த வெண்ணிற பான்ட்டும் அறிமுகமானவை போலத் தோன்ற அதைப் பற்றி யோசித்தபடியே நிமிர்ந்து பார்த்தாள்.

கிட்டத்தட்ட, அவனுடைய அண்ணன் வயதை ஒட்டிய ஓர் இளைஞன். அண்ணனைப் போலவே, பார்க்கவும் பளிச்சென்றிருந்தான். ஆனால் அத்தோடு ஒற்றுமை முடிந்து போய் விட்டது.

எளிமையாக முறுவலித்தபடியே வந்தபோதும், தினகரனிடம் இல்லாத ஒரு திடம், புதியவனிடம் இருப்பதைக் கண்டபோது, செளமியாவுக்குக் கொஞ்சம் வருத்தமாகத்தான் இருந்தது. அவளுடைய அண்ணனும், இப்படி இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்? இத்தனைக்கும் அப்பா ஒன்றும் அடக்கி ஆள்கிற ரகம் அல்ல என்று எண்ணமிடும்போதே அவனது கால்கள் அறிமுகமானவையாகத் தோன்றியதன் காரணம் அவளுக்குச் சட்டெனப் புரிந்தது.

கடந்த அரை மணி நேரத்தில் இரண்டு மூன்று முறை இந்தக் கால்கள் கடை வாயிலை இப்புறமும் அப்புறமுமாகக் கடந்து சென்றிருந்தன.



பூவேலை செய்யும்போதே, வாயிற்புறம் நிழலாடுகையில் தலை நிமிராமல் விழிகளை மட்டும் திருப்பியபோது, அவளது பார்வையில் பட்டவை, அவைதான்.

எதைத் தேடி அலைகிறான்?

ஆனால் அதை வார்த்தையால் அவள் கேட்கவில்லை. கேட்டால், சில சமயங்களில் தாறுமாறான பதில்கள் வருவதுண்டு. எனவே ''சகாயம் சாருக்கு என்ன வேண்டும் என்று கவனி'' என்று பணியாளுக்கு உத்தரவிட்டாள்.

இனிமையாகப் புன்னகை செய்து, ''என் பெயர் பிரியரஞ்சன்'' என்றான் அவன்.

'பெரிய பிரதம மந்திரி போலப் பெயரைச் சொல்லி விட்டான், உடனே அவன் இன்னார் என்று புரிந்து கொள்வதற்கு' என்று கேலியாக நினைத்து மனதினுள்ளேயே சிரித்தவாறு ''சந்தோஷம் உங்களுக்கு என்ன பொருள் வேண்டும் என்று சகாயத்திடம் சொன்னீர்களானால், எடுத்துக் காட்டுவான்'' என்று இனிய குரலில் கூறினாள்.

எதையோ ரசித்தவன் போல, அந்தப் பிரியரஞ்சனின் கண்களும் பளிச்சிட்டன. உடனேயே விளக்கம் கூறுபவன் போல, ''சகாயத்தின் பெயர் பொருத்தமாக இருக்கிறதே'' என்று மீண்டும் புன்னகை செய்தான்.

பொருத்தம்தான். செளமியாவே பலமுறை நினைத்து ரசித்திருக்கிறாள். ஆனால், இதற்கு மேல் இவனோடு உரையாடலை வளர விடுவது கூடாது என்று

கருதி ''ஆமாம்'' என்று முடித்துவிட்டு ''சகாயம் அவருக்கு வேண்டியதைக் காட்டுப்பா'' என்று பணியாளருக்கு உத்தரவிட்டு விட்டு தன் 'பை' வேலையைக் கையில் எடுத்தாள்.

ஆனால் இரண்டே நிமிஷங்களில் அதைக் கீழே வைத்து விட்டுப் பிரியரஞ்சனின் தேவைகளை சௌமியாவே கவனிக்கும்படி ஆயிற்று.

## 3

சகாயம், அதிகம் படிப்பறிவு இல்லாதவன். பொதுவாக டி.வி. பெரிய மியூசிக்சிஸ்டம் போன்றவைகளைத் தூக்கி மின்விசை அருகில் வைத்து பிளக்கில் சொருகி, அவை வேலை செய்வதைக் காட்டுவதும், வாடிக்கையாளர் வாங்கியதை எடுத்துப் போய் வண்டியில் வைப்பதும்தான் அவன் செய்வது. ஓரளவு விலை விவரங்களும் தெரியும்.

அத்தோடு, பிரியரஞ்சனைப் பார்க்கும் போதும் அவன் பெரிதாக எதையும் வாங்க வந்தவன்போல, சௌமியாவுக்குத் தோன்றிவில்லை. பொதுவாகப் பெரிய மின்சாதனங்களை வாங்க வருகிறவர்கள் ஒன்று குடும்பத்தோடு வருவார்கள். அல்லது நண்பர்கள் சேர்ந்து வந்து அலசி ஆராய்ந்து தேர்ந்தெடுப்பார்கள். இவன் தனியாளாக வந்திருப்பது சும்மா விலை விசாரிப்பதற்காக மட்டும் என்பது அவளது கணிப்பு.



எனவே, பொருட்களின் விலை சொல்வதற்கு சகாயம் போதும் என்று அவனை ஏவினாள்.

பிரியரஞ்சன் நிறையப் பேசினான். மழை, சென்னையின் தட்பவெப்பம், சினிமா, டி.வி. சீரியல் என்னென்னமோ.

ஆனால், அதற்கிடையே அவன் ''ஹோம் தியேட்டர் இருக்கிறதா? பெரிய டி.வி.யில் யார் யார் தயாரிப்பெல்லாம் வைத்திருக்கிறீர்கள்? டோஸ்டர், ஐயர்ன்பாக்ஸ், எல்லாம் எதெது நன்றாகப் போகிறது?'' என்றெல்லாம் கேட்கவும் சகாயம் திணறி விட்டான்.

ஒவ்வொன்றாக அவன் வந்து வந்து கேட்பதில் சொல்லி அனுப்பியவள், சற்று நேரத்தில் கை வேலையை ஒதுக்கி வைத்துவிட்டு அவளே எழுந்து வந்தாள்.

''என்ன சார், உண்மையில் உங்களுக்கு என்ன வேண்டும்? மெய்யாகவே வாங்குவதற்கா, இத்தனை விசாரிக்கிறீர்கள்?'' என்று நேரடியாகக் கேட்டாள். ''அல்லது யாருக்காகவும் காத்திருக்கும் நேரத்தை இப்படிக் கழிக்கிறீர்களா?''

ஆனால் ''ஏன் அப்படிக் கேட்கிறீர்கள்?'' என்று அவளையே திருப்பிக் கேட்டான், அவன்.

''பின்னே? எதெது நன்றாக விற்கிறது என்றெல்லாம் கேட்கிறீர்களே. உங்களுக்கு எதற்கு அந்த விவரங்கள்?''

''எதற்கா?'' என்று விழிகளை விரித்தான் பிரியரஞ்சன். ''பொதுவாக நன்றாக... நிறைய ஒரு

பொருள் விற்றால் அந்தப் பொருளில் குற்றம் இல்லை என்று அர்த்தம். அடிக்கடி பழுதாகக் கூடியதை யாராவது வாங்குவார்களா? அதிகம் விற்பனையாகிற பொருள் என்றால் அது அடிக்கடிப் பழுதாகாது என்ற நம்பிக்கை. அதற்காகத்தான் விசாரித்தேன். நீங்கள் அப்படிச் செய்ய மாட்டீர்களா? சும்மா ஒன்றும் விசாரியாது வாங்கி விடுவீர்களா?'' என்று அப்பாவி போல விசாரித்தான்.

ஒரு கணம் திணறிவிட்டு, ''விசாரிப்பேன். ஆனால் என்ன வாங்கப் போகிறேனோ, அதைப் பற்றி மட்டும் விசாரிப்பேன். சும்மா கண்ணில் பட்டதையெல்லாம் அலசி ஆராய்ந்து கொண்டிருக்க மாட்டேன்'' என்று மறைமுகமாய் அவனை மட்டம் தட்டினாள், சௌமியா.

ஆனால் ''நான் அப்படியில்லையப்பா'' என்று ஸ்டைலாகத் தோளைக் குலுக்கினான் அவன். ''கண்டது கற்கப் பண்டிதன் ஆவான் என்று காலம் காலமாய்த் தமிழில் சொல்லப்பட்டு வருகிறது. அதனால் கிடைத்த சமயத்தில் நாலு விஷயம் தெரிந்து வைத்துக் கொண்டால் நல்லது என்பது, என் கருத்து. தெரிந்து கொள்ளும் விவரம் எப்போது வேண்டுமானாலும் பயன்படலாமே. அடுத்த மாதமே, எனக்குப் பெரிய டி.வி. தேவைப்படலாம். என் நண்பனுக்கு...'' என்று சொல்லிக் கொண்டே போனவனை இடைமறித்து, ''நாளை மறுநாள், ஹோம் தியேட்டர் தேவைப்படலாம். அதற்கு அடுத்த நாள், பஸ், ரயில், விமானம் கூட வாங்க வேண்டி வரலாம். அதற்காக இப்போதே விவரம் சேகரிக்கிறீர்கள். ஒத்துக் கொள்கிறேன். சரி உங்களுக்கு இப்போது வேறு என்ன விவரம் வேண்டும் கேளுங்கள். சொல்கிறேன். ஒருவேளை, குரு தட்சிணையாக அந்தச் சாமான்களை நீங்கள் எங்களிடமே வாங்கலாம் அல்லவா?'' என்று சிறு கிண்டல் கலந்த குரலில் வினவினாள்.



உடனே பதில் சொல்லவில்லை, அவன். பக்கத்தில் இருந்த ஷீட்டரைத் திருப்பிப் பார்த்துவிட்டு, ''எந்தெந்த நிறுவனத்தில் என்னென்ன பொருட்கள் அதிகம் விற்பனையாகின்றன?'' என்று விசாரித்தான்.

''எல்லா நிறுவனத்து சாதனங்களையும் நாங்கள் வைத்துக் கொள்வது இல்லை. பொதுவாக இங்கே இருப்பவை எல்லாமே மக்கள் மதிப்பைப் பெற்ற பொருட்கள்தான்'' என்றாள் அவள்.

''ஏன் எல்லா நிறுவனப் பொருட்களையும் வைத்துக் கொள்ளவில்லை? இதை வாங்கப் பத்து பேர் என்றால், மற்றவைகளையும் ஓரிருவர் வாங்குவார்கள் தானே?''

''என்ன பேச்சு இது, என்று எரிச்சல் வந்தது அவளுக்கு. சொல்லப் பிடிக்காவிட்டாலும், ''அதற்கெல்லாம் நிறையப் பணம்... பல லட்சங்கள் வேணும். எங்களால் முடிந்தவரை தரமானதைக் கொடுக்கிறோம். அவ்வளவுதான்...'' என்றாள்.

அத்தோடு முடித்துக் கொண்டு போய் விடுவான் என்று எதிர்பார்த்தது தவறாகி, ''எந்தெந்த மாதங்களில் இந்த மாதிரி மின் சாதனங்கள் அதிகமாக விற்கும்?''

என்ற பிரியரஞ்சனின் கேள்வி சௌமியாவைத் திகைக்க வைத்தது.

''இதை ஏன் கேட்கிறீர்கள்?'' என்று ஆச்சரியத்துடன் வினவினாள்.

''ம்ம்ம்...'' புதன்கிழமை தயாரிக்கப்பட்ட பொருட்கள் என்று கேள்விப்பட்டதுண்டா?'' என்று அவளிடம் கேட்டான் பிரியரஞ்சன்.

உள்ளூர வியப்புடன், அவள் மறுப்பாய்த் தலையாட்டினாள்.

''பல நாடுகளில் வாரத்துக்கு ஐந்து நாட்கள்தான் வேலை. சனி ஞாயிறுகளில் வேலை நாட்களில் இறுக்கம் வடிய, பொதுவாக அனைவருமே எங்கேனும் உல்லாசமாகப் போய் வருகிறார்கள். அந்த இரு தினங்களின் உல்லாசத்திலிருந்து முழுமையாக மீளமாட்டாமல் திங்களன்று சற்று சோம்பேறித்தனமாய் வேலை செய்வார்களாம். செவ்வாய்க்கிழமை, இது இன்னமும் குறைந்து, புதன் கிழமை முழு மனதோடு பணியில் ஈடுபடுவார்களாம். அப்புறம் வியாழனன்று, வாரக் கடைசிக்காக ஏங்கத் தொடங்கி வெள்ளிக் கிழமை எப்போது முடியும் என்று பொறுமையற்று வேலை செய்வார்களாம். அதனால் புதன் கிழமை தயாரித்த பொருட்கள் மற்றதை விடச் சிறப்பாக இருக்கும் என்று சொல்வார்கள். நூறு சதவீதம் தரமான சாமான்களை வாங்க வேண்டுமானால் புதன் கிழமை தயாரித்தவைகளைத் தேடி வாங்க வேண்டும் என்பார்கள்.''

திகைப்பாக இருந்தது சௌமியாவுக்கு.



இவன் நிஜமாகத்தான் சொல்லுகிறானா, அல்லது கதை விடுகிறானா, என்று யோசிக்கும்போதே இந்த மாதிரி எதையோ, பல ஆண்டுகளுக்கு முன்னதாகப் படித்த ஞாபகம் லேசாக வந்தது.

ஆனால், நம் நாட்டைப் பொறுத்தவரையில் பொருள் தயாரித்த மாதம் குறிப்பிடப்பட்டிருக்குமே தவிர, நாள் அல்லவே.

அத்தோடு...

''ஆனால் உங்கள் கேள்விக்கும் அதற்கும் என்ன சம்மந்தம்?'' என்று கேட்டாள் அவள்.

சற்றும் தயங்காமல், ''இருக்கிறதே, நம் நாட்டில் தயாரிப்பு நாளை அறிய வழியில்லை. ஆனால் எந்தெந்த மாதங்களில்அதிக விற்பனை நடக்கும் என்று தெரிந்தால் அப்போது தரமான பொருட்கள் கிடைக்கும் என்று வைத்துக் கொள்ளலாம் அல்லவா? அதைப் பற்றித் தெரிந்து கொள்வதற்காகத்தான்'' என்று விளக்கினான் அவன்.

ஏதோ நெருட, ''ஆனால் உங்கள் அறிவை விசாலப்படுத்துவதற்காக, எங்கள் வேலையைக் கெடுக்கக்கூடாது அல்லவா?'' என்று கேட்டாள்.

''வேலை?'' என்று புருவம் உயர்த்தியவனின் பார்வை, அவர்களைத் தவிர வேறு யாரும் இல்லாத கடையைச் சுற்றி விட்டு மீண்டும் அவளிடம் வந்து நிலைத்தது.

லேசாக முகம் சிவந்த போதும், ''இது வடிக்கையாளர்கள் அதிகம் வரும் நேரம் அல்ல. அத்தோடு கடையில் வேலைஎன்றால் விற்பனை

மட்டும்தானா? 'எறும்பூரக் கல் தேயும்' என்பார்கள். 'சின்ன எறும்பு செல்ல கல்லே பொடித்துத் தேய்ந்து விடுகிறது. இது நூறு கோடி மக்களும், அந்த மக்கள் தொகைக்கேற்ப வாகனங்களும் சென்று வரும்தேசம். தூசி எவ்வளவு ஏற்படும்.? பொருட்களைத் துடைத்து துடைத்து வைப்பதே பெரிய வேலை, சகாயம்அதைப் பார்க்க வேண்டும். நானும்சும்மா இருப்பதில்லை என்றவளின் பார்வை, மடித்து அடுக்கப்பட்டிருந்த பைகளிடம் சென்றது.

அவளைத் தொடர்ந்து அவனது கண்களும் பைகளைப் பார்க்க, ''ஓ இந்தப் பைகள் உங்கள் தயாரிப்பா? கடையிலிருந்து வெளியே வந்தவர்கள் கையில் வைத்திருந்தார்களே. என்ன விலை?'' என்று ஆவலாகக் கேட்டான்.

விட்டால் கடையையே விலை பேசி விடுவான் போலிருக்கிறதே.

''அவை விற்பனைக்கு இல்லை'' என்றாள் அவள் சுருக்கமாக.

''பின்னே? இந்தக்கடையிலிருந்து வெளியே வந்தவர்கள் கையில் பார்த்தேனே'' என்றான்அவன் விடாமல். ''ஒரு வேளை பையின் அழகைப் பார்த்தும் விட மனமில்லாமல் திருடி விட்டார்களோ.''

தன் தயாரிப்பை அவன் பாராட்டிய விதத்தில் அவளுக்கு தன்னை மீறிப் புன்னகை மலரத்தான் செய்தது. ஆனாலும் அதை அடக்கிக்கொண்டு ''அது, சாமான் வாங்குகிறவர்களுக்கு இலவசமாகக்



கொடுப்பது. சொல்லுங்கள் இப்போது உங்களுக்கு எதை எடுத்துக் காட்டச் சொல்லட்டும்?'' என்று காரியத்தில் கண்ணாகக் கேட்டாள் சௌமியா.

''இலவசமா?'' என்றான் பிரியரஞ்சன். ''அருமையான ஐடியா. விற்பனையை அதிகரிக்க, என்னென்னவோ இலவசம் என்கிறார்கள். ஆனால் இப்படி ஒரு பையை வாங்கியவர்கள். மறுமுறை வேறு எங்கேயும் போகவே மாட்டார்கள். கடை சொந்தக்காரர், உங்கள்அப்பாதானே? அவர் ரொம்பக் கெட்டிக்காரர் என்று தெரிகிறது. வாடிக்கையாளர்களை எப்படிப் பிடித்துக் கொள்கிறார்.''

ஐடியா தன்னுடையது என்று சௌமியா சொல்லவில்லை. ஆனால் அடக்கம் பத்துரூபாய் ஆகிற பையை இலவசமாகக் கொடுப்பதா? சுத்த மடத்தனம்'' என்று அண்ணனுக்கு நேர்மாறாக, இந்தப் புதியவன் புரிந்து பாராட்டியது அவளை மேலும் மகிழ வைத்தது.

தொடர்ந்து ''அந்தப் பைகள், மொத்தமாக விலைக்குக் கிடைக்குமா?'' என்று வேறு கேட்டான் பிரியரஞ்சன்.

ஆக, அவள் எண்ணியது போலச் சும்மா பொழுது போக்க வந்தவன்தான்.

ஆனால் சௌமியவுக்குக் கோபம் வரவில்லை. ஒரு சிலரைப் போல அதை வைத்துக் காட்டு, இதை இறக்கி ஓட விடு' என்றெல்லாம் வேலை வாங்கிவிட்டு ஒன்றும் வாங்காமல் போகாமல் சுவாரசியமாகப் பேசிக் கொண்டேனும் இருந்தானே!.

மெய்யாகவே, அவன் பேச்சு அவளுக்கு சுவாரசியமாகத்தான் இருந்தது. சில பேரைப் போலக் கள்ளப்பார்வையும் இல்லை.

எனவே லேசாக முறுவலித்து "இந்தப் பைகள் விற்பனைக்கு இல்லை. நீங்களும் எதையாவது வாங்குங்கள் வாங்குகிற பொருளுக்கு ஏற்ப உங்களுக்கும் இலவசமாகவே கிடைக்கும்" என்றாள் இலகுவாக.

"அப்படியானால் இந்தப் பைக்காகவாவது, ஏதாவது வாங்கித்தான் ஆக வேண்டும்" என்று சுற்று முற்றும் பார்த்தவன் வரிசையாக அடுக்கி வைக்கப்பட்டிருந்த வீடியோ காசெட்டுகளிடம் போய் நின்றான்.

"உங்களிடம் 'மகாநதி ஷோபனாவின் நர்சரி ரைம்' காசெட் இருக்கிறதா? அத்தோடு ஏ.பி.சி.டி. கற்றுக் கொடுக்கிற மாதிரி வருமே அதையும் கொடுங்கள்."

ரைம் காசெட்! அவனுக்குக் குழந்தை இருக்கிறது. அதனால்தான் காலித்தனமான பார்வை இல்லை போலும்!

என்னவோ, கடைக்குள் ஒளி மங்கினாற்போலத் தோன்றியது. மின்சாரம் கம்மியாக வருகிறதோ என்று அவள் பல்பைப் பார்த்தபோது அவன் அவள் எதிரில் வந்து நின்றான்.

"இதற்கு எத்தனை பை தருவீர்கள்?" என்று அவன் இலகுவாகக் கேட்கவும் சௌமியா



முறுவலித்தாள். "இரண்டு காசெட்டுகளுக்கு இந்தப் பையைக் கொடுத்தால் உங்களுக்கு கட்டி வருமா?" என்று கேட்டாள்.

"ம்ம்ம்" என்று அவளை நேராகப் பார்த்தான், அவன். "சரியாச் சொல்வது என்றால் கட்டி வரத்தான் செய்யும். ஆனால் லாபம் இராது" என்று பிரியரஞ்சன் கணக்கிடவும் சௌமியா திகைத்தாள். இவனுக்கு இதில் உள்ள லாப நஷ்டக்கணக்கு தெரியும் போல இருக்கிறதே. தெரிந்து வைத்துக் கொள்ளத்தான் எல்லோரிடமும் இப்படிக் கேள்வி கேட்பான் போலும்.

அவளது திகைப்பைப் பார்த்து முறுவலித்து விட்டு "சரி உங்கள் லாபத்தைக் கெடுப்பானேன்? ஆங்கிலத்தில் வாய்ப்பாடு கற்றுக் கொடுக்கிற செட் வேண்டும். இரண்டு பிள்ளைகளும் கான்வெண்டில் படிப்பதால் அதுதான் புரியும். தமிழில் எளிமையான கதைகள் சொல்லுகிற மாதிரி இருந்தாலும் கொடுங்கள். இப்போது பைக்குக் கட்டி வருமா? என்று கேட்டான் அவன்.

இரண்டு பிள்ளைகளா... என்றுஎண்ணியவாறு காசெட்டுகளை பையிலேயே போட்டுக் கொடுத்தாள் சௌமியா.

பளீர் என்று புன்னகையோடு விடை பெற்றுச் சென்றான் பிரியரஞ்சன்.

பையைப் பெருமையாக மனைவியிடம் காட்டுவான். இந்தப் பைக்காக இத்தனை காசெட்டு களையும் வாங்கினேன் என்பானோ? அவள் சந்தோஷப்

படுவாளா? அல்லது ஏற்கனவே வீட்டில் இருக்கிறதே வீணாக ஏன் வாங்கினீர்கள் என்று சண்டை போடுவாளா?

பிரியரஞ்சனுடைய மனைவி எப்படி இருப்பாள் என்று சௌமியாவின் யோசனை ஓடியபோது, ஒரு வாடிக்கையாளரும், கூடவே அவளுடைய தந்தை தாமோதரனும் வந்துவிடவே, ஒருவாறு அவளும் நடப்புக்கு வந்து சேர்ந்தாள்.

ஒன்றாம் தேதி விற்பனைக்காக வாங்க வேண்டிய பொருட்களின் பட்டியல் இடும்போது அவளுக்கு மீண்டும் பிரியரஞ்சனின் நினைவு வந்தது. அவன் வாங்கிச் சென்றவைகளில் ஒன்றிரண்டு வகைக்கு இன்னும் ஒன்றுதான் இருந்தன.

அதைச் சொல்லிவிட்டு பிரியரஞ்சன் விசாரித்த விதத்தையும் சொல்லிச் சிரித்தாள் மகள்.

கூடச் சேர்ந்து நகைத்து விட்டு ''ஒரோருவர் வீட்டுக்கு ஒரு சாமான் வாங்குவதில் கூட எவ்வளவு கவனமாக இருக்கிறார், பார்! தினாவானால் கடைக்கு வாங்கிப் போடுவதைப் பற்றிக் கூடக் கவலைப்படக் காணோம். எல்லாவற்றுக்கும் கொடுத்து வைத்திருக்க வேண்டும் அல்லவா'' என்று பெருமூச்செறிந்தார் தந்தை.

'அண்ணன் இவனைப் போல இல்லையே' என்று தான் வருத்தப்பட்டது சௌமியாவுக்கு நினைவு வந்தது. அனால்அதை வாய் விட்டுச் சொல்லாமல் மனதினுள்ளேயே வைத்துக் கொண்டாள்.



அவள் ஏதாவது சொல்லி அது எப்படியேனும் அண்ணன், அண்ணி காதுக்கு எட்டி விட்டால் பெரும் வம்பாகிப் போகும். பெற்றவரையே பந்தாடுகிற தினகரன் தங்கையைச் சும்மா விடுவானா?

அதுவும், மூட்டிக் கொடுக்க அவன் மனைவி துடித்துக் கொண்டிருக்கையில்!

அத்தோடு சும்மாவே அப்பா மகனுக்கிடையே புகைந்து கொண்டிருக்கும் தீயை, அவள் வேறு விசிறி விடுவதா?

புத்தாண்டு விற்பனைக்காக வந்து இறங்கிய சரக்குகளைச் சரி பார்ப்பது அடுக்குவது, கிடைக்கும் மீதி நேரத்தில் மேலும் பல பைகளைத் தயாரிப்பது என்று சௌமியாவுக்கு நேரம் சரியாக இருந்தது. மணி வாசகத்துடைய மகளுக்கு குழந்தை பிறந்து, பேரனையும் மகளையும் வீட்டுக்கு அழைத்துச் செல்லும் வரை அவரும் லீவு எடுக்க வேண்டியிருந்ததால் மற்ற எல்லோருக்குமே அதிக வேலைதான்.

இதற்கிடையேயும், பிரியரஞ்சனுடைய மனைவியும், இருகுழந்தைகளும் எப்படி இருப்பார்கள் என்ற யோசனையும், சௌமியாவுக்குத் திடுமெனத் தோன்றும்.

பிரியரஞ்சனை, அவள் அடுத்து சந்தித்தது புது வருஷப் பிறப்பன்றுதான்.

## 4

புத்தாண்டுச் சலுகை என்று ஜனவரியிலும், கணக்குமுடிப்பது என்று மார்ச், ஏப்ரலிலும், ஆடிக்கழிவு என்று ஜூலை, ஆகஸ்ட்டிலும், தீபாவளி, கிறிஸ்மஸ் பண்டிகைத் தள்ளுபடி என்று அக்டோபர் தொடங்கி ஆண்டு முடியுமட்டும் வியாபார சமூகம் வாங்குவோரை ஊக்குவிக்க ஏதேனும் வகை செய்து கொண்டே இருப்பதுதான்.

அதில், புத்தாண்டுச் சலுகையாக உண்மையாகவே பத்து சதவீதம் கழிவு கொடுத்துப் பொருட்களை விற்பது. தாமோதரனின் வழக்கம். சில பெரிய நிறுவனத்தின் பெரிய பொருட்களில் இந்தப் பத்து சதவீதம் போனால் லாபமே இராதுதான். ஆனால் மற்ற பொருட்களும் சேர்ந்து அதிகம் விற்கும் என்பதாலும், புழக்கத்துக்கு, மொத்தமாகக் கைக்குப் பணம் வரும் என்பதாலும், தாமோதரன் இந்த விற்பனையைத் தொடர்ந்து நடத்தி வந்தார். அவர் அவ்வளவு நாள் வளர்த்து வந்த வாடிக்கையாளர்களில் பலரும் கூட, அவரது விலைக் கழிவின் உண்மைத் தன்மை அறிந்து அவரிடமே தொடர்ந்து வாங்கி வந்தனர்.

ஜனவரி ஒன்றாம் தேதி, காலை ஏழு மணி தொடங்கி நள்ளிரவு வரையிலும் இந்தச் சலுகை விற்பனை நடக்கும். தாமோதரன், தினகரனோடு,



மணிவாசகமும், சகாயமும், கூடவே சௌமியாவும் சாப்பிட நேரம் இல்லாமல் வேலை செய்வார்கள். சாமான்களைத் தேவைப்படும் போது தூக்கி எடுத்து வைப்பதற்காக நாள் கூலிக்கு இரண்டு பேரை அமர்த்துவார்கள். அப்போதுமே, அந்த மறுநாள் எல்லோருக்கும் அடித்துப் போட்ட மாதிரி அலுப்பாக இருக்கும்.

இந்த ஆண்டும், அதே அளவு உழைப்பு தேவைப்படும் என்பதால்தான் மகனது வரவைப் பற்றித் தாமோதரன் அவ்வளவு கவலைப்பட்டது.

அவனிடம் நேரில் கேட்கவும், அவருக்குத் தயக்கம். முகத்தில் அடித்தது போல முடியாது என்று விட்டால்? நயமாய்ப் பேசித் தன் வழிக்குத் திருப்பலாம் என்றால்! அவன் அவரிடம் நின்று பேசுவதே இல்லை. அவனாக ஏதோ அதிசயம் போலத் தொடர்ந்து இரண்டொரு வார்த்தை பேசினாலும், எங்கிருந்தோ, 'தினு' என்று அவன் மனைவியின் குரல் கேட்கும்.

அதற்கு மேல் அவனை நிறுத்தி வைக்கத் தாமோதரனுக்கே பிடிக்காது. அநாகரீகமாகத் தோன்றி விடும். அவன்தயங்கினால் கூட அவர் அகன்றுவிடுவார்.

மாமனாருடன் பேசும் போது கூப்பிடலாமா, என்ற நாகரீகம் மருமகளுக்கு இல்லையே என்று உள்ளூர வருத்தப்படுவார்.

திலகம் அப்பாவி, மகனிடம் நயந்து பேசி காரியம் சாதிக்கும் திறமை அவளுக்குக் கிடையாது. பெரும்பாலும், சமையலறையே தன் உலகமாக

புருஷனுக்கும் பிள்ளைகளுக்கும் இப்போது மருமகளுக்கும் பிடித்ததைச் செய்து போட்டு அவர்கள் சாப்பிடுவதைப் பார்த்து மகிழ்வதிலேயே அவள் திருப்தி அடைந்து விடுவாள்.

அளவு மீறிப் பையன் எடுத்தெறிந்து பேசும் போது மட்டும் கோபம் வரும். ஆனால் அதுவும் நிலைப்பதில்லை. 'அம்மா இன்று மாலைச் சிற்றுண்டிக்கு சோமாசி செய்யுங்கள். உங்கள் சோமாசி நன்றாயிருக்குமே' என்று மகன் சொல்லி விட்டால் போதும். உச்சி குளிர்ந்து வக்கணையாய் வாய்க்கு ருசியாக அதைச் செய்வதில் முழு மூச்சாய் இறங்கி விடுவாள்.

உறவு, நட்பு என்று யார் வந்தாலும் திலகத்தின் விருந்துபசாரம் சிறப்பாகவே இருக்கும்.

ஆனால், திலகத்தைப் பொறுத்தவரையில் வீட்டை நன்றாகப் பார்த்து கொள்ளுவாளே தவிர, கணவரின் தொழில், குடும்பத்துக்காக வருங்காலத்தைத் திட்டமிடல் போன்ற விஷயங்களில் அவளிடம் இருந்து தாமோதரனுக்கு எந்த உதவியும் கிடைத்ததில்லை, எனினும் சிலரைப் போல எதற்கும் 'ஙைஙை' என்றிராமல் வீட்டைத் திறம்பட நிர்வகிக்கிறாள் மனைவி என்பதே இதுவரையிலும் தாமோதரனுக்குப் பெருமைக்குரிய விஷயமாகத்தான் இருந்தது.

இப்போதுதான் முதன் முதலாகத் திலகம் இன்னும் கொஞ்சம் கெட்டிக்காரியாக இருந்திருக்கக் கூடாதா என்று அவருக்குத் தோன்றியது. நாசூக்காய்ப் பேச்சுக் கொடுத்து, மகன் மருமகள் மனதில் என்ன



இருக்கிறது என்றாவது அறிந்து வந்து அவரிடம் சொல்லலாமே!

கடையைப் பற்றி மட்டமாகவும், எடுத்தெறிந்தும் பேசும் மகன், அவனது எதிர்காலத்தில் சாப்பாட்டுக்கு என்ன செய்வதாக இருக்கிறான் என்று தெரிந்து கொள்வது மிக முக்கியம் ஆயிற்றே!

மகள் சௌமியா மூலம் எதையும் தெரிந்து கொள்ள முயற்சிப்பதும், சரிவரும் என்று அவருக்குத் தோன்றவில்லை. ஏனெனில் தன்னை விட அழகியான நாத்தனாரின் அருகில் நிற்கவே, ஆனந்திக்குப் பிடிக்காது. அப்படியிருக்க மனம் விட்டுக் கலந்து பேசுவது எப்படி?

தந்தையிடமே தினகரனைப் பேச விடாதவள், தங்கையிடம் மட்டும் பேச விட்டு விடுவாளா?

ஆனால் இதெல்லாம் பிற்பாடு பார்த்துக் கொள்ளலாம்.

ஒருநாள் ஓய்வு இருக்கும்போது, இரண்டு பேரையுமே உட்கார வைத்து நயமாய் நல்லபடியாகப் பேசி, ஒழுங்குபடுத்திக் கொள்ளலாம்.

ஆனால் இந்த ஒன்றாம் தேதி விற்பனை?

அதற்கு மகனின் உதவி கட்டாயம் வேண்டுமே? மகள் என்னதான், 'அண்ணன் வருவார்' என்று உறுதி சொன்னபோதும், அவருக்கு உள்ளூர உதைப்புதான்.

எனவே இரண்டு நாள் முன்னதாக தினகரனிடம் அது பற்றி மெல்லக் கேட்டார்.

''ம், ஒன்றாந்தேதி விற்பனையா?...'' என்றபடி மனைவியைப் பார்த்தான் அவன். பிறகு தந்தையிடம்

திரும்பி, ''வருவேன் அப்பா. ஆனால் காலையிலேயே விழித்துக் கிளம்புவது முடியாது. பத்து மணிக்கு மேல் வருகிறேன்'' என்றான் அவன்.

மகன் வருகிறேன் என்றதே நிம்மதியைத் தர, அதற்கு மேல் அப்போதைக்கு எதுவும் வேண்டாம் என்று தாமோதரன் கிளம்பி விட்டார்.

சொன்னது போலவே ஒன்றாம் தேதி பத்தரை மணியளவில் தினகரன் கடைக்குச் சென்றான். ஆனால் உழைக்க மனமில்லாததைக் காட்டும் விதமாக, ''நான் பில் போடுகிறேன் அப்பா!'' என்று குறிப்பாக அவன் சொன்னது தாமோதரனுக்குப் பிடிக்கவில்லை.

இதை நகர்த்தி அதைத் தூக்கி வைத்து என்று உடல் உழைப்புக்குத்தானே, ஆள் தேவை?

தினகரனைப் போன்ற ஓர் இளைஞன், அதைச் செய்யாமல் பில் போடுகிறேன் என்பதா? அதிலும், அவனை விடவும் வலிமை குறைந்தவர்களாக அவனுடைய தங்கையும் தந்தையும் இயன்ற வேலைகளைச் செய்து கொண்டு அங்கேயே இருக்கும்போது. இதற்கு இவன் வராமலே இருந்திருக்கலாம்.

ஆத்திரத்தை அடக்கிக் கொண்டு ''அதற்குத்தான் உன் தங்கையைக் கல்லாவில் உட்கார வைத்திருக்கிறேனே? சின்னப் பெண் அவளால் இதை எல்லாம் தூக்கக் கொள்ள முடியாதில்லையா? வா, இதைக் கொஞ்சம் நகர்த்தி வை. என்னாலும் முடியவில்லை. வயதாகிறது பார்'' என்று அவரும் குறிப்பாகவே 'உடல் வலு உள்ள நீ செய்ய வேண்டியது இதுதான். உட்கார்ந்து பில் போடுவது அல்ல' என்று சொல்லாமல் சொல்லி விட்டார்.



எரிச்சலோடு தங்கையைப் பார்த்த போதும், தந்தையின் பேச்சில் இருந்த நியாயத்தை மீற முடியாமல் அவர் அருகில் சென்றான் அவன்.

வேண்டா வெறுப்பாகத் தொடங்கிய வேலை தான் என்றாலும் விற்பனை ஆக ஆக அவனையும் உற்சாகம் தொற்றிக் கொண்டது. சுமார் இரண்டரை மணிக்கு ஆனந்தி டெலிஃபோன் செய்து கூப்பிடும் வரை மற்றவர்களைப் போலவே தினகரனுக்கும் இடையில் ஒரு காஃபிக்கு மேல் உணவைப் பற்றிய நினைவு கூட வரவில்லை.

ஆனந்தியின் பேச்சைக் கேட்டு முடித்த பிறகோ, அவனால் அங்கே நிற்கவே முடியவில்லை.

''நான் வரவில்லையே என்று ஆனந்தியும் இன்னும் சாப்பிடவில்லை அப்பா. நான் உடனே கிளம்புகிறேன். பாவம், அவளுக்கு வேளை தப்பிச் சாப்பிட்டால் தலைவலி வந்துவிடும். நான் போகிறேன்'' என்று துடித்தான்.

டெலிஃபோனில் பேச வருமுன் அவன் கவனித்துக் கொண்டிருந்த வாடிக்கையாளரைத் திரும்பிப் பார்க்கக்கூட, அவனுக்குத் தோன்றவில்லை. கூடவே, அங்கிருந்த யாருமே தந்தை, தங்கையுமே சாப்பிடவில்லை என்பது அவனுக்கு நினைவு இருந்த மாதிரியும் தெரியவில்லை.

''ஏய், இருடா, பாப்பாவும் சாப்பிட வில்லையே. அவளையும் கூட்டிப்போ'' என்றார் தாமோதரன்.

அவனது பொறுமையிழந்த முகத்தைப் பார்த்துவிட்டு, ''எனக்குப் பசியில்லை அப்பா காஃபி போதும். அண்ணன் போகட்டும். நீங்கள் போங்கள், அண்ணா'' என்று சௌமியா அவசரமாகச் சொன்னாள்.

பில் போடுவதற்காக இன்னும் இரண்டு பேர் வரிசையில் நின்றார்கள். அவர்களை விட்டுவிட்டுப் போகவும் முடியாது. முடித்து விட்டு அவனோடு சேர்ந்து போய்ச் சாப்பிடுவதற்குப் பசியுடன் இருந்து விடுவது மேல் என்பது அவள் கருத்து. வழியிலேயே வெடித்து விடுவான். வீட்டில் ஆனந்தியும் ஜாடைப் பேச்சிலேயே வறுத்தெடுத்து விடுவாள்.

தங்கை மறுத்துச் சொன்னதுமே, அதுதான் சாக்கு என்று தந்தையின் பக்கம் திரும்பிக் கூடப் பாராமல் தினகரன் கிளம்பி விட்டான்.

''சாப்பிட்டுவிட்டுச் சீக்கிரமாக வந்துவிடு தினகர்'' என்று அவர் கூறியதற்கு பதிலே கிடையாது.

''என்ன சார், எனக்கு யார் எடுத்துக் காட்டுவது?'' என்று தினகரன் இடையிலே விட்டு விட்ட வாடிக்கையாளர் ஆத்திரப்பட்டார்.

அவனுக்கு டெலிஃபோன் என்றதும், போய் வரட்டும் என்று பொறுமையாக காத்திருந்தவர்தான். ஆனால் அவன் மீண்டும் வந்து தன்னைக் கவனியாமல் சென்றதும், அவருக்குக் கோபம் வந்துவிட்டது.



ரசீதை வேகமாக எழுதிப் பணத்தை வாங்கி எண்ணியவாறே, ''இதோ ஒரு நிமிஷம். இதோ வந்து விடுகிறேன் சார்'' என்று நயந்த குரலில் கூறியவாறே மின்னல் விரைவுடன் மீதிப் பணத்தை எடுத்து ரசீதுடன் சேர்த்து முன்னே நின்றவரிடம் கொடுத்தாள், சௌமியா.

இன்னும் ஒரு பில் போட வேண்டும்.

அதே சமயம், தாமோதரனும், ''ஒரு நிமிஷம் பொறுங்கள் சார். இதோ வருகிறேன்'' என்றுதான் சொல்லிக் கொண்டிருந்தார். ஆனால் அவராலும் தன் இடத்திலிருந்து நகர முடியாத நிலை.

வாடிக்கையாளருக்கோ ஆத்திரம். ''என்ன சார், எல்லாருமா சேர்ந்து விளையாடுகிறீர்களா? அவன் என்னடா என்றால் இடையில் விட்டுவிட்டு பெண்டாட்டிக்கு ஊட்டப் போய் விட்டான். நீங்களும் இருந்த இடத்தை விட்டு அசையாமல், 'இதோ வாரேன். இதோ வாரேன்' என்று கீறல் விழுந்த பழைய காலக் கிராமஃபோன் ரிக்கார்டு மாதிரி, ஒரே வரியையே பாடிக் கொண்டிருக்கிறீர்கள். ஏய், கிளம்புடி. ஊரிலே, இந்தக் கடையை விட்டால் வாங்கவே முடியாது என்று எண்ணம். ஆயிரம் பேர் சலாம் போட்டுக் கொண்டு எடுத்துத் தருவான்'' என்று பொரிந்து கொட்டியவாறு எதையும் வாங்காமலே கிளம்பலானார்.

அவருக்கு இந்தக் கடையில் எல்லோருமாகச் சேர்ந்து தன்னை அவமதிக்கிறார்கள் என்று தோன்றிவிட்டது.

அவரையும் குற்றம் சொல்லுவதற்கில்லை. இந்த அண்ணன் மட்டும் இப்படி இடையிலே

விட்டுவிட்டுக் கிளம்பாமல் இருந்திருந்தால்? ஃபோனில் பேசிவிட்டு வருவதாக அவன் சொன்னபோது, தலையை ஆட்டிவிட்டுச் சும்மா இருந்தவர்தானே.

அவர் பார்த்துக் கொண்டு இருந்தது, பெரிய சைஸ் மூன்று கதவு ஃப்ரிட்ஜ், நாற்பதாயிரம் விலை. இந்தக் கழிவு கொடுத்தால்கூட, இரண்டாயிரம் அப்படியே நிற்கும். அத்தோடு ஸ்டாண்டு, மேல் விரிப்பு, கைப்பிடி உறை என்று வாங்குவதெல்லாம் பாதிக்குப் பாதி மிச்சம்.

வருத்தத்துடன் அடுத்த பில்லுக்குரிய பணத்தை வாங்கியபடி, ''சார் கொஞ்சம்...'' என்று தொடங்கியவள், பாதியிலேயே வாயை மூடிக் கொண்டாள். ஏனெனில் அடுத்தொருவர் பில் போட வந்திருந்தார்.

என்னவோ சொல்லுகிறாளே, என்று நின்றவருக்கு இன்னமும் அதிகக் கோபம் வந்தது. ''அடச்சீ, வாடீ என்றால் எருமை மாடு மாதிரி நிற்கிறாயே'' என்று மனைவியிடம் எரிந்து விழுந்தார்.

ஆணாய்ப் பிறந்தவர் கோபம் வந்தால் மனைவியிடம் அன்றி வேறு யாரிடம் காட்டுவார்? பாவம் இத்தனை பேர் நடுவில் அந்த அம்மாவுக்கு வேறு அவமானம்.

எப்படியும் இவர் இனி இந்தக் கடைப் பக்கம் தலை வைத்துக் கூடப் படுக்கப் போவதில்லை என்று எண்ணினாள் சௌமியா.



ஒரு நல்ல வாடிக்கையாளரை இழக்கிறோம் என்ற வருத்தத்துடன் தலை குனிந்து, அவள் கையிலிருந்த ரூபாய் நோட்டுகளை எண்ணத் தொடங்கியபோது, ''பெரிய ஃப்ரிட்ஜ்தானே சார்? இதோ, இந்தப் பக்கம் வாருங்கள். ப்ளீஸ் வாருங்கள் சார். ஏதோ சிறு அசந்தர்ப்பம் தினகருடைய மனைவிக்கு ஆரோக்கியம் சற்று குறைவு. பெருந்தன்மையோடு மன்னித்து விட்டு விடுங்கள். பாருங்கள் சார். இதோ மூன்று கதவுகள் சார். ஒவ்வொரு பகுதிக்கும் தனித்தனியே ரெகுலேட்டர். ஒரு கதவைத் திறந்தாலும் அடுத்த பகுதியில் உள்ள குளிர்ச்சி குறையாமலே இருக்கும். ஒன்றாம் தேதி, விற்பனை சார். அல்லது இதற்கு நீங்கள் என்ன விலை கொடுத்திருக்க வேண்டும், தெரியுமா? பாருங்கள் சார். மூன்று பெரிய நிறுவனங்களின் தயாரிப்புகள் இருக்கின்றன. நன்றாகப் பார்த்து பிடித்த வண்ணத்தில் வாங்குங்கள்'' என்று சரளமாகப் பேசி வாடிக்கையாளரை வசியம் செய்த குரல் ஒலிக்கத் தொடங்கியதும், ஆச்சரியத்துடன் விழி விரித்து நோக்கினாள் சௌமியா.

பார்த்ததும், பிரமித்தாள். நாலு நாள் முன்பு வந்து ஏதேதோ விசாரித்துவிட்டு, வெறுமனே 'ஆடியோ கேசட்' வாங்கிப் போன, பிரியரஞ்சன்.

## 5

பிரியரஞ்சனை அப்போது பார்த்ததே, சௌமியாவுக்கு அதிசயம் என்றால், அவன் பேச்சைக் கேட்கக் கேட்க, அவளது பிரமிப்பு மேலும் அதிகமாயிற்று. இவன் விற்பனையில் உதவ வந்திருக்கிறான். இந்த நேரத்து விற்பனையில், மற்றவர்கள் உதவுவது ஒன்றும் பெரிய அதிசயம் அல்ல. அப்பாவுடைய நண்பர்கள் அண்ணனுடன் பயின்றவர்கள் தேவைப்படும்போது எல்லோருமே அவ்வப்போது செய்வார்கள்தான்... ஏன் சௌமியாவுடைய தோழி ஒருத்தி கூட, ஒரு திடீர் கூட்டத்தின்போது காசட் போட்டுக் காட்டி விற்றுக் கொடுத்திருக்கிறாள். கடைச் சாமான்கள் எல்லாவற்றிலும் விலை ஒட்டியிருக்கும் என்பதால், விலையைச் சொல்லச் சங்கடமும் இராது.

ஆனால் இவன் எப்படி இங்கே இப்போது வந்தான்?

'தினகர்' என்று ஏதோ சொன்னானே. அண்ணன் பெயர் இவனுக்கு எப்படித் தெரியும்?

அவள் யோசிக்குமுன், ''கொஞ்சம் சீக்கிரம்மா'' என்று ரசீது கேட்டுப் பணம் கொடுத்தவர் அவசரப்படுத்தினார்.

எனவே, மலர்ந்த விழிகளால் பிரியரஞ்சனை ஒரு தரம் நன்றியுடன் நோக்கிவிட்டு, சௌமியா தன் வேலையில் ஈடுபட்டாள்.



அந்த வாடிக்கையாளர், ஃபிரிட்ஜை வாங்க முடிவு செய்து அதற்குரிய பணத்தை எடுத்துக் கொடுக்க, அதை வாங்கி எண்ணியபடியே நன்றி சொல்ல அந்தப் பிரியரஞ்சனைத் தேடினால் அவன் இன்னொருவருக்கு சலவை இயந்திரத்தைக் காட்டிக் கொண்டிருந்தான்.

இன்னொரு தரம், தாமோதரனே மேல் தட்டிலிருந்து மிக்ஸியை எடுத்துத் தருமாறு அவனிடம் கேட்டுக் கொண்டிருந்தார்.

அதற்குள் தாமோதரனுடைய நண்பர்கள் இருவர் வேலை முடித்து வந்து சேர்ந்தனர்.

அவர்கள் வருவதும், உதவுவதும் கூட வழக்கம்தான். கொடுக்கல் வாங்கல் அடிப்படையில் தாமோதரனும் அவர்களை வெறும் கையோடு அனுப்பமாட்டார்.

சற்று பொறுத்துப் பார்த்தால் பிரியரஞ்சன் வந்தது போலவே ஓசைப்படாமல் காணாமல் போயிருந்தான். அவன் சமயத்தில் செய்த உதவிக்கு நன்றி தெரிவிக்கவே இல்லையே என்று சௌமியாவுக்கு ரொம்பவே உறுத்தியது.

அவளைப் பற்றி மட்டமாக நினைப்பானோ?

ஆனால் இப்போது அதற்காக அவள் செய்யக் கூடியது ஒன்றும் இல்லை.

பெருமூச்சை அடக்கிக் கொண்டு வேலையில் மூழ்கினாள் அவள்.

மதியம் தூங்கி விழித்து ஒருவாறு தினகரன் மீண்டும் கடைக்கு வந்தபோது இரவாகி விட்டிருந்தது. கிட்டத்தட்ட எட்டு மணிக்கு சாவகாசமாக வந்த

மகனிடம் தாமோதரனுக்கு மிகுந்த கோபம்தான். ஆனால் அதைக்காட்ட இது இடமோ, நேரமோ அல்ல என்று ஆத்திரத்தை அடக்கிக் கொண்டு சாதாரணமாகக் காட்டி அவனை வேலை ஏவினார்.

இரவு வீடு திரும்ப வேண்டிய நண்பர்களை வழியனுப்பிவிட்டு தாமோதரன் திரும்பி வருமுன், 'மைக்ரோ ஓவனைப் பார்த்துக் கொண்டிருந்த வாடிக்கையாளரை அப்படியே விட்டுவிட்டு ஓர் அசட்டு நகைப்புடன் தினகரன் தங்கையின் அருகில் வந்தான்.

''என்ன சௌமிக் குட்டி, இன்றைய விற்பனை எப்படி? சுமார் எவ்வளவுக்கு விற்றிருக்கும்?'' என்று சற்று தாழ்ந்த குரலில் வினவினான்.

கடமை உணர்வோடு நாள் முழுவதும் கடையில் இருந்து விற்பனையைக் கவனித்திருந்தால் அவளிடம் கேட்கத் தேவையே இல்லை. பைசாக் கணக்கு வரை துல்லியமாகத் தெரியாவிட்டாலும் குத்து மதிப்பாக எவ்வளவு விற்றிருக்கும் என்று நிச்சயமாகத் தெரிந்திருக்கும். இப்படி அப்பாவுக்குத் தெரியாமல் தாழ்ந்த குரலில் திருட்டுத்தனமாக என்ன கேள்வி இது?

'சௌமிக் குட்டி' என்று நைச்சியம் வேறு.

எல்லாமே சௌமியாவுக்கு எரிச்சலூட்டின.

ஆனால், அண்ணனிடம் அதைக் காட்டவும் அவளுக்குப் பிடிக்கவில்லை. இதே அண்ணன், அவளிடம் உண்மையான பிரியத்தோடும் பழகியவன் தானே!

எனவே ''நான் முழு நேரமும், கல்லாவில் இருக்கவில்லை, அண்ணா. அத்தோடு வரவர வாங்கிப் போடுவதோடு சரி. கூட்டிக் கணக்கிட்டுப் பார்க்கவே இல்லை'' என்று மழுப்பி விட்டாள்.



இன்னும் அவன் எதையாவது கேட்டு விடக்கூடாதே என்று ''அண்ணா, அந்த ஆள் முகம் சுளிக்கிறார், பாருங்கள். அப்பாவிடம் போய்ப் புகார் கொடுக்குமுன், சீக்கிரமாகப் போய்க் கவனியுங்கள்'' என்று அவனை அனுப்பி வைத்தாள்.

பணத்தைப் பற்றி இவன் ஏன் கேட்கிறான் என்று மனதுள் குடைந்தது. ஏனென்றால் கடையின் வரவு செலவு பற்றி கடந்த ஓர் ஆண்டு காலமாக அவன் அக்கறை காட்டியதே இல்லை. இன்று மட்டும் ஏன் கேட்டான்?

ஒருவேளை அதிக விற்பனையால் கிடைத்திருக்கும் பெரிய தொகை எவ்வளவு என்று அறிந்து மகிழ்வதற்காகக் கேட்டானோ? இன்று வழக்கத்தை விட, அதிகமாகவே விற்றிருந்தது. கிட்டத்தட்ட எட்டு லட்சங்கள் சேர்ந்திருந்தன. சொல்லியிருந்தால் சந்தோஷப்பட்டிருப்பானோ?

அடடா, சொல்லாமல் போனோமே. கொஞ்சம் மனம் உருகியபோதும், இந்தப் பண விவகாரங்களை எல்லாம் அப்பாவும் பிள்ளையுமாகவே பேசிக் கொள்ளட்டும் என்று முடிவு செய்து விட்டு சௌமியா தன் வேலையைத் தொடர்ந்தாள்.

இரவில் கடையை உட்புறமாகப் பூட்டிக் கொண்டு பணத்தை எடுத்துப் பெட்டியுள் வைத்தபோது, தயக்கத்துடன் ''அப்பா'' என்று தினகரன் அழைத்தான்.

தாமோதரன் கேள்வியாய் நோக்கவும், ''கொள்முதல் செய்ததற்குப் பணம் இப்போது பட்டுவாடா செய்யாதீர்கள்'' என்று எங்கோ பார்த்தபடியே என்றாலும் முழுசாகச் சொல்லி முடித்தான் அவன்.

திகைப்புடன் மகனைக் கூர்ந்து பார்த்தார், தாமோதரன்.

பிறகு ''ஏனப்பா, அப்படிச் சொல்லுகிறாய்? ஒருவேளை... இல்லையே... நாளைக்கு வெள்ளிக்கிழமை கூட இல்லையே. ஏன் கொடுக்க வேண்டாம் என்கிறாய்?'' என்று மகனிடம் வினவினார்.

''வந்து... 'இப்போது' என்றால், நாளைக்கு மட்டும் அல்ல அப்பா. இந்த முறை கொஞ்ச நாள் தள்ளிக் கொடுங்கள்'' என்றான் மகன்.

மகனைக் கூர்ந்து நோக்கியபடி, ''எத்தனை நாள்?'' என்று கேட்டார் தந்தை.

''அது... ஒரு மூன்று நான்கு மாதம் தள்ளிக் கொடுங்களேன், அப்பா.''

சௌமியா திகைப்புடன் பார்க்க, சில கணங்கள் தாமோதரனும் ஒன்றுமே பேசவில்லை. தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு இருந்தார் போலும்.

பிறகு அமைதியான குரலிலேயே ''அது நன்றாக இருக்குமாப்பா? பேருக்கு ஒரு சிறுதொகையை வாங்கிக் கொண்டு இவ்வளவு சாமான்களை உடனே திருப்பி விடுவோம் என்று நம்பித்தானே தந்திருக்கிறார்கள். நாளைக்கே, பாக்கித் தொகையைச்



செலுத்தாவிட்டால் நம் நாணயம் என்ன ஆகும்?'' என்று கேட்டார்.

''பெரிய நாணயம். அரசாங்கங்களே வாக்கு மாறுகிறார்கள்.''

''இருக்கலாம். ஆனால் நான் அப்படி மாற மாட்டேனப்பா'' என்று சுருக்கமாக முடிக்க முயன்றார் தாமோதரன்.

ஆனால் மகன் கெஞ்சத் தொடங்கினான். ''அப்பா, நான் ஒன்றும் பணத்தைத் திருப்பிக் கொடுக்கவே வேண்டாம் என்று சொல்லவில்லை. ஒரு... ஒரு மூன்று மாதங்கள் கழித்துக் கொடுங்கள், என்கிறேன். அவ்வளவுதான். அப்பா, ப்ளீஸ்.''

''ம்ம்...? அந்த மூன்று மாதங்களும் இந்தப் பணத்தை எந்த பாட்டிலில் ஊறுகாய் போடுவது?''

மீண்டும் ஒரு சிறு அமைதி.

அப்பாவும் மகனும் பேசாது நோக்க, எதையோ சொல்ல, தினகரன் 'தம்' பிடித்துத் தைரியத்தைக் கூட்டிக் கொண்டிருப்பது நன்றாகத் தெரிந்தது.

அண்ணி ஆனந்தியின் பேச்சுகளை எண்ணிப் பார்க்கும்போது சௌமியாவுக்கு உள்ளூரப் படபடப்புதான். ஆனால் தந்தைக்கு முந்திக்கொண்டு பேசக் கூடாது என்று தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு பேசாதிருந்தாள். ஆனால் அண்ணன் அந்த அளவுக்கு யோசனையற்றவனா?

அப்படித்தான் என்று தினகரன் நிரூபித்தான்.

எச்சில் விழுங்கித் தொண்டையைச் சரிப் படுத்திக் கொண்டு, ''அந்தப் பணத்தை என்னிடம்

கொடுங்கள் அப்பா. மூன்று மாதத்திற்குள்ளாகத் திருப்பிக் கொடுத்து விடுகிறேன்'' என்று கூறினான்.

''ம்ம்? அது என்னப்பா, புது மாதிரித் தொழில்? மூன்றே மாதங்களில் முதலீடு செய்த தொகையை, அப்படியே லாபமாகத் திருப்பித் தரக்கூடிய தொழில்? 'பைசாவுக்கு பைசா' என்பதைவிட, அதிகமாக இருக்கிறதே?''

அறியாதவர் போன்று அவர் கேட்ட விதத்தில் தினகரனுக்கு உற்சாகம் கரை புரண்டுவிட்டது. ''பைசாவுக்கு பைசா என்னப்பா, பிசாத்து.. பைசாவுக்கு பத்து ரூபாய் பிய்த்துக் கொண்டு கொட்டும். அதனால்தான் முதல் செலவுக்காக இந்தப் பணத்தைக் கேட்கிறேன்'' என்றான் பெருமையாக.

''ம்ம். முதல் செலவா? அப்படியானால் இதற்கு மேலும் செலவு இருக்கிறது என்று சொல்லு!''

''ஆமாம்பா. இது பாதிக்குக்கூட வராது. ஆனால் அதைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம். முதல் செலவைச் செய்து விட்டோமானால், போட்டி போட்டுக்கொண்டு கடன் தர, ஆட்கள் இருக்கிறார்கள்'' என்று மேலும் பெருமைக் குரலிலேயே தினகரன் தெரிவித்தான்.

கடன்!

உதட்டைப் பற்களால் அழுத்தியபடி சௌமியா நிற்க, ''கடனாப்பா? ரொம்ப சரி. ஆனால் கடன் தர, ஏதாவது ஈடு காட்டச் சொல்வார்கள் இல்லையோ?'' என்று புரியாதவர் போலவே கேட்டார் பெற்றவர்.



அந்தப் பாவனையில் ஏமாந்து, ''ஈடு காட்டத்தான் நம்ம வீடு இருக்கிறதேப்பா?'' என்றான் மகன், சர்வ சாதாரணமாக. ''நாம் என்ன சொத்து பத்து இல்லாதவர்களா?''

''நம்ம வீடு? அதாவது இந்தக் கடையின் வருமானத்திலிருந்து நான் கட்டிய வீட்டைச் சொல்லுகிறாயா?''

''என்னப்பா கேள்வி இது? நம்மிடம் வேறு எத்தனை வீடு இருக்கிறதாம்? தாத்தாதான், நமக்கு ஒன்றுமே வைத்துவிட்டுப் போகவில்லையே. எல்லாம் நீங்கள் சம்பாதித்ததுதானே. நீங்கள் கட்டியதும் இந்த ஒரு வீடு தானே.''

''தப்புதான்'' என்றார் பெற்றவர். ''இன்னும் நாலைந்து வீடுகளைக் கட்டிப் போட்டிருந்தால் வரிசையாக ஈடு காட்டிக் கடன் வாங்க உனக்கு வசதியாக இருந்திருக்கும். சாரிப்பா, மன்னித்துக் கொள்.''

அண்ணன் வாங்கிக் கட்டிக் கொள்ளப் போகிறான்.

அவன் பேசுகிற விதம் தப்பு என்பதோடு இதைப் பேசுகிற நேரமா, இது?

காலையிலேயே விழித்துக் கடைக்கு வந்து இந்த நள்ளிரவு வரை கடுமையாக உழைத்ததற்கு வீட்டுக்குப் போய் 'அப்பாடா' என்று படுத்துத் தூங்கியிருக்க வேண்டும். சௌமியாவுக்கே, அந்த அளவு அசதியாக இருந்தது.

அவளைவிட, முப்பத்தேழு வயது மூத்தவர் தந்தை. அறுபதை நெருங்கிக் கொண்டிருப்பவர். அவருக்கு எவ்வளவு களைப்பாக இருக்கும்.

பகலில் நன்றாகச் சாப்பிட்டுப் படுத்துத் தூங்கிவிட்டு மற்றவர்களைப் பற்றிய கவலையே இல்லாமல் எப்படிப் பேசுகிறான். அவரிடம் பணம் கேட்கவும் வாய் வருகிறதே.

சொல்லிக் கொடுத்த வார்த்தைகள் என்பது தெரியத்தான் செய்கிறது.

ஆனால் என்னதான் சொல்லிக் கொடுத்த வார்த்தைகள் என்றாலும், அதைச் சொல்லுமுன், சுய புத்தியைக் கொஞ்சமேனும் பயன்படுத்த வேண்டாமா?

தந்தைக்குக் கோபம் ஏறிக் கொண்டிருப்பது அவளுடைய அண்ணனுக்குப் புரியாவிட்டாலும், சௌமியாவுக்குப் புரிந்தது. ஆனால் எல்லோரையும் விடச் சின்னவளாக, அதிலும் குடும்பத்தின் கடைக்குட்டியாக இருந்து கொண்டு பெரியவர்கள் பேச்சில் குறுக்கிட்டு அந்தப் பேச்சைத் தடுத்து நிறுத்துவதும் அவளுக்குச் சரியாகப் படவில்லை.

எப்படியும் அண்ணனின் இந்தப் போக்கு தடுத்து நிறுத்தப்பட வேண்டியதுதான். அதற்கு இதுதான் நேரம் என்று தந்தை நினைத்திருக்கக்கூடும். இப்படி அவனாக வாய் திறந்து தொடங்கட்டும் என்றே காத்திருந்தாரோ, என்னவோ?

அம்மா, அண்ணி, இருவர் குறுக்கீடும் இன்றிப் பேசக்கூட எண்ணியிருக்கலாம்.



ஓசைப்படாமல் பின்னணியில் ஒதுங்கி ஒரு நாற்காலியில் உட்கார்ந்தாள், சௌமியா.

தந்தையின் குரல் வேறுபாட்டைக் கொஞ்சம் உணர்ந்து ''என்னப்பா இப்படிச் சொல்லுகிறீர்கள்? ஈடுகாட்ட வழியில்லாமல் அலைகிற தேவை நமக்கு இல்லை என்றேன். அதில் என்ன தப்பு?'' என்று கேட்டான் தினகரன்.

''என் இடத்தில் நீ இருக்கும் போதுதான், அதில் என்ன தப்பு என்று உனக்குப் புரியும். ஆனால் நீ செய்ய விரும்புகிற தொழில் என்னவென்று இன்னமும், நீ சொல்லவே இல்லையேப்பா'' என்றார் தாமோதரன்.

எதையோ நினைவு படுத்திக் கொள்பவன் போலச் சற்று யோசித்துவிட்டு தினகரன் தொடங்கினான். ''நம் நாட்டில் இந்தத் தொழிலைப் பற்றி ஒரு தவறான அபிப்பிராயம் இருக்கிறதப்பா. அதனால் எடுத்த எடுப்பில் எதிர்மறையாக எதுவும் சொல்லிவிடாமல் நான் சொல்வதைத் திறந்த மனதோடு கவனித்துக் கேளுங்கள்'' என்று முகவுரையின் பின் சொன்னான். ''அப்பா, நான் சின்னத் திரைக்கு ஒரு மெகா தொடர் தயாரிக்கலாம் என்று இருக்கிறேன்'' என்று விஷயத்தைப் போட்டு உடைத்தான்.

தாமோதரன் ஒன்றுமே சொன்னாரில்லை.

சற்று பொறுத்துப் பார்த்துவிட்டு, ''என்னப்பா, ஒன்றுமே சொல்லாமல் இப்படிச் சும்மா நின்றால் என்ன அர்த்தம்?'' என்று ஆத்திரப்பட்டான் மகன்.

''நீதானேப்பா, அவசரப்பட்டு எதையும் சொல்லக்கூடாது என்றாய்?''

"எதிர்மறையாகச் சொல்ல வேண்டாம் என்றுதானே சொன்னேன்?"

"அதனால்தான் பேசாமலே இருந்தேன்" என்றார் தந்தை சிறு ஏளனத்துடன்.

"அப்பா."

ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டு உட்கார்ந்து கொண்டு, "நீயும் உட்கார்" என்று சற்று அழுத்தமான குரலில் தாமோதரன் பணிக்க, மீற மாட்டாமல், அவனும் அமர்ந்தான்.

தந்தை குறிப்பாகச் சொன்ன பதிலில், அவன் 'ஆடி'ப் போய் இருப்பது நன்றாகவே தெரிந்தது.

## 6

கை மறைவில் ஒரு கொட்டாவியை வெளியேற்றிவிட்டு, சௌமியாவும் தந்தையைப் பார்த்தாள்.

சோர்வுடன் அவர் அமர்ந்திருந்த விதமே, அவளுக்கு அவளுடைய அண்ணன் மீது கோபத்தை ஏற்படுத்தியது. இந்த நேரத்தில் அப்பாவுக்கு உதவியாக இருப்பதை விடுத்து இவன் பிரச்சினையை அல்லவா கொண்டு வருகிறான்.

தினகரன் தவிப்புடன் நோக்க, ஒரு பெருமூச்சுடன் தாமோதரன் தொடங்கினார். "பாரப்பா, இந்த சின்னத்திரை, வெள்ளித்திரை எல்லாம் அதன் முன் உட்கார்ந்து பார்த்திருக்கிறோமே தவிர, மற்றபடி நாம்



சற்றும் அறியாத துறை..." என்றவரை இடைமறித்து, தனயன் பேசினான். "ஏன் அப்பா, நாம் எல்லாம் பிறக்கும் போதே நடக்கத் தெரிந்து கொண்டா பிறந்தோம்? அறியாத விஷயம் என்று சும்மா படுத்துக் கொண்டேயா இருந்து விட்டோம்? முயன்று பிடித்து நடக்கவில்லை? இதையும் அப்படித் தெரிந்து கொண்டால் போகிறது?" என்று படபடத்தான்.

இந்தப் பதிலை எதிர்பார்த்தவர் போலத் தாமோதரன், லேசாக முறுவலித்தார். "முயன்று தானப்பா நடந்தோம். ஆனால் அந்த முயற்சியில் எத்தனை தரம் விழுந்திருப்போம்? அந்த முயற்சியும் நாமாகச் செய்ததுதான். சமாளித்து எழுந்ததும் நாமாகச் செய்ததுதான். யார் உதவியைக் கொண்டும் செய்ததில்லை."

புருவம் சுருக்கிக் கவனத்துடன் கேட்டுக் கொண்டிருந்த தினகரனின் முகம் வெளுத்தது. "என்னப்பா சொல்லுகிறீர்கள்? பணம் தர மாட்டீர்களா? அப்புறம் நான் என்ன செய்யட்டும்? முதல் வேலையை எப்படித் தொடங்க முடியும்? ஆனந்தி என்ன சொல்லுவாள்?" என்று திகைத்துத் திணறினான்.

முகம் கடுக்க, ஏதோ சொல்ல வாயெடுத்துவிட்டு தாமோதரன் அதை அடக்கிக் கொண்டார்.

அவர் ஒன்றும் சொல்வதாக இல்லை என்று தெரியவும், "என்னப்பா, நான் உங்கள் மகன். ஒரே மகன். உங்களுடைய ஒரே வாரிசு. எனக்குத் தராமல் வேறு யாருக்குக் கொடுக்கப் போகிறீர்கள்? நான் உருப்படுவதற்கு ஒரு வழி கிடைத்திருக்கிறது. அதை

கெடுக்காதீர்கள் அப்பா, ப்ளீஸ்'' என்று கெஞ்சினான் மகன்.

லேசாகத் தலையசைத்து: ''நிறையத் தப்பு எண்ணங்கள் வைத்திருக்கிறாய், தினா. எனக்கு மூன்று பிள்ளைகள். மூவரும் எனக்குச் சமம்தான். மூவரையும் நன்றாகப் படிக்க வைத்திருக்கிறேன். உனக்கும் அருணாவுக்கும் நல்லபடியாகத் திருமணம் செய்து வைத்திருக்கிறேன். இன்னும் சௌமிக்குச் செய்ய வேண்டியது மட்டுமே பாக்கி இருக்கிறது. அதற்குச் சேர்ப்பது தவிர. நான் யாருக்கும் எந்தக் குறையும் வைக்கவில்லை'' என்று தாமோதரன் அமைதியாகவே கூறினார்.

முகம் சிவக்க, ''மூன்று பேரும் சமமா? நீங்கள் செத்தால் கொள்ளி போட வேண்டியவன் நான்தான். நினைவிருக்கட்டும்'' என்று கண்டபடி கத்தலானான் தினகரன்.

பணம் இல்லாமல் போனால் பொண்டாட்டி இடிப்பாளே, என்ற கவலை அவனுக்கு.

''அண்ணா!'' என்று சௌமியா பதறி எழும்போதே, ''மின்சாரச் சிதையில் வைத்தால் கொள்ளி போடும் அவசியமே இல்லை தம்பி'' என்றார் தாமோதரன்.

''என்னப்பா நீங்களும் இப்படிப் பேசுகிறீர்கள்?'' என்று அழுது விட்டாள், சௌமியா.

தாமோதரன் தலையைத் திருப்பிக் கொண்டு உட்கார்ந்திருக்க, ''அண்ணா நீங்கள் இப்படியெல்லாம் அப்பாவிடம் பேசக்கூடும் என்று நான் கனவில் கூட



நினைத்தது இல்லை. என்ன பேச்சண்ணா இது?'' என்று கண்ணீருடன் அண்ணனைக் கேட்டாள்.

பேச்சு வேகத்தில் சொல்லிவிட்ட வார்த்தைகளை எண்ணித் தினகரனும், விதிர் விதிர்த்துப் போயிருந்தான். எனவே சட்டென்று முகத்தை மூடிக் கொண்டான், அவனும் அழுதுவிட்டான்.

வீட்டில் ஆண் பிள்ளையான அவனது முக்கியத்துவம் குறித்து அவன் மனைவி பெரிதாக எடுத்துச் சொல்வதைக் கேட்கும்போது அவனுக்கும் பெருமையாக இருக்கும். ஆனால் அதையே அவனுடைய தந்தையிடமே சொன்னது அவனையும் உலுக்கிவிட்டது.

எனவே எழுந்து தாமோதரனின் அருகில் வந்து மண்டியிட்டு அவர் கையைப் பற்றி ''என்னை மன்னித்து விடுங்கள் அப்பா. எனக்கு எப்போதுமே மூளை கொஞ்சம் கட்டைதானே? யோசியாமல் உளறி விட்டேன். தயவு பண்ணி, என்னை மன்னித்து விடுங்கள். ப்ளீஸ்ப்பா'' என்று அவரிடம் மன்னிப்புக் கேட்டான்.

''சரி சரி விடுப்பா. துணியெல்லாம் அழுக்காகி விடும். எழுந்திரு. மணி ஒன்றாகப் போகிறது. வீட்டுக்குப் போக வேண்டும். அம்மா தூங்காமல் காத்துக் கொண்டிருப்பாள்'' என்றார் தந்தை.

உடையில் பட்டுவிட்டிருந்த தூசியைத் தட்டி விட்டுக் கொண்டிருந்த தினகரனுக்கு வீடு என்றதும், மனைவி நினைவு வந்தது.

அவள் உருவேற்றி அனுப்பியதும்!

திகைப்புடன் தந்தையைப் பார்த்தான்.

இதற்கு மேல், பெற்றவரிடம் எப்படிக் கேட்பது?

கேட்காமல் போகவும் தைரியம் இல்லாமல், தயக்கத்துடன் ''அப்பா இந்தப் பணம்... அதைத் தர முடியவே, முடியாதாப்பா?'' என்று மெதுவாகக் கேட்டான்.

''எப்படிப்பா முடியும்?'' என்று அவரும் சாந்தமாகவே பதில் சொன்னார். ''நான் முதலிலேயே சொன்ன மாதிரி இது நாளைக்கே பட்டுவாடா செய்யப்பட வேண்டிய பணம். அதை மாற்ற முடியாது. அதனால் இந்தப் பணம் பற்றிய பேச்சை விட்டுவிடு'' என்று முடித்து விட்டார்.

சட்டென முகம் பிரகாசமுற, ''இந்தப் பணம் இல்லாவிட்டால் பரவாயில்லை அப்பா. வேறு எப்படியாவது ஏற்பாடு செய்து தாருங்கள். அல்லது நம்மிடம் வேறு பணம் பெரிய அளவில் ஏதாவது இருக்கிறதாப்பா?'' என்று மீண்டும் கேட்டான் மகன்.

இதற்கு எப்படி முடிவு கட்டுவது என்று யோசித்துவிட்டு, தாமோதரன் பேசினார், ''தினகரா, நீ சின்னப் பிள்ளை இல்லை. நான் சொல்வதைக் கவனித்து, அமைதியாக இருந்து யோசித்துப் பார். அப்போதுதான் உனக்கும் இது புரியும். பாரப்பா, நீ கேட்கிற மாதிரிப் பெரிய அளவில் இப்போது என்னிடம் பணம் இல்லை. ஓரளவுக்கு இருந்தாலும் அதற்கு வேறு செலவு இருக்கிறது. அதனால் இந்த



முதலீட்டுக்கு, நீ என்னை எதிர்பாராதே. அத்தோடு நமக்கு எதுவுமே தெரியாத ஒரு தொழிலில், பெரும் தொகை முதலீடு செய்வது சரியல்ல'' என்று மெதுவாக ஆனால் தெளிவாகக் கூறி முடித்தார்.

அதற்கு மேல், இது பற்றிப் பேச விருப்பம் அற்றவர் போல, ''சரி கிளம்புங்கள். வீட்டுக்குப் போய்க் கொஞ்ச நேரமெனும் தூங்க வேண்டும். இன்றைய விற்பனை பற்றிய கணக்கு வழக்குகளைப் பார்ப்பது, பணம் பட்டுவாடா என்று நாளைக்கு வேலை மூக்கு முட்ட இருக்கிறது. சௌமி, சாப்பாட்டுப் பை, ஃப்ளாஸ்க் எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டாயில்லையா. பூட்டு, சாவி? எடுத்தாயிற்றா? வாருங்கள் போவோம்'' என்று முன்னே நடந்தார்.

நல்ல வேளையாக இந்த விவாதங்கள் முடிவுக்கு வந்தன என்ற நிம்மதியோடு சௌமியாவும், மனைவியைப் பற்றிய கலக்கத்துடன் தினகரனும், பெற்றவரைப் பின் தொடர்ந்தனர்.

அவ்வளவு நேரத்துக்குப் பிறகு வீடு திரும்பினாலும், உடம்பு கழுவிக் கொண்டு வந்தபோது சூடான இட்லியும் சட்டினியுமாகத் திலகம் காத்திருந்தாள்.

முறுவலித்தவாறு, ''எத்தனை நாள் நீ என்னென்ன விதமாகச் சமைத்துப் போட்டாலும், இந்த ஒன்றாம் தேதி ராத்திரி இட்லி, சட்டினிக்கு நிகர், உலகத்திலேயே கிடையாது, திலகா'' என்று தாமோதரன் கூற, திலகத்தின் முகம் தூக்கக் கலக்கத்தையும் மீறிப் பூவாய் விரிந்தது.

இட்டிலியும் பூ மாதிரிதான் இருந்தது.

ஒரு பெரிய வேலை முடித்துவிட்டு வந்ததில், மூவருக்குமே நல்ல பசி. அந்த அர்த்த ராத்திரியில், பசியில் நிறையச் சாப்பிட்டாலும், இலகுவாகச் செரித்து விடும்படியான உணவைச் செய்து வைத்துக் கொண்டு தாயார் காத்திருந்தது, இதமான உணர்வை அளிக்க, சௌமியாவும் அதைச் சொல்லித் தாயைப் பாராட்டிப் பேசினாள். ''உலகத்திலேயே நிகரற்ற உணவாக இது இருப்பதன் காரணம், அம்மா இந்த இட்லிகளை வெறும் மாவில் செய்யாமல், அதில் அன்பையும் கலந்து தயாரித்திருப்பதால்தான் இல்லையாம்மா?'' என்று கூறிவிட்டுத் தாயின் கையைப் பற்றி முத்தமிட்டாள்.

''என்ன, என்ன? இரண்டு பேருமாய், இந்த இரவு நேரத்தில், இவ்வளவு ஐஸ் வைக்கிறீர்கள். எனக்குச் சளி பிடித்து விட்டால் அப்புறம் நாளையச் சாப்பாடு, வெறும் ரசமும் துவையலும்தான். அதனால் பேசுவதை நிறுத்திக் கொண்டு சாப்பிடுங்கள்'' என்று பூரிப்பை மறைத்தவாறு திலகம் செல்லமாக அதட்டினாள்.

''நீயும் உட்காரு திலகம். வேண்டியதை அவரவர் போட்டுக் கொண்டு சேர்ந்தே சாப்பிடலாம்'' என்று தாமோதரன் கூற, அவளும் தட்டில் நாலு இட்லியை வைத்துக் கொண்டு அப்படியே மற்றவர்களின் தட்டுகளில், காலியானது பார்த்து மீண்டும் ஒரு சுற்று பரிமாறினாள்.

மகன் தட்டில் மட்டும், ஒரே ஒரு இட்லி கூடக் காலியாகாததைக் கவனித்து, ''என்னடா, ஏன் சாப்பிடவில்லையா? பசியில்லையா? சாயந்திரம், அங்கே ஏதாவது சாப்பிட்டாயா? அல்லது வயிறு கியிறு சரியில்லையா? அல்லது அதிகப் பசியில், வயிறு மந்தித்து விட்டதா? சுக்குக் கஷாயம் வைத்துத் தரட்டுமா?'' என்று கவலையோடு பரபரத்தாள்.



''ஐயோ, கஷாயம் எல்லாம் வேண்டாம்மா. எனக்கு வயிற்றில் ஒரு பிரச்சினையும் இல்லை. ஏதோ யோசனையில் இருந்தேன் அவ்வளவுதான். ஆளை விடுங்கள்'' என்று அவன் வேகமாக உண்ணத் தொடங்கவே, திலகமும் சாப்பிடலானாள்.

சற்று பசி அடங்கியதும், தாயிடம் திரும்பி ''அம்மா, ஆனந்தி நன்றாகச் சாப்பிட்டாளா?'' என்று விசாரித்தான் தினகரன்.

''ம். சாப்பிட்டாளேடா. மிளகாய்ப் பொடி, நெய், சீனி மூன்றையும் சேர்த்துப் பிசைந்து சாப்பிட்டால் நன்றாக இருக்கிறது என்று கூடுதலாக இரண்டு இட்லி சாப்பிட்டாளே. நானே வைத்துக் கொடுத்தேனே. இரவு நேரம் நெய் அதிகம் வேண்டாமே என்றேனா? பாதி ராத்திரியில் ஒரு தரம் விழிக்க வேண்டி இருப்பதால், இது ஒன்றும் பண்ணாது, என்று சாப்பிட்டாளே'' என்று கள்ளமற்று விவரித்தாள், தாய்.

''நீங்கள் எல்லாரும் வருகிற நேரம் எழுப்பிவிடச் சொன்னாள்...''

''எழுப்பி விட்டீர்களா?'' என்று பதட்டத்துடன் வினவினான் தினகரன்.

''ம். எழுப்பினேனே. சொன்னபடி எழுப்பாவிட்டால் நாளைக்கு எரிச்சல் படுவாள்

இல்லையா? அதனால் எழுப்பினேன். ஆனால், ரொம்பவும் தூக்கம் வருவதாகச் சொல்லித் திரும்பவும் படுத்துத் தூங்கி விட்டாள். பாவம். புதிதுதானே? இன்னும் இரண்டு ஆண்டுகள் போனால், இந்த 'ஒன்றாம் தேதி விற்பனை' பழகி, அவளும் விழித்திருக்கத் தொடங்கி விடுவாள்'' என்று தன் போக்காய்த் திலகம் விளக்கம் கூறினாள்.

''இப்போது தூங்கி விட்டாள்தானே?'' என்று உறுதிப் படுத்திக் கொண்டு, மேலும் இரண்டு இட்லிகளைத் தட்டில் எடுத்து வைத்துக் கொண்டான் தினகரன்.

அதன்பின், சற்றுக் கலகலப்பாகப் பேசவும் செய்தான்.

சௌமியாவுக்குத்தான், ஒரு மாதிரி இருந்தது.

அண்ணி, இப்போது தூங்கி விட்டாள் என்றால், இன்று இரவு மட்டும்தானே பிரச்சினை இராது? நாளைக்கு? என்னவோ, பிரச்சினை அடியோடு தீர்ந்து விட்ட மாதிரி, அண்ணன் நடந்து கொள்கிறானே. இந்தச் சிறிது நேர அமைதியே பெரிதாகத் தோன்றும் அளவுக்கா அண்ணன் வாழ்க்கை இருக்கிறது?

மனது சங்கடப்பட்டது அவளுக்கு.

ஆனால் மனைவி சொல்லுவதற்கெல்லாம் தாளம் போட்டுக் கொண்டு, அவளைத் தவிர, மற்றவர்கள் இருப்பதையே மறந்தவன் போல, அவள் முகத்தையே பார்த்துக் கொண்டு இருப்பவனும், இதே அண்ணன்தான். இரண்டும் எப்படி முடிகிறது?

ஒன்றும் புரியவில்லை அவளுக்கு!



உணவு முடிந்தபின் தாய்க்குச் சில சில்லறை உதவிகளைச் செய்துவிட்டு, படுக்கப் போனவளுக்கு உடனே உறக்கம் வரவில்லை.

கடந்த நாலு ஆண்டுகளாகவே, புத்தாண்டு விற்பனையில், தன்னால் ஆன சிறு உதவிகளைச் செய்யவென்று, சௌமியா செல்லத் தொடங்கியதிலிருந்து அப்படித்தான். வந்து படுத்தால் உடனே தூக்கம் வராது. மனக் கிளர்ச்சி அடங்கச் சற்று நேரம் ஆகும். கடையில் பார்த்த பல விதமான மனிதர்களைப் பற்றியும், விற்ற பொருட்களைப் பற்றியும், நினைத்துக் கொண்டு சற்று நேரம் படுத்திருப்பாள்.

இன்று, அதையெல்லாம் மீறிக் கொண்டு, அந்தப் பிரியரஞ்சனின் நினைவு வந்தது.

அவனுக்கு நன்றி சொல்லவே இல்லையே?

அவளைப் பற்றி, அவன் என்ன நினைப்பான்?

நன்றி கெட்ட பெண் என்று எண்ணுவானோ?

அல்லது, நாகரீகம் தெரியவில்லை என்றா?

இரண்டுமே – அவளுக்கு வருத்தத்தையே அளித்தன.

எப்போதாவது அவனைப் பார்க்க நேர்ந்தால், முதல் வேலையாக, அவனுக்கு நன்றி தெரிவிக்க வேண்டும் என்று தனக்குள் உறுதி செய்து கொண்ட பிறகே அவளது மனம் சற்று அமைதி அடைந்தது.

## 7

ஆனால், சௌமியா அதிக நாள் காத்துக் கொண்டிருக்க நேராமல், பிரியரஞ்சனை, அவள் விரைவிலேயே சந்தித்தாள். சற்றும் எதிர்பாராத இடத்தில்.

சௌமியா தினந்தோறும் தந்தையுடன் கடை திறக்கும்போது உடன்சென்று இரவில் கடை அடைத்து வைத்து விட்டு வரும்போது, அவரோடு கூடவே வந்தாலும், முழு நேரமும் கடையிலேயே இருப்பதில்லை.

மணிவாசகம், சகாயம் இருவரும் மற்ற வேலைகளைக் கவனிக்க, காலையில் அவளைக் கல்லாவில் இருத்திவிட்டு, தாமோதரன் கொள்முதல், பாங்க் வேலை முதலிய வெளி வேலைகளைப் பார்த்து விட்டு வருவார்.

அவர் வெளியே போகாத நாட்களில் சௌமியா லைப்ரரி, ப்ரௌசிங் என்று போய் வருவாள்.

இருவருமாக, ஒரு மணியளவில் மதிய உணவருந்த வருவார்கள்.

உணவு முடிந்து சற்று ஓய்வெடுத்து விட்டு மாலைச் சிற்றுண்டிக்கு எதையாவது எடுத்துக் கொண்டு மூன்று மணிக்கு வீட்டை விட்டுக் கிளம்புவார்கள்.

மகளைக் கம்ப்யூட்டர் வகுப்பில் விட்டுவிட்டு தாமோதரன் கடைக்குப் போவார்.



நாலரை மணிக்கு வகுப்பு முடிந்ததும், கடைக்கும் கம்ப்யூட்டர் வகுப்பு நடக்கும் இடத்துக்கும் இடையே ஒரு பூங்கா இருந்தது. கூட்டம் அதிகம் இராது என்றாலும், ஆளே இல்லாமல் வெறிச்சோடி இருப்பதுமில்லை.

கையில் கொண்டு போயிருக்கும் சிற்றுண்டியை, அந்தப் பூங்காவில் அமர்ந்து உண்டுவிட்டு அக்கம் பக்கத்திலிருந்து விளையாட வரும் சின்னப் பிள்ளைகளைப் பார்த்தபடி, சற்று நேரம் அங்கேயே அமர்ந்திருப்பாள்.

மீண்டும் கடைக்குச் சென்று தந்தைக்கு உதவியாய் உட்கார்ந்திருப்பாள்.

பொதுவாக இரண்டு மூன்று வாடிக்கையாளர்கள் சேர்ந்து வந்து விட்டால் தவிர, அவளுக்குப் பெரிதாக வேலை இராதாகையால், மற்ற நேரத்தில் அவளது பை தயாரிப்பும் நடக்கும்.

இது பொதுவாக சௌமியாவின் பகல் பொழுது செல்லும் விதம்.

புத்தாண்டு விற்பனை முடிந்து அது தொடர்பான மற்ற வேலைகளும் முடிவடையவே, சௌமியாவின் வழக்கமும் தொடரலாயிற்று.

அவளுக்கே, அவ்வப்போது பிரியரஞ்சனுக்கு நன்றி சொல்லாமல் விட்ட நினைவு வந்து உறுத்திக் கொண்டிருக்கையில், அவளுடைய தந்தையே அன்று அவனைப் பற்றிப் பேசினார்.

அவளிடம் அல்ல.

காலை உணவின் போது, தினகரனை அழைத்து, ''தினா, உன் நண்பன் அந்தப் பையன் அன்று சரியான நேரத்தில் வந்து உதவி செய்தான். நம் நன்றியின் அறிகுறியாக அவனுக்கு ஒரு பரிசுப் பையைக் கொடுத்து விடப்பா'' என்றார்.

''எந்தப் பையன்?'' என்று மகன் விழிக்கவும், ''அவன்தானப்பா. ஒன்றாம் தேதி, நீ மதியச் சாப்பாட்டுக்குப் போகிறபோது உள்ளே வந்து நீ விட்டுவிட்டுப் போன வாடிக்கையாளரைக் கவனித்தானே, அவன். உன் எதிரேதானே அவன் உள்ளே வந்திருக்க வேண்டும்? நீ பார்க்கவில்லை? நீயே அனுப்பினாய் என்றல்லவா, நினைத்துக் கொண்டிருந்தேன். உனக்காக வக்காலத்து வேறு வாங்கினானே. ஒரு மணி நேரத்துக்கும் மேலாக கடும் வேலை செய்தான். நல்ல உயரமாய், பொது நிறமாய் பார்க்க நன்றாக இருந்தானப்பா. உன் வயதுதான் இருக்கும்'' என்று மகனுக்கு விளக்கினார் தாமோதரன்.

வாடிக்கையாளரிடம் தினகரனின் நடத்தைக்குப் பிரியரஞ்சன் சமாதானம் சொன்னதும் அண்ணன் பெயர் எப்படித் தெரியும் என்று தான் ஆச்சரியப்பட்டதும் நினைவு வர, ''ஆமாம் அண்ணா, அவர் பெயர் கூடப் பிரியரஞ்சன்'' என்று தான் அறிந்த விவரத்தை சௌமியா தெரிவித்தாள். பெயர் தெரிந்தால் இன்னார் என்று அண்ணனுக்கு நினைவு வரக் கூடும் அல்லவா?

''அந்தப் பெயரில் எனக்கு யாரையும் தெரியாது. யாரோ திருட்டுப் பயல் உங்களை நன்றாக ஏமாற்றியிருக்கிறான். எதைத் தூக்கிப் போனானோ'' என்றான் தினகரன்.



''ஒன்றையும் தூக்கிப் போகவில்லை. என் சினேகிதர்கள் வந்ததும், என்னைப் பார்த்துச் சிரித்துக் கையாட்டிவிட்டுதான் போனான். ஏதோ கடவுளாகப் பார்த்து அந்த நேரத்தில் அவனை நமக்கு உதவி பண்ண வைத்தது மாதிரி இருக்கிறது. அந்த ஒரு மணி நேரத்தில் அவனாலேயே கிட்டத்தட்ட ஒரு லட்சத்துக்கு விற்றது'' என்று அவர் கூறியபோது, ஆனந்தி உச்சுக் கொட்டிவிட்டுக் கணவனைப் பார்த்தாள்.

ஏதேனும் சூசகம் போலும்.

உடனேயே தினகரனின் முகம் கடுத்தது. ''என்ன விற்று என்ன? பெற்ற மகன் எனக்கு அந்தப் பணத்தைத் தர, உங்களுக்கு மனம் வரவில்லையே. பிறகு அதைப் பற்றி அனாவசியமாக என்னிடம் ஏன் சொல்கிறீர்கள்?'' என்று எரிச்சல் பட்டான் தினகரன்.

அவன் பேச்சுக்கு ஏற்ப, ஆனந்தியும் உதட்டைப் பிதுக்கி முகத்தில் அலுப்பைக் காட்டினாள்.

மாமனாரை எதிர்த்து அவள் ஒரு வார்த்தைகூட பேசுவதில்லையாம். மரியாதை தெரிந்தவளாம். மற்றவர்களிடம் ரொம்பப் பெருமையாகச் சொல்லிக் கொள்வாள்.

ஆனால் இது போல முகத்தில் காட்டுவதற்குப் பெயர் என்னவென்று கேட்டு விடலாமா என்று சௌமியாவுக்கு மனம் துடிக்கும். தந்தைக்கு எதிராகத் தினகரனைத் தூண்டி விடுவது வேறு.

ஒன்றாம் தேதிப் பேச்சுக்குப் பிறகு இரண்டு நாட்கள் கடைப் பக்கம் எட்டிப் பார்த்த தினகரன், பிறகு கடைக்குச் செல்லவே இல்லை. குடும்பத் தொழிலாகக் கடைப் பொறுப்பை அவன் என்றேனும் ஏற்கக் கூடும் என்ற நம்பிக்கை தாமோதரனுக்கு இப்போது அடியோடு மறைந்து போயிற்று.

''கடையை விற்றுப் பணம் தாருங்கள்'' என்று கூட ஒருமுறை தினகரன் தந்தையிடம் கேட்டு விட்டான். அவன் என்னவோ அந்தக் கடையில் போய் ஒரு நாளும் உட்காரப் போவதில்லையாம். வேறு யாருக்காக அவர் அந்தக் கடையை கட்டிக் கொண்டு அழ வேண்டும், என்பது அவன் கேள்வி.

கேட்டுவிட்டு வீராப்பாய் மனைவியை அவன் ஒரு பார்வை பார்த்த போது நாவை அடக்கி வைப்பது சௌமியாவுக்கு பெரும்பாடாகிப் போயிற்று.

கணவனை மெச்சிக் கொள்ளும் பாவனையில் ஆனந்தி கண்ணை வேறு சிமிட்டவும், சின்னவளுக்குக் கொதி நிலைதான்.

அமைதியாக இருந்த குடும்பத்தைக் கெடுக்கிறாயே பாவி, என்று கத்திவிடாமல் எப்படிச் சமாளித்தாள் என்பது சௌமியாவுக்கே, அதிசயம்தான். வெகு சிரமத்துடன்தான் அவள் தன்னை அடக்கிக் கொண்டிருந்தாள்.

முதல் வார்த்தையை அவளதாக்கி, அதுதான் சாக்கென்று அண்ணி வாய்ச் சண்டையைத் தொடங்கி விட்டால்? அப்புறம் நாறுவது நம் வீடுதானே என்ற



எண்ணமே சௌமியாவின் நாவை அப்போது கட்டிப் போட்டது.

அத்தோடு பெற்றவரே பொறுத்துப் போகும்போது முந்திரிக் கொட்டை போல மகள் அதிலும் சின்ன மகள் பேசுவதும் நன்றாக இராதுதானே? தலையிருக்க வால் ஆடலாமா?

அண்ணன் ஆடுவதே, அசிங்கமாக இருக்கிறது. அவளும் பேசினால் அவ்வளவுதான்.

வீட்டில் கடைசியாகப் பிறப்பதில் இது ஒரு கஷ்டம். யாரிடமும் எதுவும் அபிப்பிராயம் கூடச் சொல்ல முடியாது. நன்றாகத் தெரிந்த விஷயங்களைக் கூட மனதிற்குள்ளேதான் வைத்துக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் அதிகப் பிரசங்கி என்று பட்டம் வந்து சேரும்.

ஆனால் அவள் தவித்த அளவுக்கு அவளுடைய தந்தை வருத்தத்தையோ, கோபத்தையோ காட்டவில்லை. வயதின் அனுபவமோ அன்றி, இது இவ்வளவுதான் என்ற முடிவுக்கு வந்து விட்டதாலோ, அவர் அமைதியாகத்தான் பேசினார். ''தினா எலக்ட்ரிக்கல்ஸ்' என்று உன் பெயரில் கடையைத் தொடங்கினாலும், அதை நான் உனக்காக மட்டுமாய் நடத்தவில்லை, தினகரா. நம் குடும்பச் செலவுக்குத் தேவையான வருமானத்துக்காகத்தான் நான் கடை நடத்துவதே. வீட்டுச் செலவு, உங்கள் மூவரின் படிப்பு, அருணா, உன் திருமணங்கள் எல்லாவற்றுக்கும் தேவைப்பட்ட பணத்தைத் தந்தது நம் கடைதான். இன்னும் இருக்கும் இரண்டு பெரிய செலவுகளுக்கும்,

அதைத்தான் நான் நம்பிக் கொண்டிருக்கிறேன். அதனால்...''

''அதென்னப்பா, எனக்கே தெரியாதபடி, நம் வீட்டில் இரண்டு மகாப் பெரிய செலவுகள்?'' என்று சற்று ஏளனமாகவே கேட்டான் மகன்.

'கேள்வி எப்படி?' என்பது போல மனைவி புறம் திருப்பி ஒரு பார்வை வேறு.

''நம் குடும்பத்தைப் பற்றியும் அவ்வப்போது கொஞ்சம் நினைத்துப் பார்த்திருந்தாயானால் உனக்கும் கூடத் தெரிந்திருக்கும், மகனே'' என்றார் தாமோதரன் இலகுவாக. கேலி போலக் குத்துவதில் அவர் யாருக்கும் சளைத்தவர் அல்ல. ''உனக்கு இன்னொரு தங்கையும் இருக்கிறாள். அவளுக்கும் உன் திருமணம் போல, நல்லபடியாகத் திருமணம் செய்ய வேண்டும். அப்புறம் உன் அம்மா அப்பா இருவரும் இருக்கிறோம். இப்போது அறுபதை நெருங்கிக் கொண்டு இருக்கிறோம். கடவுள் அருளால் உழைக்க முடிகிறது. ஆனால், எழுபத்தைந்து எண்பது வயதில் அது முடியாது. அப்போது அடுத்தவர் கையை எதிர்பாராமல் வாழ, எங்களுக்கென்று ஒரு வருமானம் வேண்டுமே. அதற்காகச் சேர்த்து வைப்பதும் ஒரு பெரிய செலவுதான். இப்போது புரிந்ததா, பெரிய செலவுகள் என்னென்ன என்று?''

''ஆனாலும், என்னை ரொம்பத்தான் அவமானப்படுத்துகிறீர்கள், அப்பா. ஒய்வுக் காலத்தில் உங்களை நானும் ஆனந்தியும் காப்பாற்ற மாட்டோமா?



அல்லது சௌமியாவுக்குத்தான் திருமணம் செய்து வைக்க மாட்டோமா? எங்கள் இருவரையும் என்னவென்று நினைத்தீர்கள்? இந்தக் கடையைத் தொலைத்துத் தலை முழுகிவிட்டு அந்தப் பணத்தை என்னிடம் தந்து பாருங்கள். இரண்டே ஆண்டுகளில் உங்களை எங்கே கொண்டு போய் நிறுத்துவேன் தெரியுமா?'' என்று பெருமையடித்தான்.

'நடுத்தெருவில் கொண்டு நிறுத்தாதிருந்தால் சரி' என்று சொல்லாமல் சொல்வது போல மகனைக் கொஞ்சம் கேலியாக நோக்கிவிட்டு, ''என்னைப் பொறுத்த வரையில் தன் கையே தனக்குதவி, தினகரா. என் கையிலேயே தொழில் இருக்கையில் நான் எதற்காக உன்னை நம்பி வாழ வேண்டும்? வேண்டாம்பா. என்னை நானே பார்த்துக் கொள்கிறேன். அனாவசியமாய் உனக்கு ஏன் வீண் சிரமம்?'' என்று அவர் முடித்த விதத்துக்குக் கைதட்டலாம் போல இருந்தது, சௌமியாவுக்கு.

ஆனால், அதுவும் அதிகப்பிரசங்கித்தனம் ஆகி விடுமோ என்று அஞ்சி முகம் மாறாமல் தன் வேலைகளைக் கவனித்தாள் அவள்.

பூங்காவில் அமர்ந்து இதையெல்லாம் யோசித்தபடி அன்றைய டிஃபனான மசாலாக் கடலையை சௌமியா கொறித்துக் கொண்டிருந்தபோது அந்த மரத்தடி இருக்கையில் மறுபுறம் யாரோ அமர்ந்தார்கள்.

பார்வை வட்டத்துள் பட்ட அளவில் ஆண் என்று தெரியவும், செளமியா சற்றும் சலனம் காட்டாமல், கடலையிலேயே கவனமாக இருந்தாள்.

நிமிர்ந்து பார்த்தால்தானே வம்பு? எவனாவது பல்லை இளிப்பான். மற்றபடி யாராவது அத்துமீற முயன்றால் பூங்காக் காவலாளிகள் இருவரில் ஒருவர் உடனே வந்து விடுவார். அதனால் இந்தப் பூங்கா பாதுகாப்பானது என்று பெயர் பெற்றதும்கூட.

எனவே, அந்தப் பக்கம் வந்து அமர்ந்தவனை செளமியா லட்சியமே செய்யவில்லை.

ஆனால், ''வாசனையிலேயே ருசி தெரிந்தது. இதை இப்படித் தனியே சாப்பிட்டால் அப்புறம் வயிற்றை வலிக்காதா?'' என்ற குரலில் சட்டென நிமிர்ந்தாள்.

அவன் பிரியரஞ்சன்.

''நீங்களா?'' என்று ஆச்சரியத்துடன் முகம் மலர்ந்து கூவினாள். ''உங்களைத்தான் பார்க்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டே இருந்தேன்'' என்றாள் உற்சாகத்துடன்.

அவனது கண்கள் சிரித்தன, ''இப்படி ஓர் அழகான பெண் சொல்லக் கொடுத்து வைத்திருக்க வேண்டுமே'' என்று அவன் கூறிய விதத்தில் அவளுக்கும் சிரிப்பு வந்தது.

சிரித்தபடியே தலையசைத்து ''ஷ். அப்படியல்ல. அன்றைக்கு உங்களுக்கு நன்றி சொல்லவே இல்லையே. அதற்குள் திடுமென வந்த



மாதிரியே திடுமெனக் காணாமல் போய் விட்டீர்கள். அதற்காகத்தான் உங்களுக்கு நன்றி தெரிவிப்பதற்காகத் தான் உங்களைத் தேடினேன். அன்று உதவியதற்கு ரொம்பவும் நன்றி சார்'' என்றாள் செளமியா.

''ஹ்ம்ம். இவ்வளவுதானா? நான் என்னென்னவோ... சரி அதை விடுங்கள். இது இந்த நன்றி தெரிவித்தல் அவசியமே இல்லை, தெரியுமா?''

''அதெப்படி? நீங்கள் உதவி செய்தீர்கள். நாங்கள் நன்றி நவின்றுதானே ஆக வேண்டும்.''

''அதைத்தான் ஏற்கனவே செய்து விட்டீர்களே இரு மடங்காய்.''

''பொய். ஒரு வார்த்தை சொல்லுமுன்தான், ஆளே அந்தர்த்தானம் ஆகி விட்டீர்களே. அப்புறம் எப்படிச் சொல்வதாம்?''

''வாயால் சொன்னால்தானா? இரண்டு கண்களும்தான், ஸ்விட்ச் போட்ட மாதிரி நன்றி, நன்றி என்று ஜொலித்தனவே. அந்த விழி மொழி எனக்கு அப்போதே புரிந்து போயிற்றே. எந்த ஒரு வாய் வார்த்தையும், அதற்கு ஈடாகுமா?'' என்று புன்னகையோடு அவன் கேட்க, அவள் முகம் லேசாகச் சிவந்தது.

அன்று, நன்றியோடு பிரியரஞ்சனை நோக்கியது அவளுக்கும் நினைவிருந்தது. ஆனால் அவன் தெளிவாகப் புரிந்து கொள்ளும் அளவுக்கா, அவள் மனதை, அவளது கண்கள், அப்படியே பிரதிபலித்தன?

ஆச்சரியத்தோடு, கூச்சமாகவும் இருந்தது அவளுக்கு.

''அந்த நேரம் ரொம்பவும் சங்கடப்பட்டுக் கொண்டிருந்த சமயம். நீங்கள் வந்தது, கடவுளே உங்களை அனுப்பிய மாதிரி இருந்தது. மெய்யாகவே, மிக்க நன்றி சார்'' என்றாள் அவள், உணர்ச்சி மிகுந்த குரலில்.

''அடடா அவ்வளவுதானா?'' என்றான் அவன் ஏமாற்றம் மிகுந்த குரலில்.

அவள் திகைப்புடன் பார்க்கவும், ''கடவுளே வந்த மாதிரி இருந்தது என்று சொல்வீர்கள் என்று நினைத்தேன். கடவுள் அனுப்பிய மாதிரி என்று சொல்லி, என்னை வெறும் மனிதப் பிறவி அளவிலேயே நிறுத்தி விட்டீர்களே, சௌமியா'' என்று வருத்தப்பட்டான் பிரியரஞ்சன்.

கலகலவென்று நகைக்கத் தொடங்கியவள், சட்டென அதை நிறுத்தி, ''என் பெயர் எப்படித் தெரியும்?'' என்று வினவினாள்.

விழிகளை உயர்த்தி ஒரு முறை மூடித் திறந்து, ''அழகான பெண்களின் பெயரை எல்லோரும்தான் தெரிந்து வைத்திருப்பார்கள்'' என்று அது ஏதோ, அவனுடைய பெருமைபோல, எடுப்பாகச் சொன்னான் அவன்.

''ஊகூம். அன்றைக்கு அண்ணன் பெயரைக் கூட அந்த வாடிக்கையாளரிடம் குறிப்பிட்டீர்களே. அண்ணன் பெயர் எப்படித் தெரியும்? அண்ணனும் அழகான பெண்ணா?''

''அது. ஊகூம். அவர் ஒரு அழகான பெண்ணின் அண்ணன். அவர் பெயரை அறிந்து வைக்க, அந்தத்தகுதி



போதாதா?'' என்று, வேடிக்கையாகவே விளம்பியவன், சௌமியாவின் கூர்பார்வை, அவன் முகத்தில் அசையாது நிலைத்திருக்கவும், தோற்றவனின் சரணாகதியைக் காட்டி ''சரி சரி என் நண்பனை வழியனுப்பியபடி கடை வாயில் பக்கமாய் நின்றிருந்தேன். உன் அண்ணன் அடித்தகூத்து, கண்ணில் பட்டது. உன் தந்தை அவனைத் தினகர் என்று அழைத்ததும் கேட்டது'' என்று விளக்கம் தந்தான்.

இது நடந்திருக்கக் கூடியதுதான். தங்கையையும் உணவருந்த அழைத்துச் செல்லும்படி கூறியபோது, தந்தை மகனைத் தினகர் என்று விளித்திருக்கக் கூடும். இருக்கலாம்.

அவளது யோசனையுள் புகுந்து, ''ஒரு பக்கம், வாடிக்கையாளர் கத்த, இந்தப் பக்கம் இன்னொருவர் ரசீதைக் கேட்க, இருவரிடமும், 'இதோ, இதோ' என்று... உங்களைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது. உங்கள் அப்பாவையும்தான். எனக்கும், உடனடியாக வேறு வேலை எதுவும் இல்லை. அதனால்தான் உதவி செய்யலாம் என்று உள்ளே வந்தேன். வந்தபின் நடந்தது உன்... உங்களுக்கும் தெரியும்'' என்று மேலும் விவரித்தான்.

ஒப்புதலாய் அவள் தலையாட்டும் போதே, ''சாரி சட்டென்று உன் உனக்கு என்று வாயில் வந்து விடுகிறது. எங்கள் குடும்பம் பெரிது. உன் வயதில் உறவுப் பெண்கள் இரண்டு மூன்று பேர் இருக்கிறார்களா... சட்டென்று, உன்னை, ஒருமையில்

அழைத்து விடுகிறேன். மீண்டும் சாரி'' என்று தலையைத் தட்டிக் கொண்டான் பிரியரஞ்சன்.

இரண்டு பிள்ளைகளுக்குத் தகப்பன். பெரிய குடும்பத்தின் ஓர் அங்கம். வயதிலும் கிட்டத்தட்ட அண்ணனை ஒத்தவனாகத்தான் தோன்றுகிறது.

சட்டென முடிவு செய்து, ''பரவாயில்லை. நீங்கள் என்னை ஒருமையில் விளித்துப் பேசுவது பற்றி எனக்கு எந்தவித ஆட்சேபனையும் கிடையாது. அதனால் நீங்கள் சாரி சொல்லவும் தேவையில்லை'' என்றாள் சௌமியா.

''அப்படியானால் 'நீ' என்று சொல்லலாம். தப்பில்லை.''

''ஆமாம். அத்தோடு அப்பா கூட இன்று சொல்லிக் கொண்டிருந்தார். நீங்கள் விற்பனை செய்ததே கிட்டத்தட்ட ஒரு லட்சத்துக்கு மேல் வந்ததாமே. அதற்கும் ஒரு 'தாங்க்ஸ்'. அதற்காக உங்களுக்கு இலவசப் பரிசுப் பை ஒன்று கொடுக்க வேண்டும் என்றும் சொன்னார்'' என்று புன்னகை செய்தாள், அவள்.

முகம் மலர, ''பரவாயில்லை. அதிர்ஷ்டக்காற்று அடிக்கிற நேரம் போலத் தெரிகிறது. சும்மா கஷ்டத்தில் உதவப் போனால், அதற்குக் கூலி வேறு கிடைக்கிறதே'' என்று சிரித்தான் பிரியரஞ்சன்.

அவளும் முறுவலித்தபடியே, கையிலிருந்த டிஃபன் பாத்திர மூடியில் கொஞ்சம் கடலையை வைத்து அவனிடம் நீட்டினாள்.



''அதிர்ஷ்டக் காற்று பலமாகவே அடிக்கிறது'' என்று சிரித்தவாறு அதை வாங்கி அவனும் கொறிக்கலானான்.

''மகா ருசி'' என்று பாராட்டிவிட்டு, ''இந்த மாதிரி விற்பனை எப்போதெல்லாம் நடக்கும் என்று சொன்னாயானால், அப்போதெல்லாம் வந்து அதிர்ஷ்டக் காற்று அனுபவித்துப் போவேன்'' என்று வேடிக்கை போலக் கூறினான்.

உதட்டைப் பிதுக்கினாள், சௌமியா. ''அதிர்ஷ்டக் காற்றெல்லாம் அப்படிச் சும்மா, சும்மா அடித்து விடுமா? புத்தாண்டுப் பிறப்புக்கு மட்டும்தான், அப்பா இப்படித்தள்ளுபடி விற்பனை செய்து. அதனால் அன்று மட்டும்தான் இந்தக் கூட்டமும் வரும்'' என்று விளம்பினாள்.

''ஆனாலும் குறிப்பிட்ட காலங்களில், வழக்கத்தை விட அதிக விற்பனை நடக்கத்தானே, செய்யும்?'' என்று அவன் விடாமல் கேட்டான். ''இந்தப் பகுதியில் அது எப்போதெல்லாம்?''

இந்தக் கேள்வியைக் கேட்டதற்காகவே பின்னொரு காலத்தில் அவள் அவனை வெறுக்கப் போகிறாள். அதற்குரிய பதிலைச் சொன்னதற்காகத் தன்னையும் வெறுத்துக் கொள்ளப் போகிறாள் என்பதை அறியாமல் சௌமியாவும் பிரியரஞ்சனின் கேள்விக்கு சற்றும் மறையாமல் பதில் சொன்னாள்.

## 8

பிரியரஞ்சனின் கேள்விக்குப் பதில் சொல்லக் கூடாது என்று சௌமியாவுக்கு ஒரு கணம் கூடத் தோன்றவில்லை.

இது ஒன்றும் பெரிய வியாபார ரகசியம் அல்ல. வெளிப்படையாக நடக்கும் விற்பனை. எந்தக் கடையில் போய்க் கேட்டாலும் சொல்லப் போகிறார்கள். இவனும் அந்தச் சமயங்களில் வந்து உதவி செய்வதற்காகத்தானே, விசாரிக்கிறான்.

நல்ல மனிதன்.

''இப்போது ஒன்றாம் தேதி விற்பனை முடிந்ததா? அடுத்தது பொங்கல். ஆனால், பொங்கலுக்குப் பாத்திரக் கடைகள் அளவுக்கு இந்த மாதிரி எலக்ட்ரானிக் அயிட்டங்கள் போகாது. ஆனால் வரி போட்டு விடுவார்களோ என்று அடுத்த மாதம் கொஞ்சம் விற்கும். அப்புறம் தமிழ் வருஷப் பிறப்பு. ஏப்ரலில் சற்று நன்றாகவே விற்கும். கணக்கு முடிக்கிற நேரம், குறைந்த விலைக்குக் கிடைக்கும் என்பதோடு, இது தெலுங்கு கன்னட மக்கள் சற்று அதிகம் வசிக்கிற பகுதி என்பதால் 'உகாதி'யிலிருந்தே விற்பனை சூடு பிடிக்கத் தொடங்கி விடும். ஏப்ரல் முடிந்தால் அதன் பிறகு தீபாவளிதான். மற்ற சமயங்களில் எல்லாம் ஒன்று, இரண்டு என்று தேவைக்கு விற்றுக் கொண்டே



இருக்கும். அதில்லாமல் கடை நடத்த முடியா தில்லையா? ஆக, இதுதான் சார் இங்கத்திய விற்பனை அட்டவணை. போதுமா, விவரம்?''

''ஒன்றே ஒன்றுதான் மனதை உறுத்துகிறது'' என்றான் அவன், ஒரு தீவிரமான முக பாவனையுடன்.

''என்னது? எல்லாம் சரியாகத்தானே, சொன்னேன்? எது தவறு?''

''அந்த 'சா...ர்'தான், உன்னை ஒருமையில் அழைக்கலாம் என்றால் என்னை நீ 'சார்' என்று சொல்வது அதிகப்படி மரியாதையாகத் தெரிய வில்லை?''

''ம்ம்...'' என்று ஓரக் கண்ணால் அவனைப் பார்த்தாள் சௌமியா.

என்னவோ சரியில்லையே என்று தோன்ற, ''அப்படியானால் பிரியரஞ்சன் வாடா, போடா, என்னடா என வேண்டுமா?'' என்று துடுக்காகக் கேட்டாள்.

வியந்து நோக்கி, ''ஏன் மலை உச்சிக்கும், அதல பாதாளத்துக்கும் இடையே ஒன்றும் கிடையாதா? 'பிரியரஞ்சன் வாருங்கள்' என்று சொல்லக் கூடாதா? ஏன்? என்ன விஷயம்?'' என்று தனியாகவே வினவினான் அவன்.

அவளுக்குத்தான் பதில் சொல்ல முடியாமல் திணறலாகிப் போயிற்று.

ஆள் இளமையாகத் தோன்றினாலும், அவன் இரண்டு பிள்ளைகளுடைய தந்தை, குடும்பஸ்தன்.

சென்ற ஆண்டுதான் படிப்பை முடித்த சௌமியா, அவனை 'சார்' என்றதில் குறை சொல்ல முடியாது. ஆனால் இன்னமும், தன்னை இளவட்டமாக எண்ணிப் பேசுவது அவனது தப்புதானே?

யதார்த்தத்தை நோகாமல் எடுத்துக் காட்ட நினைத்து, ''விஷயம் என்று, ஒன்றும் இல்லையே. எப்படியும் என்னை விட வயதிலும் அனுபவத்திலும் பெரியவர்தானே, என்று நினைத்தேன். சரி விடுங்கள். இந்தப் பூங்காவைச் சுத்தமாகவே, பராமரித்து வருகிறார்கள். அடுத்த முறை இந்தப் பக்கம் வரும் போது உங்கள் பிள்ளைகளையும் கூட்டி வாருங்களேன். நன்றாக விளையாடுவார்கள்'' என்றாள்.

இரண்டு பிள்ளைகளைப் பெற்றவன் என்பதை முடிந்த அளவு நாசூக்காக எடுத்துச் சொல்லியாயிற்று. உரிய விதமாக நடந்து கொள்வது இனி அவன் பொறுப்பு.

பொருள் விளங்காதவன் போல நோக்கியவனின் கண்கள் சட்டெனப் பளிச்சிட்டன.

உடனேயே முகம் மாற, ''நான் என்னம்மா தப்பு செய்தேன்? என்னை அவ்வளவு நீண்ட இடைவெளிக்குப் பிறகு வரச் சொல்லுகிறாயே'' என்று வருத்தத்துடன் கேட்டான்.

''நீண்ட இடைவெளியா. நான் எப்போது அப்படிச் சொன்னேன்?''

''இதோ, இப்போதுதானே சௌமியா, சொன்னாய். அடுத்த முறை பிள்ளைகளோடுதான் வர வேண்டும் என்று இப்போதுதானே சொன்னாய்.''



''கொஞ்சம் கொஞ்சம் மாற்றிப் பேசுகிறீர்களே. பிள்ளைகளோடுதான் வர வேண்டும் என்றா, சொன்னேன்? பிள்ளைகள் சந்தோஷப்படுவார்களே, அவர்களையும் கூட்டி வாருங்கள் என்றேன். ஏன்? வெளியூர் சென்றிருக்கிறார்களா? வர நாளாகுமா?

நீண்ட இடைவெளியின் பொருள், அதுவாக இருக்கக் கூடும் என்று எண்ணிக் கேட்டாள் அவள்.

ஆனால் அவன் இன்னமும் சோகம் காட்டினான், ''இல்லையே.''

''பின்னே?''

'மிஸ்ஸிங் லிங்க்' என்பார்களே, அது போல முக்கியமான இழையைத் தவற விட்டுவிட்ட உணர்வு அவளுக்கு. புதிரில் தப்பு வழி சென்று விட்ட மாதிரி.

அவள் கண்ணில் கேள்வி காட்ட, ''நீ இலகுவாகப் பிள்ளைகளோடு வா என்று சொல்லிவிட்டாய். ஆனால் என்னதான் நீ சொல்லி விட்டபோதும், இப்போது பிள்ளைகளுக்கு எங்கே போவது? எவ்வளவு விரைவாக அடுத்த மாதமே, திருமணம் செய்து கொண்டாலும் கூட, பிள்ளை பெற, ஒரு பத்து மாதம் எல்லாம் சேர்ந்து ஓர் ஆண்டாவது ஆகி விடாதா? பிள்ளைகள் என்று பன்மையில் வேறு சொன்னாய். அதற்கு இன்னும் இரண்டு ஆண்டுகள் சேர்த்துக் கொள். நான் சொன்னது போல நீண்ட இடைவெளிதானா, இல்லையா?'' என்று ''சாரி, சாரி போதும் போதும், தப்பாக நினைத்து விட்டேன், விடுங்கள்'' என்று அவள் சொல்லச் சொல்ல விடாமல் கூறி முடித்தான்.

முகத்தில் அசடு வழிந்த போதும், சௌமியாவால் சிரிப்பையும் அடக்க முடியவில்லை.

என்னவோ, தடையகன்ற மாதிரி உணர்வில், அவளுக்குச் சிரிப்புப் பொங்கியது. நகை முகத்துடனேயே ''சாரி, பிரியரஞ்சன். அன்று நீங்கள் சின்னப் பிள்ளைகளுக்கான ஆடியோ காசெட்டுகள், அதிலும் இரண்டு பேருக்கு என்று சொல்லியே வாங்கினீர்களா, உங்கள் பிள்ளைகள்தான் என்று எண்ணி விட்டேன். மன்னித்துக் கொள்ளுங்கள்'' என்றாள் அவள்.

ஆனால் அவன் லேசில் சமாதானம் அடைந்தானில்லை. ''அதெப்படி? சொந்தப் பிள்ளைகளுக்கு மட்டும்தானா, காசெட் வாங்குவார்கள்? நண்பர் குழந்தைகள், தம்பிகள், தங்கைகள் எத்தனை இல்லை?''

''நான் நினைத்தது, தப்புதான். என்னமோ ரொம்பவும் தெரிந்த மாதிரி அவர்களைக் குறிப்பிட்டதால் பிள்ளைகள் உங்கள் சொந்தப் பிள்ளைகள் என்று எண்ணி விட்டேன். அதென்ன, அவ்வளவு பெரிய தப்பு?''

அவளது விளக்கத்தை ஏற்காமல், ''தப்பேதான். என்னை நன்றாகப் பார்த்துவிட்டுச் சொல்லு. என்னைப் பார்த்தால் இரண்டு பிள்ளைகளுக்கு அப்பா மாதிரியா, தோன்றுகிறது? அதுதான் எனக்கு வருத்தம்'' என்று விடாமல் கேட்டான் அவன். ''வியர்க்க விறுவிறுக்க எத்தனை உடற்பயிற்சிகள். எல்லாம் வீணாகிப் போயிற்றே'' என்று சோகம் வேறு.



''அப்படியெல்லாம் கிடையாது. நானே முதலில் இந்தச் சின்ன வயதில் இரண்டு பிள்ளைகளா? என்று தான் ஆச்சரியப்பட்டேன் தெரியுமா?'' என்றவள் சட்டெனச் சிரித்தாள். ''என்னவோ, பெண்கள்தான் அழகு, இளமை என்று தோற்றத்தைப் பற்றியே நினைப்பதாகச்சொல்வார்கள். ஆனால் உங்களை மிஞ்ச முடியாது போலிருக்கிறதே.''

''ஆணாக இருந்தாலும், பெண்ணாக இருந்தாலும், ஆரோக்கியம் முக்கியம். அந்த ஆரோக்கிய முறையே அழகாகத் தோன்றவும் வழி வகுக்குமானால், ஏன் விட வேண்டும்? நீ எப்படியாம், சொல்லேன்? ஒருவிதப் பயிற்சியும் இல்லாமலா, அம்மையார் இப்படிக் கொடியிடையாளாக இருக்கிறீர்கள்? ம்?''

எதையும் லேசில் விட மாட்டான் போலும்.

அத்தோடு அவன் அவளைக் கொடியிடையாள் என்றதும், மனதைக் குளிர்விக்க, மெல்லத் தலை சரித்து அவனை நோக்கினாள், அவள்.

''என்ன?'' –

கரம் குவித்து, ''எதற்கு மன்னிப்புக் கேட்க வேண்டும் என்று சொன்னீர்கள் என்றால், அத்தனைக்கும் சேர்த்து மன்னிப்புக் கேட்டு விடுகிறேன். அறுவை தாங்கவில்லை'' என்றாள் கேலியாக.

''பதில் சொல்ல முடியாவிட்டால், அறுவை என்பதாக்கும்?'' என்று திருப்பினான், அவன்.

''பதில் சொல்லி விடுவேன். ஆனால் அதற்கு வேறு இப்படி அப்படி என்று புலம்பத் தொடங்கி விடுவீர்களே என்ற பயம்தான்.''

உள்ளுர, அவளுக்கு ஆச்சரியம். அவளா, யாரோ ஓர் அன்னிய ஆண் மகனுடன் தனியாக இவ்வளவு இலகுவாகப் பேசிக் கொண்டிருக்கிறாள். உறவில் கூட, யாரிடமும் நின்று பேசினால் அண்ணன் எரிந்து விழுவான்.

அம்மா பொதுவாக அண்ணன் பக்கம்தான்.

அதனால் எதற்கு வம்பு என்று யாராவது ஏதாவது கேட்டால் கூட, ஓர் அரை குறையான பதிலோடு, சௌமியா அகன்று விடுவாள். கடையில் தனியாக இருப்பதில்லை. எவரேனும் அருகில் நின்று வாயாட முயன்றால், தந்தை மணிவாசகம் யாராவது 'என்ன வேண்டும்' என்று வந்து விடுவார்கள்.

'பல்லைத் தட்டித் தொட்டிலில் போட்டு ஆட்டாத குறை' என்று மனதுள் எண்ணினாலும், அவளுக்கும் அது ஒன்றும் பெரிய குறையாகத் தோன்றியது இல்லை. மற்ற ஆண்கள் யாரிடமும் பேசிக் கொண்டிருக்க, அவள் விரும்பியதும் இல்லை.

கள்ளப் பார்வை, வழிசல் எல்லாமே அவளுக்கு எரிச்சலாகத்தான் இருக்கும். ஒரு சில பெண்களைப் போல இவைகளையே, தன் அழகுக்குக் கிடைத்த நற்சான்றுகளாக எண்ணி, மகிழ்வது கிடையாது. எனவே அவசியத்துக்கு மேல் அவள் ஆண்களிடம் பேசுவது வழக்கம் இல்லை.

மணமாகி, குழந்தை, குடும்பம் என்று இருப்பவர்களுடன் ஓரளவு சகஜமாக உரையாடுவாள். இரு குழந்தைகளுடைய தந்தை என்ற எண்ணத்தில்தான் பிரியரஞ்சனிடம் அவள் இலகுவாகப் பேசியதே.



ஆனால் அது இல்லை என்று தெரிந்த பிறகும், இப்போது பிரியரஞ்சனுடன் இவ்வளவு நேரம், கலகலப்பாய் வார்த்தையாடிக் கொண்டு இருந்து விட்டாளே. அதிசயம்தான்.

''அப்படி என்ன ஆச்சரியம்?''

கண்ணாடி, முகத்தைப் பிரதிபலிக்கலாம். ஆனால் 'அடுத்ததைக் காட்டும் பளிங்கு போல' மனதை முகம் காட்டலாமா? உன்னுடன் இவ்வளவு நேரம் உரையாடியதைப் பற்றித்தான் அதிசயப்பட்டுக் கொண்டிருந்தேன் என்று உண்மையையா, சொல்ல முடியும்?

அவசரமாய் யோசித்து, ''அதில்லை. கண்ட கண்ட நேரத்தில் எல்லாம் காட்சி கொடுக்கிறீர்களே, நீங்கள் என்ன வேலை செய்யக்கூடும், என்று... அதுதான் அதிசயம்'' என்று சமாளித்தாள் சௌமியா.

''ஓ. என்னைப் பற்றி யோசித்தாயா? மிக்க மகிழ்ச்சி'' என்று திருப்தி காட்டினான் பிரியரஞ்சன்.

''இது பதில் இல்லையே'' என்ற சௌமியாவுக்கு, மெய்யாகவே அவன் என்ன வேலை செய்கிறான் என்று அறிந்து கொள்ளும் ஆர்வம் தோன்றி விட்டது.

''என்ன, இன்னும் பதிலையே காணோம்?'' என்று மீண்டும் வினவினாள்.

''சொல்லாமல் என்ன?'' என்றான் பிரியரஞ்சன் இலகுவாக, ''இப்போது நான் ஒரு 'சர்வே' எடுத்துக் கொண்டிருக்கிறேன். அது எதைப் பற்றி என்று

கேட்கக்கூடாது. முக்கியமான கணக்கீடு'' என்றான் மர்மமான குரலில்.

''எனக்குத் தெரியுமே'' என்று சௌமியா புன்னகைக்கவும், அவன் திகைத்துப் போனான்.

அவனது திகைப்பில் உற்சாகமடைந்து, ''எங்கள் கடையில் இருப்பது போன்ற எலக்ட்ரானிக் பொருட்கள், எந்த மாதிரி எந்த மாதங்களில் அதிகமாக விற்கும், என்பதுதானே? உங்களுடைய இத்தனை கேள்விகளில், நான் இதைக் கூடத் தெரிந்து கொள்ளவில்லை என்றால், எப்படி?'' என்று கேட்டாள் சௌமியா.

''உன்னிடம் நான் மிகவும் எச்சரிக்கையோடு இருக்க வேண்டும் என்று தெரிகிறது'' என்றான் அவன், ஒரு மாதிரிக் குரலில்.

சிரித்தபடியே, கைக் கடிகாரத்தைப் பார்த்து விட்டு சௌமியா எழுந்தாள். ''நான் கிளம்புகிற நேரம் ஆகி விட்டது'' என்றவள், தொடர்ந்து, ''இன்னமும் அந்தக் குழந்தைகள்... காசட் வாங்கிக் கொடுத்தீர்களே, அவர்கள் யார் என்று சொல்லவே இல்லையே'' என்று கேட்டாள்.

''அவர்களா? அவர்கள் என் தம்பியும் தங்கையும்'' என்று குறுநகை புரிந்தான் பிரியரஞ்சன்.

தம்பி, தங்கையா? திகைப்புடன் அவனைப் பார்த்தாள் சௌமியா.

இவனுக்கு எப்படியும் இருபத்தைந்து வயதுக்கு மேல்... அண்ணன் வயதானால் இருபத்தேழே இருக்கும். இவனுக்கு நர்சரிப் பாட்டுகளும்,



அரிச்சுவடியும் படிக்கும் ஐந்தாறு வயதில் தம்பி தங்கைகளா? என்ன கதை இது... என்று முகம் சிணுங்கும் போதே அவளுக்கு விஷயம் விளங்கி விட்டது. அவனது சிரிப்பின் பொருளும் புரிந்து விட்டது.

''அவர்கள், உங்களுக்கு ஒன்று விட்ட தம்பி தங்கைகள். அப்படித்தானே?'' என்று தலை சரித்துக் கேட்டாள்.

''புத்திசாலி என்று ஒத்துக் கொள்கிறேன். நிறையப் பேர், விசித்திரமாகவே எண்ணுவதில்லை. அப்படி நினைத்தாலும் 'உங்கள் அப்பா, பெரிய ஆள்' அது, இது என்று ஏதாவது உளறுவார்கள். நீ மட்டும்தான் சரியாகக் கண்டு பிடித்திருக்கிறாய். கெட்டிக்காரி'' என்று பாராட்டிவிட்டு, ''அபியும், விபுவும், என் கடைசிச் சித்தப்பாவுடைய மக்கள். இரட்டைகள். எங்கள் எல்லோருக்கும் செல்லம்'' என்று விளக்கினான்.

அவன் 'கெட்டிக்காரி' என்றதில் அகமகிழ்ந்த போதும், அதைக் காட்டிக் கொள்ளாமல், ''ஒருநாள் அவர்களைக் கூட்டி வாருங்கள்'' என்று அழைப்பு விடுத்தவள் தொடர்ந்து ''நேரமாகி விட்டது. வருகிறேன்'' என்றுரைத்துக் கிளம்பி விட்டாள்.

அன்று வீடு திரும்பும்போது, தாமோதரனின் முகம் சற்று வாடியிருப்பது போல சௌமியாவுக்குத் தோன்றியது.

எதிரே வரும் வாகனங்களின் ஒளியில், தந்தையின் முகத்தைக் கூர்ந்து பார்க்க முயன்றபோது, அது இயல்பாகத்தான் இருந்தது.

ஒன்றுமிராது. ஏதோ கவனத்தில் பார்த்தபோது, அப்பாவின் களைப்பை வாட்டம் என்று எண்ணியிருக்கிறோம் என்று நினைத்து, தன்னை சமாதானப்படுத்திக் கொண்டாள் அவள்.

அன்று இரவு வெகு நேரம் தூக்கமின்றிப் புரண்டுவிட்டு, ஒரு வழியாக கண்ணயர்ந்த சௌமியாவுக்கு சுமார் ஒரு மணியளவில் திடுமென விழிப்பு வந்தது. எழுந்து தண்ணீர் குடித்தவள், மொட்டை மாடிக் கதவு திறந்திருப்பதைக் கண்டு அதைச் சார்த்தித் தாழ்ப்பாளிட எண்ணிச் சென்றாள்.

பார்த்தால், மொட்டை மாடியில் இருளை வெறித்தவாறு, ஒரு சிகரட்டைப் புகைத்தபடி நின்று கொண்டிருந்தார், அவளுடைய அருமைத் தந்தை தாமோதரன்.

உள்ளம் கலங்கியது மகளுக்கு. திரும்பி வரும்போது தந்தையின் முகத்தில் கண்ட வாட்டம் கற்பனையில்லையோ?

## 9

பொதுவாக தாமோதரன் புகை பிடிக்கிறவர் அல்ல. கல்லூரி நாட்களில் மற்ற மாணவர்களோடு சேர்ந்து சும்மா ஒரு வேடிக்கையாகப் பழகி விட்டபோதும், அவருடைய தாயாரின் வேண்டுகோளுக்காக, அந்தப் பழக்கத்தை கிட்டத்தட்ட விட்டு விட்டார் என்றே சொல்லலாம்.



மனதில் ஏதாவது குழப்பமோ, சஞ்சலமோ இருந்தால், இப்படித் தனியே நின்று ஒன்றிரண்டு சிகரெட்டுகளை ஊதுவார் என்பது குடும்பத்தினரின் பொது ரகசியம். கண்டு கொண்டதாக அவரிடம் காட்டிக் கொள்ளாவிட்டாலும், எல்லோருக்குமே அவர் புகைப்பது தெரியும்.

ஆனால், வீட்டில் அதிலும் குழந்தைகள் இருக்கும் இடம் மட்டுமல்ல, அவர்கள் அடுத்து வரக் கூடிய இடத்திலும்கூட, அவர் புகைக்க மாட்டார்.

எனவே, வீட்டினர் யாரும் அவர் புகை பிடிப்பதைப் பார்த்ததே கிடையாது எனலாம்.

தினகரனின் திருமணத்தின் பின், ஓரிரு முறை மொட்டை மாடியில் சிகரெட் வாசனையை, சௌமியா வெகு லேசாக உணர்ந்திருக்கிறாள். ஆனால், மகனைப் பற்றிய ஒரு தெளிவு ஏற்பட்டு விட்டாற்போல, அதுவும் நின்றுவிட்டது.

இப்போது என்ன?

அண்ணன், மீண்டும் ஏதேனும் தகராறு பண்ணுகிறானா?

அப்படியிருந்தால், அவளுக்கு அது பற்றிக் கொஞ்சமேனும் தெரிந்திருக்குமே?

கவலையாக இருந்த போதும், தந்தையை அணுகி அவரிடம் எதையும் கேட்க, சௌமியாவுக்குத் தைரியம் இல்லை. தைரியம் என்பதைவிட, மனம் வரவில்லை என்றே சொல்லலாம்.

'என்னப்பா' என்று கேட்டால், அவர் ஒன்றும் கோபித்துக் கொள்ளப் போவதில்லை. ஆனால் இந்தத்

தளர்ந்திருந்த நேரத்தில் போய் மகள் பார்த்து விட்டாளே என்று மனம் குன்றக்கூடும்.

எதற்கு வீணாய்? பெரிதாக எதுவும் என்றால், தானாகத் தெரிந்து விடும்.

ஓசைப்படாமல், திரும்பச் சென்று படுத்தாள், அவள்.

மறுநாள் சாதாரணமாகவே இருந்தது. தாமோதரன் பெரிதாக ஒன்றையும் காட்டிக் கொள்ளவில்லை.

அண்ணனைப் பற்றித்தான் இருக்கும் என்று நினைத்தாலும், சௌமியாவால், அதை அடியோடு மறக்க முடியவில்லை.

வழக்கம் போலப் பூங்காவிற்குச் சென்று உட்காரும் போது பிரியரஞ்சன் நினைவு வந்தாலும், அவனை அன்றைக்கும் சந்திக்கக்கூடும் என்று அவள் எதிர்பார்க்கவில்லை. எதற்கும் இருக்கட்டும் என்று கொஞ்சம் முந்திரி பக்கோடாவை எடுத்து வைத்து விட்டு, மீதியைக் கொறித்தபடி, தன் போக்கில் யோசனையில் ஆழ்ந்திருந்தவள், ''என்ன? நிலாவை மேகம் மறைத்திருக்கிறதே'' என்று அவன் குரல் கேட்கவும், 'அப்பாடீ' என்று ஓர் ஆறுதலோடு நிமிர்ந்தாள்.

''நேற்று செம போரா?''

சுதாரித்து விட்டவள், ''எதற்கு?'' என்று அலட்சியமாக வினவினாள்.

''மணிக்கணக்காய் பூங்காவில் யாரோடு என்ன பேச்சு, என்று...''



63, [Old 25]

''என்னை அப்படிக் கேட்க மாட்டார்கள். ஆனால், நீங்கள் வாங்கிக் கட்டியிருக்கிறீர்கள் என்பது என் எண்ணம்.''

''என்னை மட்டும் யார் கேட்பார்களாம்?''

''ஏன், உங்கள் அலுவலகத்தில் கேட்க மாட்டார்களா? 'சர்வே' எடுக்கவென்று, அனுப்பினால், சும்மா வம்பளந்து விட்டு வருவதா? எங்கே அய்யா, உன் சர்வே? என்று தூக்கிப் போட்டுத் துவைத்துக் காய வைத்திருப்பார்களே'' என்று கிண்டலடித்தவளுக்கு கூடவே கவலையும் வந்தது. ''உங்கள் அலுவலக நிர்வாகி, உங்களை ஒன்றும் சொல்லிவிட வில்லையே?'' என்று மெல்லிய குரலில், அக்கறையோடு விசாரித்தாள்.

ஒரு கணம் தயங்கிவிட்டு அவள் அருகில் அமர்ந்தான் அவன். ''உன்னைப் பற்றிக் கேட்டால் என்னைப் பற்றிக் கவலைப்படுகிறாயேம்மா. என்னைக் கேள்வி கேட்போர் எங்கள் நிறுவனத்தில் யாரும் இல்லை. சொல்லு, உன் முகம் ஏன் வாடியிருந்தது? என்ன கவலை?'' என்று கனிவுடன் கேட்டான்.

அவன் அந்தக் குரலில் கேட்கும்போது தன் மனதைக் கொட்டுவது, மிகவும் இயல்பானதாகத் தோன்றிவிட, ''அப்பா எதற்கோ, கவலைப்படுகிற மாதிரித் தோன்றுகிறது, பிரியரஞ்சன்'' என்றாள் அவள் வருத்தத்துடன்.

''ம்ம்ம்... உன் அண்ணன் விஷயம் எப்போதும், அவருக்குக் கவலைதானே?'' என்றான் அவன்.

''ஊகூம். அதில்லை. அண்ணன் பற்றி, அப்பா முதலில் ரொம்பவே கவலைப்பட்டது உண்டுதான். ஆனால் அது கொஞ்சம் கொஞ்சமாக மாறிவிட்டது. அதுவும் ஆண்டுப் பிறப்பின் பின், அண்ணன் மீண்டும் கடைக்கு வரக் கூடும் என்ற நினைப்பையே, விட்டுவிட்ட மாதிரிதான். ஊகூம். அதுவல்ல அப்பாவின் கவலை'' என்றாள் அவள் உறுதியாக.

ஓரக் கண்ணால் அவளைப் பார்த்து ''ஒருவேளை மகளுக்குத் திருமணம் செய்கிற கவலையாக இருக்கும்'' என்றான் அவன் சிறு முறுவலுடன்.,

''அதெல்லாம் கிடையாது'' என்று மறுத்தாள் சௌமியா. ''அந்த மாதிரி எண்ணமே வீட்டில் கிடையாது. நானும் இப்போதைக்குத் திருமணம் செய்து கொள்வதாக இல்லை'' என்றாள் அழுத்தம் திருத்தமாக.

''ஏன் அப்படி?'' என்று அக்கறையோடு விசாரித்தான் பிரியரஞ்சன்.

''நான் கடையில் அப்பாவுக்கு உதவியாக இருக்கப் போகிறேன். என்றைக்காவது அண்ணன் மனம் திருந்தி வந்து கடைப் பொறுப்பை ஏற்கும் வரை நான் அப்பாவுக்கு உதவி செய்யப் போகிறேன்.''

''ஆனால், உன் அப்பாவுக்கே தினகரன் கடைக்குத் திரும்புவார் என்ற எண்ணம் இல்லை என்றாயே. பிறகு, எதற்கு இந்த வீண் பிடிவாதம்?''

''இல்லை வருவார். அந்த நம்பிக்கை எனக்கு நிறைய இருக்கிறது. வேறு ஏதாவது முயற்சி செய்து பார்த்துவிட்டு அண்ணன் நிச்சயமாகக் கடைதான் மேல் என்று திரும்பி வரத்தான் போகிறார். அதுவரை நான் அப்பாவுக்கு உதவியாகக் கடையில் இருக்கத்தான் போகிறேன்'' என்று உறுதியான குரலில், சௌமியா இயம்பினாள்.



அவள் சற்றும் எதிர்பாராத வகையில் பிரியரஞ்சன் பலவாறு அவளுடைய அண்ணன் தினகரனுக்காகத்தான் வாதாடினான்.

ஒருவருக்குப் பிடிக்காத தொழிலில், அவரைக் கட்டாயப்படுத்தித் திணிக்கக்கூடாது. அப்படித் திணித்தால் அவரால் முழு ஈடுபாட்டுடன் வேலை செய்ய முடியாது. வருங்காலம், 'ராட்ரேஸ்' என்பார்களே, அதுபோல முண்டியடித்துதான் வெற்றி பெற முடிகிற காலம். எதிலும் போட்டி அதிகம். கடனே என்று தொழில் செய்து யாராலும் ஜெயிக்க முடியாது. அதனால் தினகரனை அவன் போக்கில் விட்டு விடுவது நல்லது.

அவளது விருப்பத்துக்கு எதிராக பிரியரஞ்சன் அண்ணனைச் சார்ந்து பேசியது வருத்தத்தைத் தர, ''அப்படியானால், கடையை விற்று அந்தப் பணத்தை அண்ணன் சின்னத் திரைக்கு மெகா சீரியல் எடுக்கக் கொடுத்து விடுவதுதான் சரி என்கிறீர்களா?'' என்று சௌமியா ஆத்திரத்துடன் கேட்டாள்.

சற்றுத் திகைத்துவிட்டு, ''சின்னத்திரையில் அவருக்குப் பழக்கம் இருக்குமானால், அதில் தப்பில்லை. ஆனால், எந்தத் தொழிலானாலும், சுய பாதுகாப்புக்கு வைத்துக் கொள்ளாமல், முழுப் பணத்தையும், தினகரனிடம் கொடுத்துவிட வேண்டாம்

என்று, உன் தந்தையிடம் எச்சரித்து வை'' என்று கரிசனமாகச் சொன்னான் அவன்.

'உச்'சுக் கொட்டினாள் அவள். இன்னமும் அவன் தினகரனுக்கு ஆதரவாகப் பேசியது, அவளுக்குப் பிடிக்கவில்லை.

சற்று நேர அமைதிக்குப் பிறகு, ''என் சின்னச் சித்தப்பா பிள்ளைகளை, அழைத்து வரச் சொன்னாயே. நாளைக்கு அவர்களுக்கு விடுமுறை. அழைத்து வரட்டுமா? சித்தி வேறு, 'இந்தப் பிசாசுகளிடமிருந்து, எனக்குக் கொஞ்ச நேரமாவது, விடுதலை தா ரஞ்சி' என்று கெஞ்சுகிறார்கள். ஒரு மணி நேரம், நாம் இருவரும், அவர்களைக் கட்டி மேய்க்கலாமா?'' என்று, பிரியரஞ்சன் அவளிடம் கேட்டான்.

தலையாட்டிவிட்டு, ''இருவரும், உங்களை, அண்ணா என்று தான் கூப்பிடுவார்களா?'' என்று சௌமியா விசாரித்தாள். உள்ளூர, இவன் வீட்டில் இவனை, ரஞ்சி என்று தான் அழைப்பார்கள் போல என்று குறிப்பெடுத்தது அவளது மனது.

''ஹூம். அந்தக் கேவலத்தை, என் வாயாலேயே சொல்லச் சொல்லுகிறாயா?'' என்று வருத்தம் காட்டிக் கேட்டான் பிரியரஞ்சன்.

''காலம் கலி காலம் அல்லவா? பாவம், நீங்கள் உங்கள் வாயால்தானே சொல்ல முடியும். அத்தோடு தன் கையே தனக்குதவி. வாயும் அப்படித்தான். அதனால் உங்கள் வாயாலேயே சொல்லி விடுங்கள்'' என்றாள் அவள் மேதாவி போல.



சிரித்துவிட்டு, ''இந்த இரண்டுக்கும் முதலில் 'ர' வராது. அதற்கு மேல் மழலை வேறு. அஞ்சி அண்ணா என்று தொடங்கி 'அச்சண்ணா' ஆகிக் கடைசியில் இப்போது 'அக்சூ' என்று தும்மல் போட்டே கூப்பிடுகிறதுகள்'' என்று அவன் பாவனையோடு கூற, சௌமியாவுக்கும் சிரிப்பு வந்தது.

திடுமெனப் பயந்தவன் போல ''இதைச் சாக்கிட்டு நீயும், தும்மல் போட்டே என்னைக் கூப்பிடத் தொடங்கிவிடாதே தாயே'' என்று அவன் கெஞ்சிய விதத்தில், அவளுக்கு இன்னமும் சிரிப்பு வந்தது.

முந்திய இரவிலிருந்து மனம் உளைந்ததாலோ, என்னவோ இந்த சிரிப்பை இதமாக உணர்ந்து நன்றாகவே நகைத்தாள் அவள்.

சிறு முறுவலுடன், அவள் சிரிப்பதைப் பார்த்திருந்தான் பிரியரஞ்சன்.

சிரிப்பினூடே, அவன் முகத்தைப் பார்த்த சௌமியாவுக்கு விஷயம் புரிந்தது.

வாடியிருந்த அவளை உற்சாகப்படுத்திச் சிரிக்க வைப்பதற்காகவே, அவன் இந்தக் கதையெல்லாம் சொல்லியிருக்கிறான்.

அருணா திருமணமாகிப் போன பிறகு, அவள் குடும்பத்தில் இந்த மாதிரி முயற்சியெல்லாம் யாருமே செய்ததில்லை. தந்தை கொஞ்சம் பார்ப்பார் என்றாலும் அப்பா நிலையிலிருந்து ரொம்ப இறங்கி வரவும் அவரால் முடியாது. அத்தோடு தலைமுறை வேறுபாடு வேறு. கூடப்பிறந்தவனோ, வாழ வந்த அண்ணியோ செய்யாததை இவன் செய்கிறானே.

என்னவோ உள்ளே மிகவும் நெகிழ்ந்து போயிற்று அவளுக்கு.

கண்ணோரம் கரிக்க முறுவலித்தபடி ''உங்களை உங்கள் வீட்டில் எப்படிக் கூப்பிடுவார்கள்?'' என்று அவனைப் பற்றிக் கேட்டாள். ''அம்மா, அப்பா, இன்னும் நெருங்கிய உறவினர் எல்லாம் பிரியரஞ்சன் என்று முழுப் பெயரையும் சொல்லி நீட்டி முழக்கிக் கூப்பிட்டுக் கொண்டிருக்க மாட்டார்கள் அல்லவா?''

''நிச்சயமாய், பெயர் அழகாய் யாரும் இங்கே வைக்காத மாதிரி இருக்கிறது. என் ஜோதிடப் படியும் சரியாக வருகிறது என்று நீளமாய் இரட்டைப் பெயராக வைத்து விட்டார்கள். ஆனால், என்ன சொல்லி அழைப்பது என்பதில் ஏகப்பட்ட குளறுபடி. பிரியா என்றால், பெண்பெயராக இருக்கிறதாம். ரஞ்சன், ராஞ்ச், என்று பலதும் முயன்றுவிட்டு, 'ரஞ்சி'யில் முடித்திருக்கிறார்கள். ஆனால் கோபமாய்க் கூப்பிடும் போது மட்டும் 'பேய் முட்டாள்'. சில சமயம் 'ஓராங்குட்டான்'' என்று, அவன் விவரிக்க, சௌமியா மட்டும் கலகலவென்று நகைத்தாள்.

தொடர்ந்து, ''உன் பெற்றோரைப் போல உனக்கு பொருத்தமா 'அழகி' என்று பொருள்படும் விதமாக அதே சமயம் அழைக்க வசதியாகச் சின்னதாகப் பெயர் வைக்க, எங்கள் வீட்டுப் பெரியவர்களுக்குத் தெரியாமல் போனது கூடத் தப்பில்லை. அதனால் கண்ட பேர் சொல்லி அழைப்பதைக் கூட மன்னித்து விடலாம். ஆனால், என் அதிரூப சௌந்தரியத்தைப் பார்த்த



பிறகும், ஓராங்குட்டான் என்று அழைக்க எப்படித்தான் மனம் வருகிறதோ?'' என்று சோகமாய்ச் சொல்லி, அவளை இன்னமும் நகைக்க வைத்தான்.

அவளைச் சிரிக்க வைப்பதென்று கங்கணம் கட்டிக்கொண்டு பேசுகிறான்.

சிரித்து முடித்துவிட்டு அவன் முகத்தைப் பார்த்து ''ரொம்ப நன்றி'' என்றாள், மெல்லிய குரலில்.

ஏன், எதற்கு என்று கேளாமல் ''எந்தவிதத் துன்பமும் நாம் நினைக்கும் அளவுக்குப் பெரிதானது அல்ல சௌமியா. அதற்காக, வள்ளுவரைப் போல துன்பம் வரும் போது சிரிக்க வேண்டும் என்று நான் சொல்ல மாட்டேன். நம்மைப் போன்ற சாதாரண மனிதர்களால் அது முடியாததும் கூட. ஆனால், 'க்ராஸ் த பிரிட்ஸ் வென் இட் கம்ஸ்' என்று ஆங்கிலத்தில் சொல்வது போல, பிரச்சினை வரும்போது அதைத் தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டுமே தவிர இதுவோ, அதுவோ என்று சும்மா வீணாகக் கவலைப்படக் கூடாது'' என்றான் பிரியரஞ்சன்.

கைகட்டி வாய் பொத்தி, ''உத்தரவுப்படியே வாத்தியாரய்யா'' என்று அவள் பணிவுடன் கூற இருவருமே நகைத்தனர்.

''வாத்தியாரய்யா அல்ல. ரஞ்சன் அல்லது பிரியன்.''

மறுநாளை அப்போதிருந்தே சௌமியா ஆவலோடு எதிர்பார்க்கத் தொடங்கினாள்.

தந்தையும் மறந்து விடவில்லை.

அவர் அறியாமல் அவள் கவனித்த அளவில் தாமோதரன் உற்சாகமாக இல்லையே தவிர வருத்தமாகவும் இருக்கவில்லை.

அவ்வப்போது, எதையோ யோசிக்கிற பாவனை அவர் முகத்தில் தென்படவே செய்தது. ஆனால் கடைக்குக் கொள்முதலுக்குச் செல்லுமுன் கூட அவர் முகம் இப்படித்தான் இருக்கும்.

பிரியரஞ்சன் சொல்லுவது போல, என்னவென்றே தெரியாமல் கவலைப்படுவதை விட, பிரச்சினை வரும்போது அதைப் பற்றி யோசிப்பது மேல்.

அத்தோடு அந்தக் கவலையை ஒதுக்கிவிட்டு மறுநாள் வர இருந்த அபி, விபுவைப் பற்றியும் அவர்களை அழைத்து வருவதாய்ச் சொன்னவனையும் பற்றிய சிந்தனையில் மனதை ஈடுபடுத்தினாள், அவள்.

அது எளிதாக இருந்ததோடு, இனிமையாகவும் இருந்தது.

## 10

வேண்டியவர்கள் வீட்டுப் பிள்ளைகளுக்கு என்று, தாயாரிடம் பணியாரம், கலகலா என்று சில பலகாரங்களைச் செய்து வாங்கிக் கொண்டு முன்னதாகவே போய் அவர்களுக்காகக் காத்திருந்தாள்.

அவள் சென்ற சிறிது நேரத்திலேயே, பிரியரஞ்சனும் அவனுடைய சித்தப்பா பிள்ளைகளும் வந்து சேர்ந்தார்கள்.



காதணிக்காகத் துளையிட்ட அடையாளம் அபிக்கு இருந்தது. இல்லாவிட்டால், இரு பிள்ளைகளுக்கும் இடையே வேறுபாடே தெரிந்திராது. நோண்டி நோண்டி, ஏழெட்டு காதணிகளைத் தொலைத்து விட்டதால் வளர்ந்தபின் அவளாகக் கேட்கும் வரை தோடு வேண்டாம் என்பது அபியுடைய அன்னையின் தீர்மானம். காது ஓட்டை தூர்ந்தால் கூடப் பரவாயில்லை, பிறகு ஒரு தரம் குத்திக் கொள்ளலாம் என்று விட்டாளாம்.

தொலைத்தவற்றுள் ஒன்று காது குத்துக்காக அபியுடைய பாட்டி வீட்டில் போட்ட வைரம் என்று பிரியரஞ்சன் தெரிவிக்கவும் வளர்ந்தபின் காது குத்தினால் வலிக்கும் என்று சொல்ல எண்ணிய சௌமியா 'கப்' பென வாயை மூடிக் கொண்டாள்.

அடுத்த ஒரு மணி நேரம் எப்படிக் கழிந்தது என்றே சொல்ல முடியாமல், அவ்வளவு விரைவாக முடிந்து போயிற்று. சௌமியா கொண்டு போயிருந்த பலகாரங்களை நொறுக்கிவிட்டு, பூங்காவில் இங்கும் அங்கும் ஓடத் தொடங்கிய பிள்ளைகளின் பின்னே, இளசுகள் இருவரும் ஓடிக் கொண்டே இருந்தார்கள், அவ்வளவே.

ஒரு வினாடி ஊஞ்சலாடுகிறார்கள் என்று விட்டால், மறு நிமிஷம் சறுக்கு மரத்தில் வழுக்கிக் கொண்டு இருந்தார்கள். அடுத்த நிமிஷம் ஜங்கிள் ஜிம், சீசா, மெரி கோ ரவுண்ட், எதையும் விடவில்லை.

கடைசியாக ஐந்து நிமிஷம் முன்னதாகவே கிளம்பத் தொடங்கியும் இருவரையும் பிடித்துக் காரில்

அடைக்குமுன் பத்து நிமிஷம் அதிகப்படியாகவே ஆகிப்போயிற்று.

அப்போது ஐஸ்கிரீம் ஆசை காட்டித்தான் அவர்களைக் காரில் ஏற்றினான் அவன்.

மூச்சு வாங்க தலை முடி பறக்க நின்றவளைப் பார்த்துச் சிரித்தான் பிரியரஞ்சன். ஒற்றை விரலால் அவளது மூக்கு நுனியை லேசாகத் தட்டி ''இரவு அடித்துப் போட்டாற்போலத் தூங்குவாய்'' என்றான். ''இதுகளை விட்டுவிட்டு என்னைப் போய் ஒராங் குட்டான் என்கிறார்களே, என்ன அநியாயம்.''

''நீங்களும் இப்படித்தான் இருந்தீர்களோ என்னவோ? மரபணு உங்களைப் போல அமைந்து விட்டிருக்கிறது, என்று முறுவலித்தாள் அவள். ஒரு மணி நேரத்துக்கே இப்படி இருக்கிறதே, பாவம் உங்கள் சித்தி'' என்றவள் உடனேயே ''ஆனால் இப்படிக் கெட்டிக்காரப் பிள்ளைகளைப் பெறக் கொடுத்து வைத்திருக்க வேண்டும்'' என்றாள்.

காலரைத் தூக்கி விட்டு ''அதாவது என்னைப் போல பிள்ளைகளைப் பெற'' என்று சிரித்தான் அவன்.

ஏதோ மூச்சடைப்பது போல அவள் உணருகையில் ''அச்சண்ணா'' என்று அழைப்புடன் காரின் ஹார்ன் பிளிறிற்று ''உள்ளே எதையேனும் பண்ணி வைக்குமுன் கிளம்புகிறேன் பை,'' என்று அவன் ஓட, இன்னொரு நாள் அழைத்து வாருங்கள்'' என்று அவள் உரக்கச் சொல்லி முடிக்குமுன் ''நாளைக்கு வாயோம்'' என்ற இரு மழலைகளின் கோரசோடு, கார் கிளம்பியது.



என்னவோ மனதுக்கு மிகவும் திருப்தியாக இருந்தது. அவளுக்கு உற்சாகமாகக் கூட.

அன்றிரவு, தந்தையின் மனதை உறுத்துவது என்ன என்று சௌமியாவுக்குத் தெரிய வந்தது.

இரவு வீட்டுக்குத் திரும்பிச் செல்லுகிற போது, தெரு மூலையில், புதிதாக வேலை நடந்து கொண்டிருந்த கட்டிடத்தின் முன் காரை நிறுத்தி அந்தக் கட்டிடத்தை உற்றுக் கவனித்தார் தாமோதரன்.

தொடர்ந்து அவரது பெருமூச்சின் காரணம் புரியாமல் ''என்னப்பா?'' என்று மெல்லக் கேட்டாள் மகள்.

''மூன்று மாடிக் கட்டிடம், சும்மாவே நம் இடத்தை விட அளவில் பெரியது. தெரு மூலையில் வேறு இருக்கிறது. இரண்டு தெரு அணுகலும், நாலு தெரு பார்வையும் கிடைக்கும். நம்மைப் போல எலக்ட்ரானிக் சாமான்கள் கடை என்று ஒரு டீலர் சொன்னார். அதுதான் யோசனையாக இருக்கிறது'' என்றார்.

அதன் பின் அவ்வப்போது அந்த இடத்தில் காரை நிறுத்தி வேலை நடப்பதைச் சில நிமிஷ நேரம் பார்ப்பது அவரது வழக்கம் ஆயிற்று.

பூங்காவில் பிரியரஞ்சனை அடிக்கடி சந்திப்பது சௌமியாவின் வழக்கம் ஆயிற்று. மேலும் இரு முறை அபி, விபுவையும் அழைத்து வந்தான் அவன்.

'டேஸ்டி பலகார அக்கா' என்று அவளுக்கு அந்த வாண்டுகள் பெயர் வைத்தன.

பிரியரஞ்சனை அடிக்கடி சந்திப்பதை அப்படியே ஒப்பிக்காவிட்டாலும், தந்தையிடமிருந்து சௌமியா அதை அடியோடு மறைக்கவில்லை. பூங்காவில் அவனுடைய சித்தப்பா பிள்ளைகளோடு பார்த்ததைச் சொல்லி பரிசுப் பை ஒன்றையும் எடுத்துப் போய் பிரியரஞ்சனிடம் கொடுத்தாள் அவள்.

இந்த மாலை நேரங்களுக்காகவே வாழ்வது போலக் கூட சௌமியாவுக்குத் தோன்ற அது அவளுக்கே ஆச்சரியத்தை அளித்தது. எப்படியோ கடைபற்றிய கலக்கத்துக்கு அதை ஆற்றும் அருமருந்தாகச் செயல்பட்டன, இந்தச் சந்திப்புகள்.

கடை பற்றிய கலக்கமும் தொடர்கதையாகவே இருந்தது.

கட்டப்பட்டு வரும் பெரிய கடை ஓரமாகக் காரை நிறுத்திப் பார்த்துவிட்டு "லிஃப்ட் வேறு வைக்கிறார்கள். நம் கடை போல நாலு மடங்கு சாமான்களால் நிரப்பப் போகிறார்களாம். நம் கடைக்கு இனி யாரேனும் வருவார்களோ என்னவோ?" என்று கலங்கினார் அவர்.

"வருவார்கள் அப்பா. நம் வாடிக்கையாளர்கள் அப்படி எளிதாக அடுத்த கடைக்குப் போய்விட மாட்டார்கள்" என்று தந்தையிடம் சமாதானம் சொன்ன போதும் சௌமியாவுக்கும் கவலையாகத்தான் இருந்தது.

கவலையை அப்படியே பிரியரஞ்சனிடம் கொட்டினாள். "இவ்வளவு நாள் அப்பா இங்கே



தனிக்காட்டு ராஜா மாதிரி இருந்துவிட்டார். கொஞ்சம் தள்ளி உள்ள கடைகளை விட நாணயமாக நடந்து கொண்டதால் நம்மிடம் இல்லை என்றால்தான், அடுத்த கடைக்குப் போவார்கள். இப்போது என்ன ஆகுமோ என்று ரொம்பவே கவலைப்படுகிறார்" என்று வருத்தத்துடன் இயம்பினாள்.

"செட்டி பெருத்தால் பட்டம்" என்றான் அவன் "சாதாரணமாக முன் காலத்தில் ஓர் இனத்தாரிடம் மட்டும் வாணிபம் இருந்ததால் அப்படிச் சொன்னார்கள். அதையே மாற்றி இப்போது கடைகள் பெருத்தால் பட்டணம் என்று வைத்துக் கொள்ள வேண்டியதுதான். கடைகள் அதிகமாக ஆக வியாபாரமும் அதிகமாகும் குறையாது."

"ரொம்பவும் பெருத்த கடையா எங்களை விட நாலு மடங்கு அதிகச் சரக்குடன் புதிய கடை வந்தாலும் பாதிக்காது என்றா சொல்லுகிறீர்கள்? அதெப்படி? கட்டாயம் பாதிக்கும் என்று அப்பா சொல்லுகிறாரே." என்று கவலையுடன் கேட்டாள் அவள்.

ஒரு கணம் தயங்கினான் பிரியரஞ்சன். பிறகு "வியாபாரம் என்றால் எப்போதும் இந்த அபாயத்தை எதிர்பார்த்தபடிதானே தொழில் நடத்த வேண்டும்? நம்மைவிடப் பெரிய கடை வரும் வாய்ப்பு எப்போதுமே இருக்கத்தான் செய்யும். அதற்குச் சரியாக முதலீடு செய்து கடையை விரிவு படுத்தத் தயாராக இருக்க வேண்டும்" என்றான்.

"ஆனால் அதற்கு நிறையப் பணம் தேவைப்படுமே, அப்பாவிடம்..." என்றவளுக்கு

அதற்கு மேல் சொல்ல மனம் வரவில்லை. தந்தையிடம் பணம் இல்லை என்று எப்படி வெளியே சொல்வது? இந்த பிரியரஞ்சனிடம் கூட?

அவள் தயங்கிக் கொண்டிருக்கையிலேயே பிரியரஞ்சன் பேசினான். ''உன் வீட்டில் இன்னொரு பிரச்சினையும் இருக்கிறது சௌமி. உன் அண்ணன் தினகரனுக்கு இந்தத் தொழில் விருப்பம் இல்லை. அவர் நடந்து கொள்ளும் விதத்தைப் பார்க்கும்போது அவருக்கு வியாபாரம் சரிப்பட்டு வரும் என்று எனக்குத் தோன்றவில்லை. இது கொக்கு மாதிரி உட்கார்ந்து காத்திருந்து லாபம் காண வேண்டிய தொழில். அவருக்கு இன்று முதலீடு செய்தால் நாளை பத்து மடங்காகக் கொட்ட வேண்டும் என்கிற மனோபாவம். அப்படியிருக்க...''

கிட்டத் தட்ட அவள் வீட்டு நிலையைப் புட்டு வைத்திருக்கிறான்.

எப்படித் தெரியும்?

அவள் மனதைக் கொட்டினாள். உண்மைதான். ஆனால், அதை மட்டும் வைத்துக் கொண்டு இவ்வளவு தெளிவாகச் சொல்ல முடியாது. வரிகளிடம் ஊடே படிப்பது என்பார்களே, அது போலப் பலதை ஊகித்தும் இருக்கிறான். ஊகமும் சரியாகவே இருந்திருக்கிறது.

சரியாக ஊகித்தவன், பிரச்சினைக்குத் தீர்வையும் சரியாகவே சொல்லக் கூடும் அல்லவா?

அப்படி அவன் சரியாக ஒரு தீர்வு சொன்னால் தந்தையின் துன்பம் தீருமே?



''மேலே சொல்லுங்கள் ரஞ்சன்,'' என்றாள் சௌமியா பரபரப்புடன்.

நான் சொல்ல... ''எனக்குச் சரியானதாகப்படும் இந்தத் தீர்வு உனக்குப் பிடிக்காமல் போகலாம். குறைந்த பட்சமாக இப்போது கொஞ்சமும் பிடிக்காது. அது மட்டும் எனக்கு நிச்சயம்.''

''முதலில் அந்தத் தீர்வு என்னதென்று சொல்லுங்களேன்.''

அப்போதும் தயங்கி ''நான் என்ன சொன்னாலும் அதற்காக என்னை வெறுக்க மாட்டேன் என்று சத்தியம் பண்ணு'' என்றான் அவன். ''ஏனென்றால் இதைச் சொல்வதற்காக நீ என்னையே தப்பாக எண்ணக் கூடும் என்பதால் வேறு எனக்குத் தயக்கமாக இருக்கிறது'' என்றான் அவன்.

''சும்மா ஓர் அபிப்பிராயம் தானே? அதை நாங்கள் கடைபிடித்தே ஆக வேண்டும் என்கிற கட்டாயம் ஒன்றும் கிடையாதே. அதைச் சொல்வதில் அப்படியென்ன தயக்கம்?''

''ம்ம்ம், இவ்வளவு சிரமப்பட்டுக் கொண்டு இந்தக் கடையை உன் தந்தை நடத்தியே ஆக வேண்டுமா? வழி வழியாய் நடத்துகிற தொழில் இன்னமும் வழி வழியாகத் தொடரப் போவதும் இல்லை எனும்போது..''

''எனும்போது?''

''தோல்வி என்று ஆகுமுன் கடையை இப்போது விற்றால் நல்ல விலை..''

''மேலே சொல்லாதீர்கள்'' என்று அவசரமாகத் தடுத்தாள் சௌமியா.

அப்பா எவ்வளவு மதிப்புடன் மரியாதையுமாக நடத்துகிற கடை. இதைச்சற்று மட்டமாகப் பேசுகிறான் என்றுதானே, அண்ணனிடம் அவருக்கு அவ்வளவு கோபம்.

அதை விற்றே விடுங்கள் என்று அவரிடம் அவளால் எப்படிச் சொல்ல முடியும்?

சொல்ல முடியாது என்று முடிவு செய்து அப்படி ஒரு வழியை அவன் வாயாலும் சொல்ல வேண்டாம் என்றும் தீர்மானித்து அவன் பேச்சைத் தடுத்தாள் சௌமியா.

அவனும் தயக்கத்துடன் தானே சொல்லிக் கொண்டிருந்தான்? தோளைக் குலுக்கிவிட்டுப் பேசாதிருக்கலானான்.

சிறு மௌனத்தின் பின் ''அப்பாவுடைய வாடிக்கையாளர்கள் அப்பாவுக்கு விசுவாசமானவர்கள். அவ்வளவு லேசில் அடுத்த கடை தேடி ஓடிவிட மாட்டார்கள்'' என்றாள் சௌமியா.

ஆனால் சொல்லும்போதே அவளது குரல் இறங்கிவிட அவனும் ஆமோதிப்போ, ஆட்சேபனையோ செய்யாமல் சும்மா இருந்தான்.

ஆனால் அவனது மௌனமே மறுப்பாய்த் தோன்ற ''போவார்கள் என்கிறீர்களா?'' என்று மெதுவாகக் கேட்டாள்.

அவளைத் திரும்பிப் பார்த்துவிட்டு அவன் சொன்னான் ''வியாபாரத்தில் வாடிக்கையாளர்



விசுவாசம் என்பதெல்லாம் கிடையாது என்று உனக்கு நன்றாகவே தெரியும். ஒரு கடையில் ஐந்து ரூபாய் விலை குறைத்துத் தருகிறார்கள் என்றால் பதினைந்து ரூபாய் ஆட்டோவுக்கு செலவழித்துக் கொண்டு அங்கே போய் வாங்குவார்கள். இந்தக் கடையில் விலை அதிகம் என்று முத்திரையும் குத்தி விடுவார்கள். நாலு நாளில் நாம் இன்னொரு பொருளில் பத்து ரூபாய் குறைத்து விற்றால், நாம் நல்லவர்கள் ஆகிவிடுவோம். அத்தோடு பணத்தை வாங்கிக் கொண்டு பொருளைக் கொடுக்கிறோம். வாடிக்கையாளர்கள் பணத்தைக் கொடுத்துவிட்டுப் பொருளை வாங்குகிறார்கள். இதில் நாணயத்துக்குத் தான் இடம் உண்டே தவிர, விசுவாசம் எங்கிருந்து வரும்? பொய் புரட்டு, ஏமாற்று வேலை செய்யாமல் விற்றால் நாணயமான வியாபாரியாக இருப்போம். அவ்வளவே. மற்றபடி விசுவாசத்தை எல்லாம் எதிர்பார்க்கக் கூடாது.''

''பொய் புரட்டா? சாமானைக் காட்டுகிறோம், விற்கிறோம். பொருள் எப்படிப் பட்டது என்று அறிய தயாரிப்பாளர் கொடுக்கும் அறிக்கை இருக்கிறது. இதில் பொய்யும் புரட்டும் எங்கிருந்து வரும்?''

''ஏன் வராது'' ஒரு மோசமான தயாரிப்பாளரின் பொருளை நம்பிக்கையான நிறுவனத்தின் கிளை நிறுவனத் தயாரிப்பு என்று கூசாமல் சொல்லி விற்பார்கள். புதுத் தயாரிப்புகளையும் அதிகக் கமிஷனுக்காக அப்படிச் சொல்லி தள்ளி விடுவது உண்டு. பழசை எடுத்துக் கொண்டு புதுசில் விலை குறைத்துக் கொடுப்பது என்பது என்னவாம். நேராக

முழுப் பணத்தையும் கொடுத்தால் அந்தத் தள்ளுபடி அவர்களுக்கு சும்மாவே வந்து விடாதா? அப்புறம் வீட்டுக்கு அனுப்புகிற செலவில், கோல்மால் பண்ணுவது இன்னும் எத்தனை இல்லை?''

அவனை ஆச்சரியமாகப் பார்த்தாள் அவள். ''வியாபாரத்தைப் பற்றி இவ்வளவு தெரிந்து வைத்திருக்கிறீர்களே'' என்று வியப்புடன் கூறினாள்.

மறு பக்கத்தில் இருந்த சிறு கல்லை எடுத்து சற்றுத் தொலைவில் குப்பை குவித்து வைத்திருந்த இடத்தில் வீசிப் போட்டான் அவன்.

யோசனையில் ஆழ்ந்திருந்தவள் நிமிர்ந்து ''இதெல்லாம் அப்பாவுக்கும் தெரியும்தானே, அவராக தக்க முடிவெடுப்பர்'' என்று முடித்தாள்.

அதற்கும் ஒரு தோள் குலுக்கல்தான் பதிலாக இருந்தது.

பிரியரஞ்சனுடன் பேசியதை நினைத்துக் கொண்டு இரவில் படுத்திருந்தவளுக்கு வியாபாரம் பற்றிய அவனது அறிவு அப்போதும் ஆச்சரியமாகத்தான் இருந்தது.

சர்வே எடுக்கக் கடை கடையாகச் செல்லும்போது கண்ணையும் காதையும் திறந்தே வைத்திருப்பான் போலும். இவ்வளவு கண்டு பிடித்திருக்கிறானே இவனெல்லாம் கடை வைத்து வியாபாரம் செய்தால் மிகவும் வெற்றிகரமாக நடத்துவான் என்று எண்ணியபடியே உறங்கிப் போனாள் அவள்.



## 11

தெரு முனைக் கடையில் இரவும் பகலுமாக வேலை வெகு வேகமாக நடந்தது.

லாரிகளின் போக்குவரத்தும், உடைப்பதும் அடிப்பதுமான ஓசைகள் ஒவ்வொன்றும் இப்போது சவப் பெட்டியில் ஆணி அடிக்கும் ஓசை போல மனதை சோர்வுறச் செய்தன. விஷயம் தெரிந்து விட்டது அல்லவா?

''உங்கள் அப்பா கடையைக் காலி பண்ண ஆள் வருகிறதாமே'' என்று அறையினுள்ளிருந்து தினகரிடம் சத்தமாகக் கெக்கலி கொட்டினாள் ஆனந்தி.

தினகரன் நேரே தந்தையிடம் வந்து ''இப்போதாவது நான் சொல்வதைக் கேளுங்கள். வந்த விலைக்குக் கடையை விற்றுவிட்டுப் பணத்தை என்னிடம் கொடுங்கள். ஆறே மாதத்தில் உங்களை அரண்மனையில் வாழ வைக்கிறேன்'' என்றான் அவன்.

''எனக்கு இந்த வீடே போதும்பா'' என்றார் தந்தை அமைதியாக.

''நீங்கள் உருப்படுவது இந்த வீட்டில் யாருக்குப் பிடிக்கிறது'' என்று தினகரனின் நெற்றியில் இல்லாத வியர்வையைத் தன் துப்பட்டாவால் துடைத்து விட்டாள் அவன் மனைவி.

என்னமாய்க் கிளப்பி விடுகிறாள்.

ஆத்திரத்துடன் ஏதோ சொல்ல வாய் திறந்த போது ஒற்றை விரல் உயர்த்தி மகளைத் தாமோதரன் அடக்கினார்.

பிறகு, கடைக்குச் செல்லும்போது மகளிடம் சொன்னார் ''நாம் யாராவது நேரடியாக ஏதாவது ஒரு வார்த்தை சொல்லிவிட மாட்டோமா என்றுதான் ஆனந்தி காத்திருக்கிறாள். அந்த ஒரு வார்த்தை நம்மிடமிருந்து வந்து விட்டால் தினகரனிடம் அவள் தன்னை நியாயப் படுத்திக் கொண்டு விடுவாள். அப்புறம் நம் வீடு ரணகளம் ஆகிவிடும். அவள் குரல் ஊர் முழுக்கக் கேட்கும். அந்தக் கேவலம் நமக்குத் தேவைதானாம்மா? யோசி. அதைவிட வாயை மூடிக்கொண்டே இருந்துவிடுவது நல்லதில்லையா.''

''உங்களைக் கூட அண்ணி எதிர்த்துப் பேசி விடுவாளாப்பா.''

''கட்டாயம்'' என்றார் பெற்றவர். ''உனக்கு நான் தந்தை. மரியாதைக்குரிய பெரிய மனிதன். ஆனால், அவளுக்கு மரியாதை காட்டப் பட வேண்டிய இடத்தில் இருக்கும் ஒரு முட்டாள் கிழவன்.''

''அப்பா!''

முறுவலித்து, ''ஆனந்தி மனதில் இருப்பதைச் சொன்னேனம்மா. நான் ஒதுங்கிப் போவதால் அவளால் என்னை வெளிப்படையாக எதிர்க்க முடியவில்லை. எல்லாம் தினகரன் மூலமாகவே வருகிறது. அது ஓரளவு நாகரீகமாகவும் இருக்கிறது. நேரடிப் பேச்சுக்குப் போனோமானால், நாயினும் கேவலமாகி விடும்'' என்றார் அவர்.



''ஆனால் நான் கேட்டால் என்னப்பா?''

''நீ என்னைத் தாங்கித் தானேம்மா பேசுவாய்? நான்தான் உன்னைப் பேசவைத்ததாக வரும். உன்னுடன் குடுமிபிடிச் சண்டை போடக்கூட ஆனந்தி அஞ்சமாட்டாள். தயங்கவும் மாட்டாள். உன்னை ஒருவர் கண்டபடி திட்டினால் என்னால் பொறுக்க முடியுமாடா?''

''அப்பா'' என்ற மகளின் குரல் தழுதழுத்தது. ''நான் ஒரு போதும் அண்ணியை எதிர்த்துப் பேசாமல் எப்போதும் கவனமாக இருப்பேன் அப்பா'' என்று தந்தையிடம் உறுதி கூறினாள்.

ஸ்டியரிங் வீலில் இருந்து ஒரு கையை எடுத்து மகளைத் தட்டி கொடுத்தார் தாமோதரன்.

அன்று கடையில் இருக்கும்போது மனம் வேதனைப்படும் படியாக ஒன்று நடந்தது.

வழக்கமாக அவர்களது 'தினா ஸ்டோர்'சில் வாங்குகிற வாடிக்கையாளர்தான். அலுவலகத்துக்குப் போகிற வருகிற வழியில் வந்து பேசிக் கொண்டிருப்பார்.

அன்று வந்தவரிடம் ''நீங்கள் கேட்ட மாதிரி 'போர்ட்டபிள் மாடல்' டீவி வந்திருக்கிறது சார் பார்க்கிறீர்களா?'' என்று தாமோதரன் கேட்டார்.

அதற்கு அந்த மனிதர் சொன்ன பதில் சௌமியாவை அதிர வைத்து விட்டது.

''கொஞ்ச நாள் போகட்டும் என்றிருக்கிறோம் சார். தெரு மூலையில் புதுக்கடை திறக்கிறார்களாம் என்கிறாள் மனைவி. அங்கே எப்படி என்று பார்த்துக்

கொண்டு அப்புறம் தேவைப்பட்டால் பிறகு சொல்லுகிறேன்'' என்றார் அவர்.

வியாபாரத்தில் வாடிக்கையாளர் விசுவாசம் என்பதெல்லாம் கிடையாது என்று பிரியரஞ்சன் கூறியது எவ்வளவு சரியாக இருக்கிறது. அவர் சொன்னார் என்று வரவழைத்து வைத்தால் வேறு கடையில் பார்க்கப் போகிறாராமே?

''அப்படியா சார்? செய்யுங்கள்'' என்று முகம் மாறாமல் கூறிய போதும் தந்தையின் மனம் எப்படியிருக்கும் என்று உணர்ந்து வேதனைப்பட்டாள் மகள்.

வாடிக்கையாளர் சென்றபின் ''என்னப்பா இப்படிச் சொல்லுகிறார்'' என்று கவலையுடன் கேட்டாள்.

''அப்படித்தான் சொல்லுவார்'' என்றார் தாமோதரன். ''அவருக்கு எதில் லாபம் வருமோ அதைத்தானே அவர் பார்ப்பார். ஆனால் ஒன்று. நம் கடையில் அதிகலாபம் வைப்பதில்லை. எம்.ஆர்.பியை விடவும் குறைத்துத்தான் கொடுக்கிறோம். அதனால் புது மோகம் தீர்ந்ததும் எல்லோரும், மீண்டும் நம் கடைக்கே திரும்பி வந்து விடுவார்கள் என்று நினைக்கிறேன். கொஞ்ச நாள் பல்லைக் கடித்துக் கொண்டு பொறுத்திருக்க வேண்டும் அவ்வளவே'' என்றார் தெளிவாக.

இது தனக்காக மட்டும் சொல்லப் பட்டதில்லை என்று சௌமியா புரிந்து கொண்டாள். அவளுக்குச்



சொல்லுகிற மாதிரி கடைச் சிப்பந்திகளுக்கும் தெம்பூட்டுகிறார்.

மணிவாசகம், சகாயம் இருவர் முகங்களும் தெளிவுறுவதைக் கண்டதும் தந்தைக்கு கைதட்டத் தோன்றியது அவளுக்கு.

ஆனால், இது அவர்களுக்காக மட்டுமே சொன்னதாயிருக்குமா? மெய்யாக நடக்கக் கூடியதுதான் என்ற நம்பிக்கையோடு சொன்னதா இல்லையா?

கேட்டுத் தெரிந்து கொள்ள மனமின்றி பேசாமல் இருந்துவிட்டாள் அவள்.

மனம் சோர்வுற இன்னொரு காரணமாக பிரியரஞ்சனையும் அடிக்கடி பார்க்க முடியாமல் போயிற்று. காரணம் அவனுக்கு வேலை அதிகமாம்.

முடிந்த வரை வந்து தலையைக் காட்டி விட்டுப் போனான்.

'செல்' நம்பர் கொடுத்தான். ஏதாவது மிக அவசியம் என்றால் தொடர்பு கொள்ளச் சொன்னான். ஆனால் நேரில் அவள் இருக்கும் ஒரு பொது இடத்துக்கு, அவன் வந்தால் அவனோடு உரையாடுவது, இயல்பாக இருந்தது. ஆனால் அவளாக அவனை அழைத்துப் பேசுவது என்றால் அவளுக்கு ஒரு மாதிரி தயக்கமாக இருந்தது. என்ன உரிமையில் அவனை அழைப்பது? ரயில் சினேகிதம் போல இந்தப் பூங்காப் பழக்கமும், சந்தித்தால் ஒரு 'ஹாய்'க்கு மேல் ஒன்றும் இல்லைதானே?

இல்லையா என்று எண்ணுகையில் மனதில் ஏதோ பிசைந்தது.

பிரியரஞ்சனின் செல் நம்பரைப் பத்திரப்படுத்தி வைத்த போதும், சௌமியா அதைப் பயன்படுத்தவே இல்லை.

நிதி அறிக்கைக்கு முந்திய பிப்ரவரி மாத விற்பனை, 'தினா ஸ்டோர்'சில் ஓரளவு குறைந்திருந்தது.

இந்நிலையில் தெலுங்கு வருஷப்பிறப்பு நெருங்கியது.

வழக்கத்தை ஒட்டி, சில லட்சங்களுக்குக் கடையில் சரக்கு வாங்கிப் போட்டார் தாமோதரன்.

ஆனால் புதிய கடையை உகாதியை ஒட்டித் திறந்ததால் அந்தப் பொருட்கள் விற்காமல் கடையில் அப்படியே தங்கிப் போயின.

"இந்தப் பகுதியில் யார் யார் இருக்கிறார்கள். வாங்குகிறவர்களின் இயல்பு, நன்கு விற்பனையாகிற காலம் எல்லாம் தெரிந்து சரியான சமயத்தில் கடையைத் திறந்திருக்கிறார்கள். அந்தக் கடைக்காரர்கள் கெட்டிக்காரர்கள் என்று தெரிகிறது" என்று தாமோதரன் தன்னை மீறிச் சிலாகித்தார்.

உண்மைதான் என்று எண்ணும்போதே சௌமியாவை என்னவோ உறுத்தியது. என்னவென்று சற்று நேரம் யோசித்துவிட்டு புரியாமலே அந்த முயற்சியைக் கைவிட்டாள்.

அழுகும் பொருள் அல்ல. இன்றில்லாவிட்டாலும் நாளை வைத்திருந்து விற்கலாம்தான். ஆனால் விற்றுக் கொண்டே இருந்தால்தானே லாபம் பார்க்க முடியும்? கடைச் சிப்பந்திகளின் சம்பளம்,



மின்சாரம், வீட்டுச் செலவு, எல்லாவற்றுக்கும் அந்த லாபம்தானே ஆதாரம்?

விற்க விற்க லாபத்திலிருந்து எடுத்துச் செய்ய வேண்டிய செலவுகள் விற்பனை குறைந்து, ஒன்றிரண்டு மட்டுமாய் விற்க, அந்த அசலையே எடுத்துச் செலவு செய்யும்படி ஆயிற்று.

ஜூன் மாதம், எப்போதும், இந்த மாதிரிப் பொருட்கள் அவ்வளவாக விற்காது.

எல்லோரும் பள்ளிக் கட்டணம், பஸ்பாஸ், சீருடை, நோட்டு, பென்சில் என்று அந்தச் செலவிலேயே மூச்சு முட்டிப் போயிருப்பார்கள். டி.வி.யும், மிக்சியும் யாருக்கு வேண்டும்?

வழக்கமாக விற்கும் ஒன்றிரண்டு கூட நின்று போயிற்று.

நிலைமையைச் சரிக்கட்ட பெரும் தள்ளுபடி விற்பனைக்குத் தாமோதரன் ஏற்பாடு செய்தார்.

கிட்டத்தட்ட லாபமே இல்லாத விலை, விற்பனை என்று கொஞ்சம் நடந்தது.

இத்தனை பிரச்சினைகளுக்கும் இடையே தந்தைக்கு உதவியாக ஒரு துரும்பை எடுத்துப் போடாவிட்டாலும் தினகரனும் அவனுடைய மனைவியும் ஏதேதோ பேசிக் கொண்டனர்.

'கிசுகிசு'வென்று, அவர்களுக்குள்ளும், பிறர் காது கேட்கவென்று உரக்கச் சிலதும்.

அவற்றுள் முக்கியமானது, சௌமியா திருமணத்தை அவர்கள் பொறுப்பில் விட்டால்

கோடீசுவர மாப்பிள்ளைக்கு அவளை 'ஜாம்ஜாம்' என்று திருமணம் செய்து வைப்பார்களாம்.

வீட்டில் யாரும் இந்தப் பேச்சைப் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை.

அப்படி ஒரு கோடீசுவர மாப்பிள்ளைக்கு அவர்கள் எங்கே போவார்கள்?

அடுத்துத் தீபாவளியைத்தான் தாமோதரன் மிகவும் நம்பிக் கொண்டு இருந்தார். ஆனால் அதுவும் பிசுபிசுத்துப் போயிற்று.

அன்று மின்சாரக் கட்டணத்துக்காக கையிருப்பிலிருந்து எடுத்துக் கொடுக்க நேர்ந்த போது தாமோதரன் ரொம்பவே கலங்கிப் போனார்.

இரண்டு பெரிய செலவுகளுக்கு சேர்க்க வேண்டும் என்று திட்டமிட்டுவிட்டு கையிருப்பை எடுத்துச் செலவிட்டால் எப்படி?

பதினைந்து ஆண்டுகளுக்கு மேலாக இன்னொரு பிள்ளையைப் போல அவர் கண்ணும் கருத்துமாக வளர்த்த கடை. ஆனால் அதைத் தொடர்ந்து நடத்துவது கல்லைக் கட்டிக்கொண்டு கடலைக் கடக்க முயற்சிப்பது போலத்தான், ஆன முதவில் அதிகம் செலவானால் மானம் கெட்டு மதி கெட்டு என்று அசலில் கை வைப்பவர்களுக்கு பாட்டே இருக்கிறது.

கடையை விடுவது ஒரு வேதனை என்றால் இன்றைய நிலையில் அதை விற்பதும் கடினமே. நஷ்டத்தில் இருப்பதை யார் வாங்குவார்கள்?

அடி எவ்வளவு பெரிதாக இருக்கப் போகிறதோ?



அன்று மொட்டை மாடியில் நின்று தாமோதரன் வெகு நேரம் சிகரெட் புகைப்பதைக் கண்டுவிட்டுக் கலங்கிய சௌமியா, மறுநாள், பிறர் பார்க்காத போது, தந்தை நெஞ்சைத் தடவி விட்டுக் கொண்டதையும், அவ்வப்போது இருமியதையும் ஓரக்கண்ணால் கண்டு, பதறிப் போனாள்.

இடையில் சற்று வெளியே போய் வருவதாகச் சொல்லி அவர் சென்றது மருத்துவரிடம் என்பதை வாங்கி வந்த மருந்துகள் தெரிவித்தன.

உடல் ஆரோக்கியத்தை முடிந்த அளவு தந்தை கவனித்துக் கொள்வார்தான். ஆனால் பிரச்சினை, உடம்போடு மட்டும் சம்பந்தப்பட்டது இல்லையே? மனதிற்கு அல்லவா சுகம்... ஆறுதலேனும் வேண்டும்.

இதைத் தாயிடம் சொல்லிப் பயன் இல்லை, கலங்கி அழுவது தவிர என்ன செய்வது என்று யோசித்துச் செயல்படும் திறன் திலகத்துக்குக் கிடையாது.

பிரியரஞ்சனை நினைத்துப் பார்த்துவிட்டு எதிர்மறையாக முடிவு செய்தாள். இப்போது அவனால் என்ன உதவி செய்ய முடியும்? ஏதாவது யோசனை சொல்லக் கூடும்தான்.

ஆனால் அன்றே அவனது ஆலோசனையை ஏற்று கடை நல்ல நிலையில் இருந்த போதே விற்று, அந்தப் பணத்தை வேறு விதமாய் முதலீடோ, டெப்பாஸிட்டோ பண்ணியிருந்தால்...

ஆனால் இப்போது அதை எண்ணிப் பலன் இல்லை. இப்போது திரும்பவும் அவனால் வேறு என்ன

சொல்ல முடியும்? அவன் சொன்ன விரிவாக்க யோசனைக்கும் சாத்தியக் கூறு இல்லை.

யோசித்துவிட்டு தந்தைக்குச் செய்யக் கடமைப்பட்டவனான அண்ணனிடம் போய் நின்றாள், சௌமியா.

கடை நிலைமை தினகரன் அறியாதது இல்லை. கணவனும் மனைவியும் ஜாடை மாடையாகக் குத்திப் பேசத்தானே செய்கிறார்கள். அழிவைப் பற்றிக் கிண்டல் செய்கிறவர்கள், அந்த அழிவைத் தடுக்க ஒரு வகை சொல்லட்டுமே?

இன்றைய நிலையில் அண்ணன் செய்வதற்கும் பெரிதாக எதுவும் இல்லாதிருக்கலாம். ஆனால் குறைந்த பட்சமாய் 'அப்பா உங்கள் பக்கம் நான் இருக்கிறேன்', என்று காட்டினால் கூட அவருக்கு, எவ்வளவோ ஆறுதலாக இருக்குமே?

ஆனந்தி, தினகரன் இருவரிடமும் நேரடிப் பேச்சு வேண்டாம் என்ற தந்தையின் எச்சரிக்கையை மீறி சௌமியா தாமதமாக வருவதாகத் தந்தையிடம் சொல்லிவிட்டு தினகரனிடம் பேசப் போனாள்.

அவன் சொன்ன யோசனையில் அவளுக்குத் தலை சுற்றியது.

12

ஆனந்தியின் முன்னிலையில் தந்தை பற்றி பேச சௌமியாவுக்குக் கொஞ்சமும் விருப்பம் இல்லைதான். ஆனால், தாமோதரனே தினகரனைத் தனியே அழைத்துப் பேசமாட்டார்.



''வாழ்விலும் தாழ்விலும் சமபங்கு என்று மணமுடித்து அழைத்து வந்துவிட்டு அவனை ஒதுக்கி, அவளுக்குத் தெரியாமல் அவனிடம் ரகசியம் பேசுவது தப்பு. அவளாக உணர்ந்து அவர்களுக்குள் ஏதோ, பேசட்டும் என்று தானாக ஒதுங்கிப் போனாளானால், அது அவளுக்குமே மரியாதை, மற்றபடி நாமாக ஒதுக்குவது தப்பு'' என்று ஒரு தரம் சௌமியாவிடமே சொல்லியிருக்கிறார்.

எனவே, சௌமியாவும் ஆனந்திக்குத் தெரியாமல் அண்ணனிடம் பேச முயற்சிக்கவில்லை.

அப்போதுதான் விழித்து எழுந்து காபி அருந்தியவாறு அன்றைய தினசரியைக் கையில் எடுத்த தினகரன் எதிரே சோஃபாவில் அமர்ந்து ''உங்களிடம் சற்று பேசவேண்டுமே, அண்ணா'' என்றாள்.

''என்னிடமா?'' என்று வியப்புடன் நோக்கி விட்டு ''சரி. பேசேன்'' என்று முறுவலித்தான். அத்தோடு பத்திரிகையையும் கீழே வைத்தான்.

அந்த மட்டும் நல்ல சகுனமாக உணர்ந்து ''அப்பா பற்றி அண்ணா'' என்றாள் தங்கை.

அதற்குள் நைட்டியை அவசர அவசரமாக இழுத்து விட்டுக் கொண்டு ஆனந்தி வந்து சேர்ந்தாள்.

''அம்மா ஆனந்திக்குக் காஃபி'' என்று குரல் கொடுத்தான் தினகரன்.

இந்தப் பேச்சின் இடையே தாயார் வந்து அரைகுறையாக எதையாவது கேட்டுவிட்டுக் கவலைப் படக்கூடாதே என்று தோன்ற, ''அம்மா என்ன வேலையில் இருக்கிறார்களோ? நான் போய்க்

காஃபியை வாங்கி வருகிறேன், அண்ணா,'' என்று சௌமியா எழுந்தாள்.

''அது நிஜம்தான். பாதி வேலையில் அத்தையைத் தொந்திரவு பண்ணவேண்டாம். ஆனால் நீ உட்கார் சௌமி. உன் அண்ணன் போய் வாங்கி வரட்டும்,'' என்று தினகரனை அனுப்பினாள் ஆனந்தி.

ஏன் இந்த மகாராணிக்கு சமையல்கட்டு வரை சென்று தனக்குக் காஃபியை வாங்கிவரக் கூட முடியாதாக்கும் என்று எண்ணும்போதே இவளுக்கும் மாமியார் தங்கள் பேச்சின் இடையில் வருவது பிடிக்கவில்லை என்பதை சௌமியா உணர்ந்தாள். அத்தோடு அண்ணனையும் அனுப்பியிருக்கிறாளே.

அது ஏன் என்பதை ஆனந்தி விரைவிலேயே நாத்தனாருக்குப் புரியவைத்தாள்.

''என்ன சௌமியா கடை ரொம்ப மோசமான நிலையாமே? ஆனால் எவ்வளவு மோசமான நிலைக்குப் போனாலும் மருமகளுக்கு போட்ட நகைகளைத் திருப்பிக் கேட்கிற கேவலத்தை மாமா ஒரு நாளும் செய்ய மாட்டார் இல்லையா சௌமி?''

என்ன புத்தி.

''நிச்சயமாக மாட்டார்'' என்றாள் சௌமியா அழுத்தம் திருத்தமாக.

''நானும் அப்படித்தான் சொல்லிக் கொண்டிருந்தேன். அப்படியே தேவை என்றாலும், அத்தை நகைகள் இல்லையா? அதுவே..''

''அதெல்லாம் தேவைப்படாது'' என்றாள் சின்னவள் சுருக்கமாக.



''அப்ப சரி'' என்று ஆனந்தி நிம்மதியோடு சொல்லிக் கொண்டிருந்த போதே, தினகரன் காஃபியோடு வந்து சேர்ந்தான்.

வேறு வழியில்லாத காரணத்தால் ஆனந்தியின் முன்னிலையிலேயே கடை நிலவரம் தந்தையின் உடல் நிலை எல்லாவற்றையும் சொல்லிவிட்டு, ''அப்பாவின் நிம்மதிதான் இப்போது முக்கியம் அண்ணா, என்ன செய்வது?'' என்று அவனிடம் யோசனை கேட்டாள்.

வழக்கம் போலப் பேசுமுன் மனைவியின் முகத்தைப் பார்த்த தினகரன் அங்கே என்ன கண்டானோ, அவன் முகத்திலும் விறைப்பும் அத்துடன் ஒரு திருப்தியும் பரவின.

தங்கையிடம் திரும்பி, ''இதோ பார் சௌமி, அப்பாவுக்கு நிம்மதி வேண்டுமானால் ஒன்று கடையில் விற்பனையைக் கூட்ட வேண்டும். அவ்வளவு பெரிதாக ஒரு புதுக் கடை இருக்கும் வரை அது முடியாது. ஆனால் அவருக்கு நிம்மதியைத் தரும் இன்னொரு வழி உன் கையில்தான் இருக்கிறது'' என்றான்.

''என் கையிலா? புரியவில்லையே நான்... நான் இன்னும் கம்ப்யூட்டர் படிப்பை முடிக்கக் கூட இல்லையேண்ணா, அதில் பெரிய வேலை பார்த்துச் சம்பாதிக்க எல்லாம்.. சின்ன வேலை கூட இப்போதைக்குக் கிடையாதே'' என்றாள் தங்கை கவலையோடு.

''பிசாத்து வேலை'' என்றான் அவன் அலட்சியமாக.

''பின்னே? நான் எப்படி அப்பாவுக்கு நிம்மதியைத் தர முடியும்?''

மனைவியை ஒரு தரம் பார்த்துவிட்டு ''அதற்கு வழி அண்ணி சொல்லுவாள் கேள். அதை நீ கேட்டு நடந்தாயானால் எல்லோருக்குமே நல்லது'' என்றான் தினகரன்.

ஆனந்தியின் வழியில் அடுத்தவருக்கு நல்லது நடக்கக் கூடும் என்பதில் சௌமியாவுக்குச் சந்தேகம் தான். ஆனால் ஓரளவுக்கு 'எத்தைத் தின்றால் பித்தம் தெளியும்?' என்கிற நிலையில் இருந்ததால் அவள் தன் அண்ணன் மனைவியைப் பார்த்தாள். ''சொல்லுங்கள் அண்ணி.''

லேசாகத் தொண்டையைக் கனைத்து நைட்டியைச் சீர்படுத்தி நிமிர்ந்து அமர்ந்து ஆனந்தி செய்த முஸ்தீபுகளைப் பார்க்கும்போது அண்ணியிடம் நேரடிப் பேச்சு வேண்டாம், என்று தந்தை எச்சரித்ததை மீறியது தவறோ என்ற சந்தேகம் சௌமியாவுக்கு வந்தது.

ஆனால் அது பற்றி இப்போது செய்வதற்கு ஒன்றுமில்லை என்று உணர்ந்து பேசாமல் உட்கார்ந்திருந்தாள்.

நாத்தனாரையும் கணவனையும் கம்பீரமாக ஒரு தரம் பார்த்துவிட்டு ஆனந்தி தொடங்கினாள். ''பார் சௌமியா மாமாவின் பெரிய கவலைகள் என்று அவர் சொல்வது இரு பெரிய செலவுகளுக்குப் பணம் சேர்ப்பது, அவை என்ன செலவுகள் என்பது உனக்கும் தெரியும் என்று நினைக்கிறேன்'' என்று நிறுத்தினாள்.



ஆமாம், ஆமாம், அதில் ஒன்று என் திருமணம். அது எப்படித்தான் நடக்கப் போகிறதோ தெரியவில்லையே, என்று சௌமியா வருத்தப்படுவாள் என்று எதிர்பார்த்தாளோ என்னவோ? ஆனால் நாத்தனார் மௌனம் காக்கவும் மீண்டும் அவளே தொடர்ந்தாள்.

''நாங்கள் ஒரு நாளும் பெரியவர்களைப் பட்டினி போட்டுவிட மாட்டோம் என்பதால் அதில் ஒரு செலவு பற்றி அவர் கவலைப்படத் தேவையில்லை, ஆனால் அடுத்தது...'' என்று அவள் புருவம் உயர்த்திக் கணவனைப் பார்க்க, அவனும் கடமை வீரனாக ''உன் திருமணச் செலவு'' என்று எடுத்துக் கொடுத்தான்.

சே. இவர்களிடம் வந்ததே தப்பு என்று சௌமியா உள்ளே கசந்து கொண்டாள். இவர்கள் கைச் சாப்பாட்டை எதிர்பார்த்து தந்தை காத்திருந்தால் அல்லவா இவர்கள் பட்டினியோ சாப்பாடோ போடுவதற்கு? அந்த நிலை வர அப்பா விடமாட்டார் என்பது அண்ணனுக்குமா தெரியாது? பெருமாள் மாடு மாதிரித் தலையை ஆட்டிக் கொண்டு உட்கார்ந் திருக்கிறானே. இத்தனைக்கும் இன்றுவரை இவன் ஒரு பைசா சம்பாதித்து அப்பாவிடம் கொடுக்கவில்லை. கணவனும் மனைவியும் உட்கார்ந்து சாப்பிடுவது அப்பாவின் பணத்தில். இதையெல்லாம் கோடி காட்டி ஒரு வார்த்தை சொன்னால்கூட அப்பா சொன்ன ரணகளம் தொடங்கிவிடும்.

சே. அண்ணனை 'அண்ணனா'க நினைத்து என்ன முட்டாள்தனம் பண்ணிவிட்டேன் என்று சௌமியா தன்னையே நொந்து கொண்டாள்.

நாத்தனார் ஆத்திரத்தை அடக்கிக் கொண்டு அமர்ந்திருக்கிறாள் என்பது புரியாமல் ஆனந்தி தொடர்ந்தாள். ''அந்தச் செலவு இல்லை என்று ஆனால் மாமா கவலையற்று இருப்பார்'' என்றாள் அவள்.

அர்த்தம் புரியவில்லை, சின்னவளுக்கு.

செலவில்லாமல் எவனையாவது இழுத்துக் கொண்டு ஓடு என்கிறாளா?

இல்லை. இருவரின் பாவனையையும் பார்க்கையில் பெரிய விஷயம், இனிமேல்தான் வரப் போகிறது, இதில் அவர்களுக்கு ஆதாயம் இருக்கிறது என்று சௌமியா உணர்ந்தாள். 'கோடீசுவர மாப்பிள்ளை' பேச்சு காலம் கடந்து நினைவு வந்தது. வெற்று முழக்கம் என்று நினைத்தது தவறோ?

ஏதோ தோன்ற ''நான் வேண்டுமானால் எனக்குத் திருமணமே வேண்டாம் என்று அப்பாவிடம் சொல்லி விடுகிறேனே'' என்று சாதுவாய்க் கேட்டாள்.

சட்டெனத் திகைத்துக் கறுத்த இருவரின் முகமும் அவளது ஐயத்தை உறுதிப்படுத்தின.

தினகரன் பேந்த விழிக்க அவசரமாக ''சேச்சே, அப்படியெல்லாம் முட்டாள்தனமாக எதையும் சொல்லி வைக்காதே'' என்றாள் ஆனந்தி. ''பைசா செலவில்லாமல் உன்னைக் கல்யாணம் செய்து கொள்ள என் சொந்தத்தில் மாப்பிள்ளை ரெடி. உன் திருமணம் செலவில்லாமல் நடந்துவிட்டால் அப்புறம் மாமா வுக்குக் கவலைக்கே வழியில்லையே...''



ஏனோ குமட்டுவது போல உணர்ந்து ''வேண்டாம் அண்ணி இந்தப் பேச்சு வேண்டாம் நிறுத்துங்கள்'' என்றாள் சௌமியா.

''ஏன் சௌமி? மாப்பிள்ளைக்கு அப்படி ஒன்றும் வயது அதிகம் இல்லையம்மா. நாற்பது கூட ஆகவில்லை. என்ன பணம் இருந்தால் கொஞ்சம் இப்படி அப்படி இருப்பதுதானே? அதைப் பெரிதாக நினைக்கக் கூடாதும்மா'' என்று தங்கையைச்சமாதானம் செய்கிற வேகத்தில், உளறிக் கொட்டினான் தினகரன்.

நல்ல மாப்பிள்ளைதான் பார்த்திருக்கிறார்கள். செலவில்லாமல் ஏன் கட்டிக் கொள்ள மாட்டான்?

''எல்லாம் உங்கள் பெரிய தங்கை அந்தப் பிசாசு செய்த வேலை, சொன்னால் இருக்காது என்றீர்களே. நீங்கள் உருப்பட்டுவிடக் கூடாது என்று இந்த வீட்டில் எல்லோரும் கங்கணம் கட்டிக் கொண்டு வேலை செய்கிறார்கள்'' என்று சீறினாள் ஆனந்தி.

'ஆதாயம்' பற்றி எண்ணியது நினைவு வர, ''நீங்கள் உருப்படுவதற்கும் இதற்கும் என்னண்ணா தொடர்பு?'' என்று கேட்டாள் சௌமியா.

''அது. அது தெரிந்தால் சம்மதித்து விடுவாய், இல்லையாம்மா? கண்ணபிரான் சாருக்கு, படம் எடுப்பதற்குப் பணம் கொடுக்கிற சில பேரைத் தெரியுமாம். எனக்குப் படம் எடுக்கப் பணத்துக்கு ஏற்பாடு செய்து தருவதாகச் சொல்லியிருக்கிறார். என்ன சௌமிக் குட்டி, சரியென்று சொல்லி விடலாமா?''

''அவனுக்குப் பணம் கிடைப்பதற்காக கூடப் பிறந்தவளை கெட்டழிந்த ஒரு நாற்பது வயதுக்காரனுக்குத் திருமணம் செய்து கொடுக்க அண்ணன் தயார்.

அவன் இவ்வளவு சுயநலக்காரனாக எப்படி ஆனான்? 'பன்னியுடன் சேர்ந்த கன்று' என்பது இதுதான் போலும்.

அண்ணனின் குழைவு மேலும் வெறுப்பைத்தர, ''என்னவோ எனக்குத் திருமணம் பிடிக்கவில்லை அண்ணா. அப்பாவிடம் எனக்குக் கல்யாணமே வேண்டாம் என்றுவிடப் போகிறேன்'' என்றவள் அதற்கு மேல் அங்கே நில்லாமல், ''அம்மா, நான் கடைக்குப் போகிறேன்'' என்று உரக்கச் சொல்லி விட்டுக் கிளம்பிவிட்டாள்.

இந்த நிமிஷத்தில் மற்ற இருவரும் அவளது அறிவிப்பில் திகைத்து அமர்ந்திருந்த போதும், இது எந்த அளவில் விசுவரூபம் எடுக்குமோ, என்று அந்தக் கவலை வேறு சேர்ந்து கொண்டது, சௌமியாவுக்கு.

ஆனால் அதற்காக அந்த மாதிரி ஆளைக் கல்யாணம் செய்வதெல்லாம் அவளால் முடியாது.

திருமணம் என்றால் ஒரு நல்லவனோடு... என்று யோசனை ஓடும்போதே ஏதோ உறுத்தியது.

அண்ணனும், அண்ணியும் மாப்பிள்ளை எப்படிப் பட்டவன் என்று கூறுமுன்பே, அவளுக்குக் குமட்டிவிட்டதே. சே, திருமணமே அவளுக்குச் சரியில்லையோ, என்னவோ?



ஆட்டோ கடையை நெருங்கும்போதே, அவள் மனம் மாறிவிட்டது.

கடைக்குப் போய் என்ன செய்வது? ஒருவர் முகத்தை ஒருவர் பார்க்க அஞ்சி இங்கும் அங்குமாகப் பார்வையைச் செலுத்திக் கொண்டு இருக்க வேண்டும். பை தயாரிப்பையும் நிறுத்திவிட்டாள். முன்பு தயாரித்ததே, அடுக்கு கலையாமல் அப்படியே நின்று போயினவே.

அத்தோடு தந்தையின் பிரச்சினை?

அது அப்படியே இருந்ததே. அண்ணன் தினகரனிடம் பேசியதில் அதற்கு ஒரு தீர்வும் கிடைக்கவில்லையே. இனியும் கிடைக்காது. சுய லாபம் மட்டும்தான் அவனுக்கு மனதில் இருக்கிறது. தந்தை, தங்கை எல்லோரும் எப்படிப் போனாலும், நொந்தாலும், வெந்தாலும் அவனுக்குக் கவலை யில்லை.

இனி மீந்திருக்கும் ஒரே வழி, அவளுக்கு முதலிலேயே தோன்றிய வழிதான் பிரியரஞ்சனிடம் ஆலோசனை கேட்பது.

எப்படியும் 'சர்வே' எடுக்கிறேன் பேர்வழி என்று ஊரைச் சுற்றி உலகம் அறிந்து வைத்திருக்கிறான்.

தினகரன் மீண்டும் கடைக்கு வரமாட்டான் என்று தெளிவாகச் சொன்னானே.

ஆட்டோவை நேரே பூங்காவுக்குப் போகச் சொன்னாள்.

பூங்காவுக்கு வெளியிலேயே ஒரு டெலிஃபோன் 'பூத்' இருந்தது.

அங்கே போய் பிரியரஞ்சனை செல்லில் அழைத்தாள்.

அழைத்தது சௌமியா என்று அறிந்ததும் முதலில் அவன் சற்றுப் பதறிப் போனான்.

''என்னம்மா? என்ன, என்ன? உடம்புக்கு ஒன்றும் இல்லையே?'' என்று அவன் படபடத்ததிலேயே பாதிப் பிரச்சினை தீர்ந்து விட்ட உணர்வு அவளுக்கு உண்டாயிற்று.

''அதெல்லாம் இல்லை ரஞ்சன். ஆனால் இங்கே... பழைய பிரச்சினைதான். ஆனால், அப்பாவுக்கு... ரஞ்சன், உங்களைத் தொல்லை... உங்களால் முடிந்தால் பூங்காவுக்கு ஒருதரம் வந்துவிட்டுப் போக.. வர முடியுமா?'' என்று கேட்டு முடிக்குமுன் திணறிப் போனாள்.

''ஒரு பத்து நிமிஷம் காத்திரு. வேலைகளை ஒதுக்கிவிட்டு இதோ வந்து விடுகிறேன்'' என்றான் அவன்.

சௌமியா பூங்காவின் நுழை வாயிலிலேயே தான் நின்று கொண்டிருந்தாள்.

பிரியரஞ்சன் வந்திறங்கிய காரைப் பார்த்ததும் ''படித்து முடித்ததும் நான் வேலை பார்க்கப் போவது உங்கள் நிறுவனத்தில்தான், ரஞ்சன். வேறு எங்கே, சர்வே எடுக்கிறவர்களுக்கெல்லாம், இவ்வளவு விலை உயர்ந்த கார் தருகிறார்கள்?'' என்று ஆச்சரியத்துடன் கேட்டாள்.



## 13

**சௌ**மியாவின் கேள்விக்கு, பிரியரஞ்சன் நேரடியாகப் பதில் சொல்லவில்லை.

அவளை ஒருதரம் பார்த்துவிட்டு, ''நீ பயங்கரமான ஆள் என்பது நன்றாகத் தெரிகிறது. ஆனால் பிரச்சினை அப்படி ஒன்றும் அபாயகரமானது இல்லை என்று நினைக்கிறேன். மற்றபடி, நீ இவ்வளவு இலகுவாகப் பேச மாட்டாய்'' என்று அவன் கூறவும், சட்டென அவள் முகம் கலங்கியது.

''சொன்னேனே ரஞ்சன். இது பழைய பிரச்சினைதான். ஆனால், விரைவிலேயே ஏதாவது செய்தாக வேண்டும். இனியும் தள்ளிப் போட முடியாது. இன்னும் கொஞ்ச நாள் கடை இப்படி நடந்தால் அப்புறம் அப்பாவை நல்லபடியாக பார்க்க முடியாது'' என்றாள் அவள்.

''போய் உட்கார்ந்து பேசுவோம் வா'' என்று அவளை அழைத்துச் சென்றான் அவன்.

தந்தையின் உடல் நிலை பற்றிக் கூறியவள், தினகரனால் ஓர் உதவியும் இல்லை என்பதோடு, அவனைப் பற்றிய பேச்சை நிறுத்திக் கொண்டாள்.

''சொல்லப் போனால், அப்படி ஒன்றும் பெரிதாகத் தெரியவில்லை, ரஞ்சன். ஆனால் அப்பா நெஞ்சை நீவிக் கொண்டதும் பயந்து போனேன் என்று தோன்றுகிறது. அவசரப்பட்டு, உங்களைத் தொல்லை

செய்து விட்டேனோ என்று கஷ்டமாக இருக்கிறது'' என்று வருந்தினாள்.

''ஷ். என்ன அசட்டுப் பேச்சு? உன் உதவிக்கு என்னைக் கூப்பிடாமல் நீ வேறு யாரைக் கூப்பிடுவாய்? அதிருக்கட்டும் இப்போது பிரச்சினைக்கு வருவோம். இப்போதும் உன் தந்தை கடையைத் தொடர்ந்து நடத்தும் எண்ணத்தில்தான் இருக்கிறாரா? அல்லது...''

''இல்லை என்றுதான் நினைக்கிறேன், ரஞ்சன். ஆனால்... சாரி ரஞ்சன் என்னால் நிச்சயமாகச் சொல்ல முடியவில்லை. ஆனால், மணிவாசகத்திடம்.. அவர்தான் எங்கள் மூத்த விற்பனையாளர், அவரிடம் உங்கள் இருவருக்கும் வகை செய்யாமல் விட்டுவிட மாட்டேன் என்று சொன்னாராம். 'ஆனால், இன்றைய நிலையில் நம் கடையை யாரம்மா வாங்குவார்கள்?' என்று வருத்தப்பட்டார், மணிவாசகம். எனவே விற்பதாகத்தான் அப்பா முடிவு செய்திருக்க வேண்டும். ஆனால், சாரி. அவரிடம் நான் நேரடியாகக் கேட்கவில்லை. கேட்கப் பயமாக இருந்தது. அப்பா திட்ட மாட்டார். ஆனால்...'' என்று கலக்கத்துடன் இழுத்தாள்.

''இன்னும் அதிகமாக அவர் உடம்பைப் பாதித்து விடுமோ என்று பயந்திருப்பாய். போகட்டும். இதற்கு மேல் இந்த விஷயம் பற்றிக் கவலைப்படாமல் அமைதியாக இருக்க முயற்சி செய். உங்கள் கடை பற்றி நான் யோசித்து ஓர் ஏற்பாடு பண்ணுகிறேன். இப்போது நான் கிளம்பவேண்டும். விரைவிலே வந்து விடுவதாகச்



சொல்லிவிட்டு வந்தேன். வேலை இருக்கிறது. வரட்டுமா?'' என்று கேட்டான்.

கிளம்புகிறானே என்று இருந்த போதும் இன்னொருவரின் கீழ் வேலை செய்கிறவன், அவன் சங்கடப் பட்டு விடக் கூடாது என்று எண்ணியவளாய்த் தலையாட்டினாள், சௌமியா.

தன் வேக நடையுடன் இரண்டெட்டு எடுத்து வைத்தவன், திரும்பி வந்தான்.

அவள் என்ன என்பதுபோலப் பார்த்துக் கொண்டிருக்கும் போதே ஒற்றை விரலால், அவளது முகவாயைத் தூக்கினான். விழி விரிந்த அவளது பார்வையை நேராக நோக்கி, ''எப்போதும் என்னை நீ நம்ப வேண்டும் சௌமியா. நம்புவாயில்லையா?'' என்று கேட்டான்.

என்ன கேள்வி இது? அவனை நம்பாமல் வேறு யாரை நம்பப் போகிறாள்?

ஒப்புதலாய் அவள் ''இம்'' எனவும் லேசாக முறுவலித்து முகவாயைத் தாங்கியிருந்த விரலால் அவள் உதட்டில் மெல்லத் தட்டிவிட்டுத் திரும்பிச் சென்றான்.

அப்போதும் அவளுக்குத் திகைப்பாகத்தான் இருந்தது.

ரயில் சினேகம் மாதிரிப் பூங்கா நட்பு என்று நினைத்தாளே. இந்த நட்பு என்றேனும் மறையக் கூடியதா, என்ன?

பிரியரஞ்சனால் மட்டும் என்ன செய்ய முடியும் என்று அவ்வப்போது தோன்றினாலும் அவன் நம்பச்

சொல்லியிருக்கிறான், ஏதாவது வழி காட்டுவான் என்ற நம்பிக்கையும் இருந்ததால் பெருமளவு நிம்மதியாகவே இருந்தது.

ஆனால் வீட்டில் நடந்தது உறுத்த தந்தையிடம் நெருங்கி, ''அப்பா உங்கள் சொல்லை மீறி, ஒரு தப்பு பண்ணி விட்டேன்'' என்று தொடங்கி நடந்ததைச் சொன்னாள்.

சற்று நேரம் தாமோதரன் ஒன்றுமே பேசவில்லை.

பிறகு, ''வீட்டிலும் பிசாசை அவிழ்த்து விட்டுவிட்டாயேம்மா'' என்றார் அலுப்புடன்.

''அப்பாவுக்கு உதவி செய்வதாக நினைத்தாய் போல. ஆனால் தினா அந்த நிலையை எல்லாம் தாண்டி, ரொம்ப நாளாகிறதேடா. அப்பா கை நிறையச் சம்பாதித்துக் கொண்டிருந்தாலாவது கொஞ்சம் அடக்கம் தெரியும். இப்போது.. சரி பார்ப்போம். எப்படியும் நடந்ததை இல்லை என்று ஆக்க முடியாது. முடிந்தவரை சமாளிப்போம்'' என்று அவர் சொல்லிக் கொண்டிருக்கும்போதே, டெலிஃபோன் ஒலியெழுப்பியது.

அப்பாவும் மகளும் அருகிலேதான் இருந்தார்கள்.

ரிசீவரை எடுத்துப் பேசியவரின் முகம் மலர்ந்தது. சின்ன மகளைப் பார்த்து, ''உன் அக்கா'' என்றவர், ''என்னடா அருணா, எப்படியிருக்கிறாய்? மாப்பிள்ளை நன்றாக இருக்கிறாரா? உன் மாமியார்.. சரிடா சரி. நான் பேசவில்லை. நீயே சொல்லு'' என்றார்.



சற்று பொறுத்து ''என்னம்மா அப்பா அப்படிச் செய்வேனா? அந்தக் கூட்டமே நமக்கு ஆகாது, மோசம் என்று தான் தெரியுமே... என்னடா? ..சேச்சே, மாப்பிள்ளையைச் சொல்லுவேனா? உன் குடும்பம் தான் தப்பிப் பிறந்தது ஆயிற்றே. இல்லையம்மா. யாரையுமே சொல்லவில்லை. பார்த்துக் கொள்ளுகிறேன். நீ ஃபோன் பண்ணியதாக, அம்மாவிடம் கூடச் சொல்ல மாட்டேன். சரிதானா? பாப்பாவிடம் சொல்லி வைத்து விடுகிறேன். சரி, சரி. வைத்து விடுகிறேன்'' என்று ரிசீவரை வைத்தார்.

''என்னப்பா, என்னிடம் தரவில்லையே. நான், அக்காவுடன் பேச வேண்டும் என்றிருந்தேன்'' என்று ஏமாற்றத்துடன் கூறினாள் சௌமியா.

''அப்புறமாக வீட்டுக்கு அதிகாரப் பூர்வமாக ஃபோன் பண்ணுகிறாளாம் அப்போது உன்னிடம் பேசுவாளாம். அக்கா சொல்லச் சொன்னாள்'' என்று தாமோதரன் யோசனையோடு கூறவும் பயந்து போய்,

''என்னப்பா, அக்காவுக்கு ஒன்றும் பிரச்சினை இல்லையே?'' என்று கவலையுடன் விசாரித்தாள்.

'இல்லை' என்று தலையசைத்துவிட்டு, ''நீ கிளப்பி விட்டுவிட்ட பூதம்'' என்றார் அவர்.

''ஏ.. என்னப்பா?''

''ஆமாம்மா. அண்ணன் அவளுக்கு ஃபோன் பண்ணினானாம். உனக்கு மாப்பிள்ளை பார்த்துக் கிட்டத்தட்ட நிச்சயம் செய்து விட்டதாகச் சொல்லியிருக்கிறான். இதில் தலையிட்டு ஏதாவது குளறுபடி செய்தால், அவளது குடும்ப அமைதி கெட்டுவிடும் என்று மிரட்டியிருக்கிறான். தங்கை கோமதிகவரி

ஆகிவிடுவாளே என்று பொறாமையில் கெடுத்து விடாதே என்றானாம், ஆனந்தி அண்ணன் ஏதோ கோடீசுவரன் என்றானே, அந்த ஆள் மாப்பிள்ளைக்கு ஒன்றுவிட்ட பெரியம்மா மகன் தானாமே. இந்தச் சித்தி மகள் படுத்துகிற பாடே, போதாதா? ஆனால், இந்தக் கூட்டமே மோசம் என்றேனா, உன் அக்காவுக்குக் கோபம் வந்துவிட்டது. மாப்பிள்ளையும் அந்தக் கூட்டம்தானே, எப்படி, மொத்தமாய் மோசம் என்று சொல்லலாம் என்று கேட்கிறாள். அப்படியெல்லாம் பேசக் கூடாதாம். பெரிய மனுஷி மாதிரிச் சொன்னாளா, நானும், சரிம்மா என்று விட்டேன்'' என்று சிரித்தார் தந்தை.

சின்னவளும் முறுவலிக்க அவர் தொடர்ந்தார். ''இப்போது அருணா பேசியது, யாருக்கும் தெரியக் கூடாதாம். ஆனால், அந்த ஆள் பரசு பற்றிய பேச்சையே எடுக்கவிடக் கூடாது என்றாள். முன்பே, அவளுடைய மாமியாரிடமே, இந்தப் பேச்சு வந்ததாம். ஆனால், வயது வித்தியாசம் அதிகம், வேண்டாம் என்று அவர்களே விட்டு விட்டார்களாம். குணமும் மோசம் என்று இவளிடமே ரகசியமாகச் சொன்னார்களாம். ஆனாலும் இதில் தானாக ஒன்றும் சொன்னதாக இருக்க வேண்டாம் என்கிறாள் அக்கா. அதனால் அக்கா ஃபோன் பண்ணியதாகக் கூட வாய் விட்டுவிடாதே'' என்று முடித்தார்.

''சரிதான்'' என்று தலையாட்டிய போதும் ''இவன் கெட்டவன், வயதானவன், என் தங்கைக்குப்



பொருத்தமில்லை என்று சொல்லும் உரிமை, அக்காவுக்கு உண்டுதானே, அப்பா? இதில் என்ன ஒளிவு மறைவு?'' என்று சிறு எரிச்சலோடு சௌமியா கேட்டாள்.

''உரிமை உண்டுதான். ஆனால் அவர்கள் உறவினர்கள், ஒன்றுக்குள் ஒன்று. இன்றைக்கு வெறுத்துப் பேசினாலும் நாளைக்குச் சேர்ந்து விடலாம். அப்போது அருணா வெளி ஆளாய்த் தனித்து நிற்கும்படி நேர்ந்து விடக் கூடாதில்லையா? அதுதான் முன்னெச்சரிக்கையோடு நடந்து கொள்கிறாள். கெட்டிக்காரி. அத்தோடு, நம் வீட்டில் வேறு மூட்டிக் கொடுக்கிற ஒன்று இருக்கிறதே. ஆனந்தி, இங்கே வேறு, இன்னும் எப்படியெப்படி ஆடப் போகிறாளோ?'' என்றார் தாமோதரன்.

இந்த நிலைமை உருவாகத் தான்தானே காரணம் என்று எண்ணியவளாய், ''எனக்குத்தான் மூளையில்லை. இல்லையாப்பா?'' என்றாள் அவள் வருத்தத்துடன்.

''நீயும் கெட்டிக்காரிதான்டா. ஆனால், சின்னப் பெண் அல்லவா? அனுபவம் இல்லை. அவ்வளவு தான்'' என்றார் தந்தை தேறுதலாக.

மதிய உணவுக்கு வீட்டுக்குப் போனால், திலகம் பாயாசம் வைத்திருந்தாள்.

''வீட்டில் கல்யாணம் வரப் போகிறது என்று தினா சொன்னான். அதனால் வைத்தேன்'' என்று கிண்ணங்களில் எடுத்து வந்து கொடுத்தாள்.

முந்திரியும், சாரப் பருப்பும் மிதக்க, பாயசத்தை ஆசையுடன் பார்த்துவிட்டுத் தள்ளி வைக்கப் போனாள் சௌமியா.

''குடிம்மா'' என்று மகளிடம் எடுத்துக் கொடுத்துவிட்டு, ''கல்யாணம் வந்தால்தான் பாயாசம் சாப்பிட வேண்டுமா? அன்றாட உணவின் ஒரு பகுதியாகக் கூட அருந்தலாம்'' என்று கிண்ணத்தை எடுத்து உறிஞ்சிக் குடித்தார். ''நல்ல ருசி. இன்னொரு கிண்ணம் தருகிறாயா?'' என்று கேட்டு வாங்கித் தாமோதரன் குடிக்கவும், திலகத்தின் முகம் மலர்ந்தது.

தன் சமையலை யாராவது பாராட்டிவிட்டால், திலகத்துக்கு மகிழ்ச்சி பொங்கிவிடும்.

''உனக்கும், இன்னும் தரட்டுமா?'' என்று புன்னகையோடு கேட்டாள்.

சௌமியா தலையாட்டவும், மகளுக்கும் திரும்பக் கொடுத்தாள்.

பிறகு, ''ஆனால் பாப்பாவுக்குக் கல்யாணம் கூடி விட்டதாக தினா, ஆனந்தி இருவருமே சொன்னார்கள்'' என்றாள் அன்னை.

''இல்லையம்மா. அந்த மாப்பிள்ளை, சரியான பொருத்தம் இல்லை என்று விட்டுவிட்டேன்...'' என்றார் தாமோதரன் அமைதியாகவே.

இப்படி ஒரு வார்த்தைக்காகவே கதவருகில் காத்திருந்தது போல தினகரன் சாப்பாட்டு அறைக்குள் வந்தான். ''அதென்ன உங்கள் விருப்பம் போல விட்டுவிடுவது? நான் அவளுடைய அண்ணன். என் தங்கைக்கு நான் திருமணம் செய்து வைப்பேன். இதை



யாரும் தடுக்க வேண்டாம்'' என்றான் ஒரு முசுட்டுக் குரலில்.

''அண்ணனை விட அப்பாவுக்கு உரிமை அதிகம்பா'' என்று தாமோதரன் தெரிவித்தார்.

''அந்த அப்பாவையே காப்பாற்றுவதற்கு அவள் அண்ணனிடம் தான் வந்து நிற்கிறாள்'' என்று தினகரன் அலட்சியமாகச் சொல்லவும், சௌமியாவுக்குத் திக்கென்றது.

இவர்களிடம் வாயைத் திறந்ததே, தப்பாகி விட்டதே!

''இல்லை அண்ணா. எனக்குத் திருமணமே வேண்டாம். அப்போதே சொன்னேனே'' என்று அவசரமாகச் சொன்னாள் சௌமியா.

''நீ சின்னப் பிள்ளை உனக்கு ஒன்றும் தெரியாது, பாப்பா. சும்மா இரு'' என்றான் அண்ணன் உரிமையோடு.

''நிறுத்து தினகர். விட்டால் ஒரேடியாக ஏறுகிறாயே. அவள் என் பெண். அவளுக்கு வேண்டியதை நான் செய்வேன்.''

''ஆங். என்னத்தை வைத்துச் செய்வீர்களாம்? கடைதான், வாயைப் பிளந்து விட்டதே. வயதாகி விட்டாலே இப்படித்தான். முடியாததை எல்லாம் நான் செய்வேன், நான் செய்வேன் என்று பீற்றிக் கொள்வது'' என்று தினகரன் எரிச்சல்பட்டான்.

''ஆமாம் அவள் சின்னப் பிள்ளை. நான் வயதானவன். நீ தான் எல்லாம் தெரிந்தவன். அப்படியா?''

''பையனுக்கு நல்ல வசதி என்றானே. வீடே, ஏழெட்டு இருக்கிறதாம். தினா சொன்னான்'' என்று திலகம் மகன் பக்கம் பேசினாள்.

''அவன் சின்ன வீட்டைச் சொல்லியிருப்பான்'' என்றார் தாமோதரன் கிண்டலாக.

''இல்லையே. எல்லாம் பெரிய வீடு என்றானே'' என்று வெகுளியாய் மனைவி கூறவும் தன்னை மீறிச் சிரித்துவிட்டார் அவர்.

அண்ணன் முகத்தில் கடுப்பேறவும் தட்டைப் பார்ப்பது போலத் தலையைக் கவிழ்ந்து புன்னகையை மறைத்தாள் சௌமியா.

தொடர்ந்து ''அத்தோடு வயதும் ரொம்ப அதிகம் திலகா'' என்றார் அவளுடைய தந்தை.

மீண்டும் ''இல்லையே'' என்றாள் திலகம். ''தினகரனை விடக் கொஞ்சம்தான் மூப்பாம். மருமகளும் சேர்ந்து சொன்னாளே.''

''அந்தக் கொஞ்சத்தின் அர்த்தம் தெரியுமா உனக்கு? பதினைந்து ஆண்டுகளேனும் இருக்கும்.''

''ஆங்'' என்று தாயார் வாயைப் பிளக்குமுன் ''ஏன் அப்பா பொய் சொல்லுகிறீர்கள்?'' என்று கொதித்தான் மகன். ''எனக்கும் பரசு அத்தானுக்கும் பதினோரு வருஷம்தான் வித்தியாசம்'' என்று போட்டு உடைத்தான்.

''கேட்டுக்கொள். பதினோரு வருஷங்கள். இவனுக்கு இப்போது இருபத்தி ஏழு. அப்படியானால்



அந்த ஆளுக்கு முப்பத்தியெட்டு. உன் மகள் வயது என்ன? இருபத்தி ஒன்று. பதினேழு ஆண்டு வேறுபாடு தேவைதானா? இதற்கு மேல், இந்தப் பேச்சுப் பேச வேண்டாம்'' என்று முடித்தார், தாமோதரன்.

''அதெல்லாம் முடியாது. நான் வாக்குக் கொடுத்துவிட்டேன். இந்தக் கல்யாணம் நடக்காவிட்டால் நான் உயிரை விட வேண்டியது தான்'' என்றான் தினகரன்.

''சீச்சீ. விட்டேன் என்று சொல்லு. ஏதோ, அவரவருக்கு விதித்ததுதானே நடக்கும்? எங்கள் பெரிய சித்தி, இருபது வயது மூத்தவரை மணந்து கொண்டு, தொங்கத் தொங்கத் தாலியோடு, எழுபது வயது வரை, நல்லபடியாகவே வாழ்ந்திருக்கிறாள். வயது வித்தியாசம் சற்று அதிகமாக இருந்தால், கூடுதல் பிரியமாகவும் இருப்பார்களாம். பாப்பாவுக்கும் அப்படி அதிர்ஷ்டமோ என்னவோ?.. ஏதோ பையனும் வாக்குக் கொடுத்துவிட்டான். நடத்திவிடுவோம்'' என்று திலகம் கூறவும் சௌமியா அதிர்ந்தாள்.

## 14

எப்போதுமே திலகத்துக்குப் பெண் குழந்தைகளைவிட தன் முதல் செல்வன் தினகரனிடம் தான் பிரியம் அதிகம். அவள் வளர்ந்த வகையில் குடும்பத்தில் ஆணுக்குத்தான் மதிப்பு அதிகம்.

தினகரனுக்குத் தம்பியோ, அண்ணனோ இல்லாதது தாயின் மதிப்பில் அவனை இன்னமும் உயர்த்தியது. மகனுக்காகவே மருமகளுக்கும் ஊழியம் செய்தாள்.

இப்போது அவன் 'உயிர் கியிர்' எனவும் சட்டென மிரண்டுவிட்டாள். அவன் சொல்வது போல நடந்தால் என்ன என்றும் தோன்றிவிட்டது.

ஆண் பிள்ளைக்கு என்ன வயது எனும் எண்ணமும் உண்டு.

அத்தோடு சின்னவள் அதிர்ஷ்டக்காரி என்று ஜோசியக்காரன் சொல்லியிருக்கிறான். அதனால், அவளது தாலிப் பாக்கியத்துக்கு, எந்தக் குறையும் வந்து விடாது. பணக்கார மாப்பிள்ளை வேறு.

அத்தோடு கடை வேறு சரியில்லை என்கிறான் பையன். இந்த நேரத்தில் செலவில்லாமல் கட்டிக் கொள்ள ஆள் கிடைத்தால் பத்துப் பொருத்தமும் பார்த்துக் கொண்டிருக்க முடியுமா?

ஏற்கனவே, இது பற்றியெல்லாம் ஆனந்தி எடுத்துச் சொல்லி எண்ணிப் பார்க்கும்போது, இந்தத் திருமணமே மேல் என்று திலகத்துக்குத் தோன்றி விட்டது.

ஆனால் ''உனக்குக் கொஞ்சமாவது அறிவிருக்கிறதா? ஒகே. உன் செல்ல மகன் சொல்லி விட்டான் இல்லையா? அதுதான் உனக்குச் சரியாகத் தோன்றும். உடனே உன் தலை ஆடத் தொடங்கிவிடுமே. அந்த ஆட்டத்தை நிறுத்தி, நான்



சொல்வதைக் கொஞ்சம் கவனமாகக் கேள். அந்த ரௌடி பரசுவுக்கு, நான் என் மகளைக் கொடுப்பதாக இல்லை. எனவே, இது பற்றி இனி ஒரு பேச்சு, இந்த வீட்டில், யாரும் பேசக் கூடாது. என் வார்த்தைக்குப் பணிந்து இருப்பதானால் இருவரும், இந்த வீட்டில் இருக்கட்டும், முடியாது என்றால் உடனே, உன் பிள்ளையை வெளியே போகச் சொல்லு'' என்று தாமோதரன் அழுத்தமான குரலில் கூறினார்.

''ஐயையோ, என்ன இப்படி...'' என்று புலம்பத் தொடங்கிய மனைவியிடம், ''நிறுத்து'' என்று ஓர் அதட்டல் போட்டார். ''நான் சொல்ல வேண்டியதை அழுத்தத்துடனே சொல்லி விட்டேன். இதற்கு மேல் இதில் நீ ஒரு வார்த்தை பேசக் கூடாது'' என்றார்.

தாமோதரனின் பார்வை மகனிடம் பாய்ந்து ''சொன்னது கேட்டதில்லையா?'' என்றார் கடுமையான குரலில்.

அறைப் பக்கம் பார்த்துவிட்டு, தினகரன் விரமாக நிமிர்ந்தான். ''தாராளமாகப் போய்விடுகிறேன். அதற்கு முன், என் பங்குச் சொத்தைப் பிரித்துக் கொடுத்து விடுங்கள்'' என்றான் மைந்தன்.

''அண்ணா'' என்று திகைத்தாள் சௌமியா.

ஏளனமாகச் சிரித்தார் தாமோதரன் ''உன் பங்குச் சொத்தா? அப்படி ஒன்று ஏதடா? இது எல்லாம், என் சுய சம்பாத்தியம். உன்னை நன்றாகப் படிக்க வைத்திருக்கிறேன். பெற்ற கடனுக்கு, ஒரு லட்ச ரூபாய் 'டெப்பாசிட்' ஒன்று போட்டு வைத்திருக்கிறேன்.

எடுத்துக் கொண்டு கிளம்பு'' என்றார் பாறையாக இறுகிய குரலில்.

''நான் இப்..'' என்று ஆத்திரத்தோடு சொல்லிக் கொண்டிருந்த தினகரனை அறையிலிருந்து வேகமாக ஓடி வந்த ஆனந்தி இடை மறித்தாள். ''வயதான காலத்தில், பெரியவர்களுக்கு ஆகாமல் பண்ணைப் புருஷனைப் பிரித்துக் கொண்டு போகிற பாவத்தை, நான் ஒரு நாளும் செய்ய மாட்டேன். அப்படிப்பட்ட பாதகி நான் அல்ல. அத்தோடு மாமியாருக்கு உதவி செய்ய வேண்டியது, மருமகளின் கடமை. நான் இல்லாமல் அத்தையால் எப்படி சமாளிக்க முடியும்?'' என்று கண்ணைக் கசக்கினாள்.

''உதவியா? என்ன உதவி?'' என்று மனைவியைப் பார்த்தார் தாமோதரன்.

''சொல்லுங்கள் அத்தை. நாள் முழுக்க உங்களோடு இருந்து..''

தகராறைத் தணித்துவிடும் ஆசை, திலகத்துக்கும். எனவே ''ஆமாங்க நிறையச் செய்வாளே. டி.வி. தொடரெல்லாம் பார்த்துக் கதை சொல்லுவாளே. அவள் சொல்லாமல் அந்தக் கதையெல்லாம், எனக்கு எப்படித் தெரியும்?'' என்று கள்ளமற்றுச் சொன்னாள்.

''பரவாயில்லை, ரொம்பப் பெரிய உதவிதான்'' என்று தாமோதரன் ஏளனமாகச் சிரித்தார். ''இந்த உதவி இல்லாமல் உன் அத்தையால், வாழ முடிகிறதா இல்லையா என்று பார்ப்போமா? என்ன சொல்லு



கிறாய்?'' என்று ஆனந்தியிடமே இரக்கமற்றுக் கேட்டார்.

ஒரு கணம் திகைத்துவிட்டு ''அதெல்லாம் முடியாது. பெரிய பொறுப்புகளை உதறிவிட்டு, குடும்பத்தை இரண்டாக்கிக் கணவனைக் கூட்டிப் போனாள் என்று, என்னை யாரும் சொல்லக் கூடாது. அதனால் நான் போக மாட்டேன். என் புருஷனையும் போக விட மாட்டேன்'' என்றவள் கணவனிடம் திரும்பினாள். ''சும்மா இங்கே நின்று மரியாதை இல்லாமல் பெரியவர்களிடம் சண்டை போடாமல் உள்ளே வாருங்கள். சொன்னால் கேளுங்கள்'' என்று திகைத்து விழித்த தினகரனை கை பற்றி, இழுத்துக் கொண்டு போய் கதவைச் சாத்திக் கொண்டாள்.

''இங்கே இருப்பதானால், என் வார்த்தைக்கு எதிர்வார்த்தை இருக்கக் கூடாது'' என்ற தாமோதரனுக்கு முணுமுணுப்பாய்க் கூட மறுப்பே கிடையாது.

இவ்வளவும் தன் அசட்டுத்தனத்தால் என்று வருத்தமாக இருந்தாலும் இருவரும் ஓடி ஒளிந்த விதம் சௌமியாவுக்கு வேடிக்கையாகவும் இருந்தது. மெல்லிய குரலில், ''பெட்டிப் பாம்பாக அடக்கி விட்டீர்களே அப்பா'' என்று பாராட்டினாள்.

லேசாக முறுவலித்து ''நிம்மதியாக இரு'' என்றார் தந்தை.

இருவர் முகத்தையும் மாறிமாறிப் பார்த்து, ''அப்படியானால், பாப்பா கல்யாணம் இப்போது இல்லையா?'' என்று திலகம் வருத்தத்துடன் கேட்டாள்.

''நல்ல மாப்பிள்ளை கிடைத்ததும் செய்யலாம்'' என்று தாமோதரன் முறுவலித்ததும் திருப்தி அடைந்து ''அடடா அடுத்த கப் பாயாசத்தை அப்படியே வைத்துவிட்டீர்களே, இரண்டு அப்பளம் பொரித்துத் தரட்டுமா? பொடித்துப் போட்டுச் சாப்பிட உங்களுக்குப் பிடிக்குமே'' என்று கேட்டாள்.

''கொடும்மா. உன் பாயசமும் அதுவுமாகப் பிரமாதமாக இருக்குமே'' என்று அவர் கூறவும் மகிழ்ச்சியோடு சமையலறையை நோக்கிச் சென்றாள்.

சௌமியாவுக்கு தந்தையை எண்ணுகையில் பெருமையாக இருந்தது. அவள் மடத்தனமாகத் தொடங்கி வைத்த பிரச்சினையை, எவ்வளவு அழகாக முடித்து வைத்துவிட்டார்.

மகன், மருமகளுக்குக் குட்டு வைத்த விதம் பிரமாதம் என்றால், மனைவியையும் மகிழ்ச்சியாகவே இருக்க வைத்துவிட்டாரே!

என்னவோ, வீட்டில் இனி நிம்மதியாக இருக்கலாம்.

இப்போது மகிழ்ச்சியைக் கொண்டாடவே, மீண்டும் பாயசம் பருகினாள் அவள்.

அவளுடைய அண்ணனின் அறைக்குள் நடந்த பேச்சுவார்த்தை பற்றித் தெரிந்திருந்தால், அந்த அடுத்த கப் பாயசம், ஒரு மிடறேனும், அவளது தொண்டைக் குள் இறங்கியிருக்குமோ, என்னவோ?

''கிழட்டுச் சிங்கம் கர்ஜிக்கிறது. அது சும்மா கத்திக் கொண்டு கிடக்கட்டும். அதற்காக, நாம் ஒன்றும்



சும்மா இருந்து விடப் போவது இல்லை. விட்டால் அவளுக்கு முப்பது வயதானாலும் கல்யாணம் செய்து வைக்க மாட்டார், உங்கள் அப்பா. அப்படி, அவளை முதிர்கன்னியாக வாட, நான் விட்டு விடுவேனா? நாத்தனார் என்றால், சொந்தத் தங்கையை விட, மேல் அல்லவா? சௌமி திருமணம் நம் பொறுப்பு. நாம் நம் வேலையைத் தொடர்ந்து செய்வோம்'' என்று கணவனிடம் சொல்லிக் கொண்டிருந்தாள், அவளுடைய அருமை அண்ணி.

புகுந்த வீட்டாரின் மேல், மனைவி கொண்டிருந்த பாசத்தை மெய் மறந்து கேட்டுக் கொண்டிருந்தான், சௌமியாவுடைய அண்ணன்.

பெரும் பிரச்சினையான கடை விவகாரம்; அப்படியே நின்றது.

ஏற்பாடு செய்வதாகச் சொன்னானே, செய்வான் என்று அதைப் பற்றிக் கொண்டு மனதை அமைதிப் படுத்த முயன்றாள் சௌமியா.

ஆனால் உள்ளூர ஒரு பயமும் வந்தது. அப்பாவுக்காக என்று அவருக்குத் தெரியாமல் அவள் செய்த ஒன்று பெரும் தவறாக முடிய இருந்தது. இது அடுத்தது. அதிலும், ஏதேனும் குளறுபடி ஆகிவிடக் கூடாதே என்ற பயம்.

ஆனால் யாரிடம் உதவி கேட்டாள் என்பதும் இருக்கிறதல்லவா?

அவள் முதலில் உதவி கேட்டது அப்பாயாரிடம் கேட்கக்கூடாது என்றாரோ அவர்களிடம்.

ஆனால் இவனுக்கு ஏற்கனவே நன்றி தெரிவிக்க வேண்டும் என்றல்லவா சொன்னவர். நல்லவனாக மனதில் எண்ணியிருக்கிறார் என்றுதானே அர்த்தம்.

என்ன செய்கிறான்? ஏது செய்கிறானோ? ஆனால், என்ன செய்ய முடியும்? அப்படி, ஏதாவது செய்யக் கூடுமானால் அதை அப்பாவே செய்திருக்க மாட்டாரா?

முழுதாக இரண்டு தினங்களுக்குள் என்னென்னவோ எண்ணி, சௌமியா படாதபாடு பட்டு விட்டாள்.

இரண்டு நாட்களுமே மாலையில் அவள் சற்று அதிக நேரம் பூங்காவில் காத்திருந்து பார்த்தபோதும், பிரியரஞ்சன் அந்தப் பக்கம் வரவேயில்லை.

அவன் ஒன்றும் செய்யவில்லையே என்பதை விட, அவனால் ஒன்றும் செய்ய முடியவில்லை போலிருக்கிறதே? அதற்காக அவளைச் சந்திக்கக் கூசி ஒதுங்கும் அளவுக்கு மனம் வருந்துகிறான் போலிருக்கிறதே என்ற வேதனைதான், அவளுக்கு அதிகமாக இருந்தது.

நேரில் பார்க்க முடிந்தால், இதில் தோல்வியைப் பெரிதாக எண்ணி வருந்தவோ, வெட்கப் படவோ தேவையில்லை. அப்பாவே ஒன்றும் செய்ய முடியாமல் திணறிக் கொண்டு இருப்பதுதானே, என்று சொல்லித் தேற்றியிருப்பாள்.

இன்னும் ஒருநாள் பார்த்துக் கொண்டு, டெலிஃபோனிலாவது, அவனைத் தேற்ற வேண்டியது தான் என்று முடிவு பண்ணிக் கொண்டு சௌமியா காத்திருந்தாள்.



அன்று காலையில் 'நல்ல நேரம்' என்று காலண்டரில் போட்டிருந்த நேரத்தில் தாமோதரனைக் காட்டிலும், சற்று மூப்பாகத் தோன்றிய ஒருவர், 'தினா ஸ்டோர்'சுக்குள் நுழைந்தார்.

வரும்போதே, தான் எதையும் வாங்க வரவில்லை என்பதைக் காட்டும் விதமாக, ''என் பெயர் ராமசாமி, நீங்கள் என்னைத் தப்பாக எடுத்துக் கொள்ளக்கூடாது. நான் ஒரு முக்கியமான விஷயமாக உங்களிடம் பேசத்தான் வந்தேன்'' என்று தெரிவித்தபடியே உள்ளே வந்தார்.

''சொல்லுங்கள்'' என்றார் தாமோதரன். ''முதலில் உட்காருங்கள். உட்கார்ந்து சொல்லுங்கள்'' என்று ஒரு நாற்காலியை அருகில் இழுத்துப் போடும்படி, சகாயத்துக்கு சைகை செய்தார்.

வந்தவரின் சுற்றியலைந்த பார்வை, சௌமியாவிடம் நிலைத்தது.

''பெண்ணா? லட்சணமாக இருக்கிறாள். பெரிய இடத்தில் மணமாகி, ஓகோ என்று வாழப் போகிறாள். அப்புறம்... நாம் கொஞ்சம் தனியாகப் பேசலாமா?'' என்று உட்காராமலே வினவினார்.

''இவள் என் மகள். இவளுக்குத் தெரியாமல் எதையும் நான் பேசுவதில்லை. சும்மா சொல்லுங்கள்'' என்றார், தாமோதரன்.

''இதோ'' என்று அமர்ந்து தொடங்கினார். ''பாருங்கள் சார். நான் சொல்கிறேனே என்று என்னைத் தப்பாக, எடுத்துக் கொள்ளக் கூடாது. மூலைப் பெரிய

கடைக்கு பெரிதாக 'கோடவுன்' தேடுகிறார்கள். உங்கள் கடையைக் கொடுத்தால், சரக்கோடு எடுத்துக் கொள்கிறார்களாம். விலைக்கு என்றாலும், மார்க்கெட் நிலவரப்படி தந்து விடுவார்கள். அல்லது வாடகையாகத் தருவதாகச் சொல்லுகிறார்கள். யோசித்துப் பதில் சொல்லுங்கள்...'' என்று ராமசாமி நிறுத்தினார்.

சிறு அமைதிக்குப் பின், ''என்ன ரேட் கொடுப்பதாகச் சொல்லுகிறார்கள்?'' என்று தாமோதரன் கேட்டார்.

''மார்க்கெட் ரேட்டுதான், சார். விலைக்கு என்றால் இந்த இடம் இன்றைய நிலவரப்படி, முப்பது லட்சம். வாடகை என்றால் பகடியும், முன் பணமும் சேர்ந்து ஐந்து லட்சம். வாடகை பன்னிரண்டாயிரம். சரக்குக்கு, அசல் விலை தருகிறார்கள்... உங்கள் சிப்பந்திகள் பற்றி, ஏதாவது செய்யச் சொல்லுவீர்கள் என்று கேள்விப்பட்டோம். இதே மாதிரிக் கடைதானே? இருவருக்கும், அதே வேலை தருவதாகச் சொல்லச் சொன்னார்கள்'' என்று முடித்தார், வந்தவர்.

தினம், தினம், மின்சாரச் செலவும், கடையாட்கள் சம்பளமும் கொள்முதல் பணத்துக்கான வட்டியுமாகக் கணிசமான தொகை நஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிற இந்த வேளையில் இது பெரும் மீட்சிதான். கடவுளாகப் பார்த்து இந்தப் பெரிய கடைக்காரர் மனதில் புகுந்து வேலை செய்த மாதிரிதான். அந்த வகையில், இது ஒரு வரமே.



ஒரு காதை இவர்கள் பேச்சில் வைத்தபடி, தொலைவில் நின்ற மணிவாசகத்தின் முகமும் தெளிவு பெற்றிருந்தது.

எல்லோருக்கும் நல்லதுதான்.

ஆனால் கையில் இருக்கும் தொழில் போகிறது என்று தந்தை நினைப்பாரோ?

சிறு கவலையுடன், சௌமியா தாமோதரனைப் பார்த்தாள்.

அவருக்கும் அதே எண்ணம்தான் இருந்ததோ, என்னவோ?

''இதுபற்றி நான் சற்று யோசிக்க வேண்டும். வீட்டிலும் கலந்து கொண்டு இரண்டு நாட்கள் கழித்து முடிவு சொல்கிறேன்'' என்றார் அவர்.

''சரி சார். நான் போய் முதலாளியிடம் நீங்கள் சொன்னதைத் தெரிவித்து விடுகிறேன், சார்'' என்று எழுந்தார் ராமசாமி. சௌமியாவின் பக்கம் திரும்பி முறுவலித்து, ''உன்னைப் பார்த்ததில், எனக்கு மிகுந்த சந்தோஷம். வரட்டுமா?'' என்று அவளிடமும் விடை பெற்றுச் சென்றார்.

பொதுவாக கடை உரிமையாளருடைய மகள் என்பதால், அவளுக்கும் ஒரு மரியாதை எப்போதுமே கிடைப்பது, உண்டுதான். ஆனால் இவர் சற்று அதிகப்படியாக அதைக் காட்டிய மாதிரி... அவளைப் பார்த்ததில் உண்மையாகவே மகிழ்ச்சியுற்றது போலவே தோன்றியது.

ஏன்?

## 15

ஆனால் ராமசாமியின் மகிழ்ச்சியைப் பற்றி யோசித்துக் கொண்டிருக்க இடமின்றி, அவர் கொண்டு வந்த சேதி, செளமியாவின் மனதில் முன்னிடம் பெற்றது.

தந்தை என்ன நினைக்கிறாரோ என்று அவள் தாமோதரனைப் பார்க்க, அவரும் அதேசமயம் மகளைப் பார்த்தார். அவளைப் போலவே, அதே நினைவாக மகள் என்ன நினைக்கிறாளோ என்பதாகத்தானே இருக்க வேண்டும்?

இருவருக்குமே, சிரிப்பு வந்தது.

தந்தையின் முகத்தில் கவலைக் கோடுகள், வெகுவாகக் குறைந்து விட்டது போலத் தோன்றவும், மகளுக்கும் மனம் லேசாயிற்று.

எப்படியும், நஷ்டம் என்கிற புதை குழியில் அமிழ்ந்து கொண்டிருந்தது நிறுத்தப்படுகிறதே!

வீடு செல்லும்போது, 'வீட்டில் கலந்து கொண்டு' என்று தாமோதரன் சொன்னது, செளமியாவுக்கு நினைவு வந்தது.

அம்மாவிடம் இது பற்றி அப்பா என்ன கலந்து ஆலோசிக்கக்கூடும்?

யோசித்த போதும், வாய்விட்டு அவள் அதைக் கேட்கவில்லை. தாயைப் பற்றிக் குறைவாகத் தோன்றும்



வண்ணம், பிள்ளைகள் பேசத் தாமோதரன் விட மாட்டார். சிறு வயதில் ஒரு தரம், அப்படி ஏதோ சொன்னதற்காக தினகரனை, பெல்டால் விளாசி யிருக்கிறார். இன்று வரை எல்லோர் மனதிலும், அந்த நினைவு நிலையாக இருந்து வந்திருக்கிறது.

வீடு சென்று எல்லோரும் உணவருந்தி முடித்ததும், ''சில விஷயம் பேச வேண்டும். வேலை முடிந்து விட்டால், ஹாலுக்கு வாம்மா'' என்றார் மனைவியிடம். ''செளமி, கொஞ்சம் பாக்கு எடுத்து வாம்மா. ஒரு பிடி அதிகம் உண்டு விட்ட மாதிரி இருக்கிறது'' என்று மகளையும் கூப்பிட்டுக் கொண்டார்.

அழைக்காமலே, டி.வி. பார்க்கிற சாக்கில் தினகரன், ஆனந்தியும் அங்கே இருந்தார்கள். அவர்களுக்குத் தெரியாமல் வீட்டில் எதையும் பேசிவிடக்கூடாது அல்லவா?

தாமோதரனும், எதையும் மறைத்துச் செய்யும் எண்ணத்தில் இல்லை.

எனவே திலகம் வந்து அமர்ந்ததும், ''நம் கடையில் கொஞ்சம் விற்பனை சரியாக இல்லை யல்லவா, திலகம்? அத்தோடு எனக்கும் முன்னைப் போல, ஓடியாடி உழைக்க முடியவில்லையா...'' என்று அவர் தொடங்குமுன், இடையில் குறுக்கிட்டு, ''ஐயோ உடம்பை என்னங்க செய்கிறது?'' என்று பதறினாள் அவர் மனைவி.

''பெரிதாக ஒன்றும் இல்லையம்மா. வயதாகிறது இல்லையா? ஒய்வு தேவைப்படுகிறது. அவ்வளவுதான்'' என்று அவளைச் சமாதானப் படுத்திவிட்டு தாமோதரன் மீண்டும் தொடர்ந்தார்.

''பெரிய கடை வந்ததிலிருந்து, விற்பனை குறைவு. அதற்குச் சரியாக நாமும் கடையைப் பெரிதாக்கி நிறையச் சாமானை வாங்கிப் போட்டுச் செய்யலாம் என்றால், எனக்கு உடம்பு தாங்காது.''

''உடம்புக்கு முடியாது என்றால் செய்யாதீர்கள், தினாப்பா. உங்கள் ஆரோக்கியம்தான், மற்ற எல்லாவற்றையும் விட, ரொம்ப முக்கியம்.''

தந்தை எப்படிக் கொண்டு வருகிறார் என்பது புரிய, சௌமியா உள்ளூர அவரைப் பாராட்டினாள்.

பெருமையாக அவள் பார்த்துக் கொண்டிருக்க அவர் விஷயத்துக்கு வந்தார்.

''அந்தப் பெரிய கடைக்காரர்களுக்குப் பெரிதாக ஒரு கோடவுன் வேண்டுமாம். நாம் சொல்லுகிற விலைக்கு நம் கடை இடத்தை வாங்கிக் கொள்வதாகச் சொல்லுகிறார்கள். அல்லது வாடகைக்கு எடுத்துக் கொள்கிறார்களாம். என்ன செய்யலாம் சொல்லு. தொடர்ந்து கடையை நடத்தவா? அல்லது...''

''வேண்டாம். விலைக்கோ, வாடகைக்கோ உங்களுக்குச் சரியாகப் படுகிறபடி கொடுத்து விடுங்கள். நீங்கள் வீட்டிலிருந்து உடம்பைப் பார்த்துக் கொள்ளுங்கள்'' என்றாள் திலகம்.



''சரிம்மா. நீ சொல்கிறபடியே செய்கிறேன்'' என்றார் தாமோதரன்.

''வீட்டின் மூத்த பிள்ளை என்கிற வகையில் நான் ஒரு யோசனை சொல்கிறேன். வாடகைக்கு, இன்னொருத்தன் பின்னால், அலைந்து கொண்டிருப்பது கஷ்டம். மொத்தமாகப் பணத்தை வாங்கி விட்டால், நல்லது. அதை நல்லபடியாகப் பயன்படுத்தி நிறையச் சம்பாதிக்கலாம்'' என்றான் தினகரன்.

''ஆமாம், தினாப்பா. பையன் சொல்லுகிற மாதிரியே செய்யுங்கள்'' என்றாள் அன்னை.

''ஆமாம், பணத்தை வாங்கி என்னிடம் கொடுங்கள். நாலே மாதத்தில், அதை நாலு மடங்காக ஆக்கிக் காட்டுகிறேன்'' என்று வாய்ப்பை விடாமல் தினகரன் மேலும் சொன்னான்.

குரலைச் சற்று உயர்த்தி, ''பணத்தை எப்படி முதலீடு செய்வது என்று எனக்கு யாரும் அறிவுரை சொல்லத் தேவையில்லை. அதை நான் பார்த்துக் கொள்வேன். இந்தப் பணத்தை எப்படிப் பிடுங்குவது, என்று கணக்குப் போடாதே. உனக்கு நான் அதில் ஒரு பைசாகூடக் கொடுக்கப் போவது இல்லை.''

''அதுதான் ஏன் என்று கேட்கிறேன். நான் சம்பாதித்தால், உங்களுக்கு ஆகாதா?'' என்று தொடங்கினான் மகன்.

தாமோதரன் பொறுமையாகவே பேசினார். ''பாரப்பா, நீ இன்று விதை போட்டு நாளை பழம் பறிக்க

ஆசைப்படுகிறாய். அது எந்தத் தொழிலிலும் நடக்கிற காரியம் அல்ல. இந்தத் தொழில்தான் உனக்குப் பிரியம் என்றால் இது பற்றிப் படி. படித்து முடித்துவிட்டு இரண்டு மூன்று ஆண்டுகள் யாராவது விஷயம் தெரிந்தவர்களைச் சார்ந்திருந்து, பயிற்சி எடு. அதன் பிறகு வா. நான் பணம் தருகிறேன். ஒன்றும் தெரியாமல் சும்மா வாரியிறைக்க, நான் விடமாட்டேன்'' என்று முடித்தார்.

''அதாவது உங்களைப் போல, எனக்குத் தலை நரைத்த பிறகு தருகிறேன் என்கிறீர்கள். வேண்டாம்பா. வேண்டவே வேண்டாம். நீங்கள், எனக்குப் பணம் தரவே வேண்டாம். ஆனால் உங்கள் உதவியே இல்லாமல் உங்கள் கண் முன்னால், நான் பெரிய ஆளாக வளர்ந்து காட்டுகிறேன் பாருங்கள்'' என்று பெற்றவரிடம் சவால் விட்டான் தினகரன். ''எனக்கு உதவி பண்ண வேறே ஆள் இருக்கிறது. ஆ...! என்னடீ, ஏன் கிள்ளினாய்?'' என்று அருகிலிருந்த மனைவியிடம் திரும்பிக் கேட்டான்.

''அது... பின்னே என்ன? மாமாவிடம் போய்க் கோபமாய்ப் பேசுகிறீர்களே. அத்தை வருத்தப்பட மாட்டார்களா? அத்தை வருந்தப்பட்டால், எனக்குத் தாங்குமா? வாருங்கள். நீங்கள் தூங்க வேண்டிய நேரம் ஆயிற்று'' என்று அவனை அழைத்துச் சென்றாள் அவள்.

''ஆனந்தி நல்ல பெண். சீக்கிரமே நம் பிள்ளையைத் திருத்தி விடுவாள்'' என்றாள் திலகம் திருப்தியோடு.



''ஆமாம். அப்படியே எல்லாருமே திருந்தினால் நல்லதுதானே?'' என்றார் தாமோதரன்.

பிரியரஞ்சன் அன்று மாலை பூங்காவுக்கு வந்தான்.

மகிழ்ச்சியோடு முறுவலித்து, நடந்த விவரம் சொன்னாள் சௌமியா.

பெரிய கடையிலிருந்து ஆள் வந்து கேட்டது பற்றிக் கூறி, ''அப்பாடி என்று இருக்கிறது ரஞ்சன்'' என்றாள் அவள்.

''இதற்கு உன் அப்பா என்ன சொல்வதாக இருக்கிறார்?'' என்று கேட்டான் அவன்.

திகைத்து நோக்கி விட்டு விழி அகல, ''ரஞ்சன்'' என்று அதிசயப்பட்டாள் அவள். ''நீ... நீங்கள்... உங்களுக்குத் தெரியும். எப்படி? எப்படித் தெரியும்? இது... உங்கள் ஏற்பாடோ? ஆனால், எ... எப்படி முடிந்தது?'' என்று ஆச்சரியத்துடன் விசாரித்தாள்.

லேசாகத் தலையசைத்தான், அவன். ''அவர்கள், கோடவுனுக்காக இடம் தேடுகிறார்கள் என்று கேள்விப்பட்டேன். ராமசாமியைக் கொஞ்சம் தெரியும். காதில் ஒரு வார்த்தை போட்டேன். அவ்வளவுதான்... ஆனால், உன்னிடம் கொஞ்சம் அதிக எச்சரிக்கையோடு இருக்க வேண்டும் என்று தெரிகிறது.''

''ஏன்? ஏன் அப்படிச் சொல்லுகிறீர்கள்? முன்பு கூடச் சொல்லியிருக்கிறீர்கள்.''

''வேண்டாததையெல்லாம் கண்டு கொள்கிறாயே, அதனால்தான்.''

''அப்படியானால், எதையேனும் மறைக்கிறீர்களா?''

''உரிய நேரத்தில் தெரிவிக்கலாம் என்றும் நினைத்திருக்கலாமே?''

''ஓகோ'' என்றவள் சட்டெனக் கண்களை மூடிக் கொண்டாள். ''இப்போது எதிரே நீங்கள் இருப்பதை பார்த்துத் தெரிந்து கொள்ளலாமா? அல்லது உரிய நேரம் வரும்வரை, கண்களை மூடிக் கொண்டுதான் இருக்க வேண்டுமா?'' என்று அவள் கேட்கவும், அவன் கடகடவென்று சிரித்தான்.

சிரித்துவிட்டு, ''இப்படிக் கண்ணை மூடிக் கொண்டிருப்பது பல விதத்தில் எனக்கு வசதிதான். கன்னத்தில் ஒன்று வைத்துவிட்டு நானில்லை என்று சொல்லி விடலாம் இல்லையா?'' என்றான் அவன்.

''ஆமாம். ஆசைதான். அப்போது என் கை பூப்பறித்துக் கொண்டிருக்கும் என்றா எண்ணினீர்கள்? மறுவினாடியே, உங்கள் கன்னம் பழுத்து விடுமாக்கும்.''

''நீ பயங்கரமான ஆள் என்று, நான் சொன்னது சரிதானே?'' என்று அவன் மடக்க இருவருமே நகைத்தனர்.

சிரித்தவாறே, ''அப்படியானால் நீங்களும் பயங்கரவாதிதான். கன்னத்தில் ஒன்று வைப்பதாக



நீங்கள்தானே முதலில் சொன்னீர்கள்'' என்று தன் பங்குக்கு அவனை மடக்கினாள் சௌமியா.

கண்ணில் சிரிப்புடன் நோக்கி, ''கன்னத்தில் அறை மட்டும்தான் வைப்பார்களாக்கும்?'' என்று அவன் மென் குரலில் கேட்க, சட்டென அவளுக்கு மூச்சடைத்தது.

சமாளித்துக் கொண்டு ''எல்லாம் ஒன்றுதான். பதிலும் ஒன்றுதான்'' என்று முணுமுணுத்தாள் அவள்.

''கன்னத்தில் அன்பாகத் தட்டிக் கொடுக்கலாம் என்று நான் சொன்னேன். நீயானால் அதற்கும் பதில் அடிதான் என்கிறாய். இப்போது சொல் யார் பயங்கரவாதி?''

கன்னத்தில் முத்தம் கொடுப்பதாகச் சொன்னாய் என்று நினைத்தேன் என்று சொல்ல மாட்டாமல், முகம் சிவந்து நின்றாள் அவள்.

ரசித்துவிட்டு, ''அப்புறம்?'' என்று பேச்சை மாற்றிக் கேட்டான் பிரியரஞ்சன். ''இன்னும், வேறு ஏதோ இருக்கிற மாதிரி தோன்றுகிறதே'' என்று விசாரித்தான்.

சற்று தயங்கிவிட்டு தினகரன் அடித்த திருமணக் கூத்து பற்றிச் சுருக்கமாகக் கூறினாள். ''வேண்டவே வேண்டாம் என்று நான் சொன்ன பிறகும், அவன் வசதிக்கு ஏற்பாடு செய்திருக்கிறான்'' என்று நடந்த விவரம் சொன்னாள்.

''உன் அண்ணனுக்கு மூளை கொஞ்சம் மட்டு என்று நான் நினைத்தது சரியாகத்தான் இருக்கிறது'' என்றான் பிரியரஞ்சன்.

அண்ணனைச் சொன்னது பிடிக்காமல், ''அண்ணன் என்பவன், தங்கைக்குத் திருமணம் செய்ய முயற்சிப்பது உலக இயற்கை. இதைப் புத்தி மட்டு என்று எப்படிச் சொல்லலாம்?'' என்று சற்று கோபமாகவே கேட்டாள், அவள்.

மந்தகாசமாய் ஒரு புன்னகை செய்தான் பிரியரஞ்சன். ஒரு விரலால், அவளது உதட்டோரத்தைத் தொட்டு, ''ஆனால் இந்தத் தங்கை இன்னொருவனை மணக்க மாட்டாள் என்று அந்த அண்ணன் அறிந்திருக்கவில்லையே'' என்று மர்மமாய் உரைத்தான்.

அவளது திகைத்த முகத்தைப் பார்த்து மீண்டும் முறுவலித்துவிட்டுக் கையுயர்த்தி விடை பெற்றுக் கிளம்பி விட்டான்.

வெகு நேரம், சௌமியாவுக்கு ஒன்றுமே ஓடவில்லை.

'இன்னொருவனை' மணக்க மாட்டாள் என்று எவ்வளவு திடமாகச் சொல்லுகிறான்.

திருமணப் பேச்சே, வெறுப்பாக இருந்ததும், இன்னொருவன் பேச்செடுத்ததுமே குமட்டியதும் நினைவு வர, அவள் மனமும் தெளிவடைந்தது, 'அப்படித்தான்' என்றது.



ஆனால், இன்னொருவனை மணக்க மாட்டாள் என்றால் அவள் மணக்கக் கூடியவனாய் ஒரே ஒருவன் மட்டுமே இருக்கிறான் என்றுதானே அர்த்தம்?

அந்த ஒரே ஒருவன் யார்?

கனிந்த பார்வையுடன் எதிரே நின்று மென்மையாகச் சிரித்தான் பிரியரஞ்சன்.

இவனா, என்று எண்ணும்போதே அவளுக்கு உடம்பெல்லாம் குறுகுறுத்தது.

அவளுக்குத் தேவைப்பட்ட போதெல்லாம், 'தோன்றாத் துணையாக' என்பார்களே, அதற்கிணையாகத் 'தோன்றும் துணையாக' வந்து உதவுகிறவன்.

அவன்தான் என்று அறிந்ததே ஒரு சுகம் என்றால் அதை அவளுக்கு முன்னதாக அவனும் அறிந்து வைத்திருந்தான் என்பதும், அதில் அவனுக்கும் மகிழ்ச்சியே என்பதும், அவளுக்கு விவரிக்க இயலாத இன்பத்தை அளித்தது.

இதற்கு மேல் ஒரு பெண்ணுக்கு என்ன வேண்டும்?

துள்ளிக் குதித்து ஆடி ஓட வேண்டும் போல இருந்தாலும், பிறர் பைத்தியம் என்று கல்லால் அடித்து விடக்கூடாதே என்று அதை அடக்கிக் கொண்டு அமைதியாக வீடு வந்து சேர்ந்தாள்.

கடையை விற்கப் போவதால் இனி கடைக்குச் செல்ல வேண்டிய தேவை இல்லையல்லவா?

ஆனால் அவள் நாடி வந்த தனிமை, வீட்டில் அவளுக்குக் கிடைக்கவில்லை. அதற்குக் கேடாக, ஆனந்தி வந்து அறுத்தாள். தினகரன் அதற்கு ஒத்து ஊதினான்.

தினகரனுடைய நண்பர் ஒருவர், சின்னத் திரைக்குப் படம் எடுக்கிறாராம், மறுநாள் பூஜை போடப் போவதாக அழைத்திருக்கிறாராம். ஒரே பெண்ணாகப் போக, அவளுக்கு ஒரு மாதிரி இருக்கிறதாம். கூடத்துணைக்கு, சௌமியாவும் போக வேண்டுமாம். சேர்ந்து போய் ஜாலியாகச் சுற்றிப் பார்த்துவிட்ட வரலாமாம்.

சின்னவளின் மறுப்பைக் காதிலேயே போட்டுக் கொள்ளாமல் அவள் தொடர்ந்து, சொன்னதையே சொல்லிக் கொண்டிருக்கவும், இந்தப் பேச்சை ஒரு முடிவுக்குக் கொண்டு வருவதற்காகவே, சௌமியா அவளிடம் சரியென்றாள்.

ஆனால், அந்தச் சம்மதமே, அவளது வாழ்வை அழிப்பதற்கான முன்னோடி என்று அப்போது அவளுக்குத் தெரியாது.

## 16

ஆனந்தியோடு கூட வருவதாக ஒப்புக் கொண்டு விட்டபோதும், அவளோடு அதிக நேரம் கழிப்பது



முடியாது என்பது, சௌமியாவின் அனுபவப் பாடம். முழுக்க முழுக்க, ஆனந்தியின் சுய புராணத்தை மட்டுமேதான் கேட்டுக் கொண்டிருக்க நேரும்.

எனவே, அவளோடு சேர்ந்திருக்கும் நேரத்தைக் குறைக்க எண்ணியவளாய், "ஆனால் காலையில் கடைக்குப் போய்விட்டுத்தான் வருவேன்" என்று நிபந்தனையிட்டாள்.

அப்படியாவது, தன்னை விட்டுவிட்டுப் போய் விட மாட்டாளா என்கிற ஆசையில் சொன்னது.

ஆனால், "அதெப்படி..." என்று தினகரன் யோசித்த போதும், ஆனந்தி அதற்கும் ஒத்துக் கொண்டாள். அதன்பிறகே, சௌமியா விரும்பிய தனிமை, அவளுக்குக் கிட்டியது.

அப்போதும் அறையைச் சாத்திக் கொண்டு அதிக நேரம் இருக்க முடியாமல், திலகம் அழைத்தாள். "கடைக்குப் போகவில்லை என்றால், எனக்கு உதவி பண்ணேன். முறுக்குக்கு மாவு பிசைந்து விட்டேன். பிழிந்து கொடு வா." என்றாள்.

"என்னம்மா..." என்று சிணுங்கியவள், "திருமணமாகிற வயது. சமையல் எல்லாம் தெரிய வேண்டாமா?" என்று திலகம் கேட்டதும், உடனே எழுந்து தாயிடம் சென்று விட்டாள்.

வட்டவட்டமாக முறுக்குக்குப் பிழியும்போது அவளுக்கு ஒரு விஷயத்தில்தான் சந்தேகம். பிரியரஞ்சனுக்கு முறுக்கு பிடிக்குமா?

ஆனால் கரகரப்பாக வாயில் போட்டதும் கரையும், அம்மாவின் முறுக்கைப் பிடிக்காதவர்கள் உலகத்திலேயே இருக்க முடியாது. அதிலும் பூங்காவில் பகிர்ந்து உண்ட அனைத்துப் பலகாரங்களுமே, அவனுக்குப் பிடித்துதானே இருந்தன? அவை அனைத்தும் அவளுடைய தாயார் செய்தவைதானே?

முறுக்கு பிழிந்தபடியே பல்வேறு பலகாரங்களைப் பற்றி அதிலும் பிரியரஞ்சன் மிகவும் ரசித்து உண்டவைகளைப் பற்றிய செய்முறைகளை வெகு சிரத்தையுடன் செளமியா, தன் தாயிடம் கேட்டுத் தெரிந்து கொண்டாள்.

திலகத்துக்கும், அதில் மிகுந்த மகிழ்ச்சி.

மறுநாள் காலையிலேயே, ஆனந்தி வந்து விட்டாள்.

''இந்தப் பட்டைக் கட்டுகிறாயா? அல்லது அந்தப் பட்டு தேவலையா? எதற்குச் சட்டை சரியாக இருக்கிறது?'' என்று அவளது தொண தொணப்பை செளமியாவால் தாங்கவே முடியவில்லை.

இரவெல்லாம், பிரியரஞ்சனைப் பற்றிய பல்வேறு கனவுகளில் அவள் சரியாகத் தூங்கவேயில்லை. ஒருவாறு விடிகாலையில்தாள் அப்போதும் உடல் அசதியில்தான் அவள் உறங்கத் தொடங்கியதே. கூடக் கொஞ்ச நேரம் தூங்கலாம் என்றால், அதைக் கெடுத்தது ஆனந்தியின் தொண தொணப்பு.



''அடடா, என்ன அண்ணி இது? நாம் என்ன கல்யாணத்துக்கா, போகிறோம்? எல்லாம் சுரிதார் போதும்'' என்று முடிக்கப் பார்த்தாள், சின்னவள்.

''அது புது படத்துக்குப் பூஜை போடுவது கிட்டத்தட்டக் கல்யாணம் மாதிரிதான் செய்வார்கள், செளமி. உன் அண்ணன் கூட பட்டு வேஷ்டிதான் கட்டுகிறார்கள். நானும் பட்டுச் சேலைதான். ப்ளீஸ் செளமி நீயும் பட்டுச் சேலையே கட்டிக் கொள்ளம்மா'' என்று கொஞ்சிக் கெஞ்சிப் பேசினாள், அண்ணிக்காரி. ''எங்கள் திருமணத்துக்கு உனக்கும், அண்ணிக்கும் ஒரே மாதிரி வாங்கியிருந்தார்களே, அதைக் கட்டினால் நன்றாக இருக்கும்.''

''அதுவா? கல்யாணச் சேலை மாதிரி, ஒரே ஜரிகை. ஊகூம். அதெல்லாம் முடியாது. அப்படியெல்லாம் வேஷம் போட்டுக் கொண்டுதான் வர வேண்டும் என்றால் நான் வரவே இல்லை'' என்று செளமியா திருப்பிக் கொண்ட பிறகுதான், ஆனந்தி கொஞ்சம் அடங்கினாள்.

''சரி சரி உன் விருப்பம். ஆனால்... சரி, அதை அப்புறம் பார்த்துக் கொள்வோம். நீ பதினோரு மணிக்கெல்லாம் வந்து விடேன், செளமி? நான் வேண்டுமானால், உன்னைச் சீக்கிரமாக அனுப்பும்படி மாமாவிடம் கேட்கட்டுமா. இன்று ஒருநாள் அனுப்புவதற்கு மாமா நிச்சயம் மறுக்க மாட்டார்.''

''அதெல்லாம் கேட்க வேண்டாம். நான் பன்னிரண்டு மணிக்கு மேல்தான் வருவேன் என்று முன்பே சொன்னேனில்லையா? மாற்றி மாற்றிப் பேசுகிறீர்களே. அப்படிச் சீக்கிரமாகப் போக வேண்டும் என்றால் நீங்கள் இருவரும் மட்டும் போங்கள். ஆனால் சரியாக மூன்று மணிக்கு நான் வீட்டில் இருக்க வேண்டும். அதை மட்டும் மறந்து விடாதீர்கள். அதற்கு மேல் தாமதம் ஆகும் போல இருந்தால், நான் ஆட்டோவில் தனியாகத் திரும்பி வந்து விடுவேன்'' என்றாள் சௌமியா கறாராக.

மூன்று மணிக்கு மேல் பிரியரஞ்சன் பூங்காவுக்கு வரக் கூடுமே. அதிலும் இன்று நிச்சயமாக வருவான் என்ற நம்பிக்கை, அவளுக்கு.

அவளுக்கு இருக்கும் துடிப்பு, அவனுக்கும் இருக்கத்தானே செய்யும்?

கடைக்குச் சென்றால், அங்கே அந்த ராமசாமி வந்தார்.

தாமோதரன் இன்றுதானே, முடிவு சொல்வதாகக் கூறியிருந்தார்? அதை அறிந்து போக வந்தார் அவர்.

தாமோதரன், கடையை வாடகைக்குக் கொடுப்பதாகக் கூறவும், ''அதுவும் நல்லதுதான், சார். ஒரு பொருளை விற்பது சுலபம். ஆனால் மீண்டும் வாங்குவது பகீரதப் பிரயத்தனம் ஆகி விடக் கூடும். கடையின் இருப்பு சரக்கு பற்றிப் பட்டியல், நாங்கள் போடவா? அல்லது நீங்களே போட்டுத் தந்தாலும்



சரிதான்...'' என்று அது பற்றிய விவரங்களைப் பேசத் தொடங்கினார்.

இப்படிச் செய்வது என்று தாமோதரன் முடிவு செய்த பின் சௌமியாவும் சிலது 'லிஸ்ட்' போட்டு வைத்திருந்தாள். அதை எடுத்து அவள் கொடுக்கவும் ராமசாமி, அவளைப் பார்த்துப் பெரிதாகப் புன்னகை செய்தார். ''அம்மா, ஏதோ பை உன் தயாரிப்பாமே? அதில் கொஞ்சம் தயாரித்துத் தர முடியுமா என்று கேட்கச் சொன்னார்கள்'' என்று கேட்டார்.

பை பற்றி, அவரிடம் யார் சொல்லியிருப்பார்கள் என்று சௌமியாவுக்குப் புரியாதா? புன்னகையோடு தலையாட்டினாள் அவள்.

எதிரி கடைக்கு என்பதை விட, பிரியரஞ்சன் சொன்னான் என்பதே பெரிதாகத் தோன்றிவிட, இங்கே கடையில் சும்மா உட்கார்ந்திருப்பதற்கு வெளியே போய் பை தயாரிப்புக்கான பொருட்களை வாங்கி வரலாமே என்று எண்ணிக் கிளம்பி விட்டாள்.

அண்ணி, முடிந்தவரை சீக்கிரமாக வரச் சொன்னது அவளுக்கு அடியோடு மறந்து போயிற்று.

பட்டு நூல்கள், சம்கி, வண்ணப் பெயிண்டுகள் எல்லாம் வாங்கிக் கொண்டு ஆட்டோவில் திரும்பி வரும்போது, ஒரு பெரிய வெண்ணிறக் கார், அவளது கவனத்தைக் கவர்ந்தது.

மூலைப் பெரிய கடையின் முன் வந்து நின்று கொண்டிருந்தது, அந்தக் கார்.

அன்று பிரியரஞ்சன் பூங்காவுக்கு வந்த கார். புதுக்கடை முன் அது வந்து நிற்பானேன்? அங்கேயும் பிரியரஞ்சன் சர்வே எடுக்கிறானா?

தவறாகத் திரும்பிக் கொண்டிருந்த ஒரு லாரியால் ஏற்பட்ட போக்குவரத்து நெரிசலில், சௌமியா ஏறி வந்த ஆட்டோவும், சற்று மெதுவாகத்தான் தெருவுக்குள் திரும்பிக் கொண்டிருந்தது.

வைத்த கண் வாங்காமல், அவள் பார்த்துக் கொண்டிருந்தபோதே, சீருடை அணிந்த காரோட்டி, கார்க் கதவைத் திறந்துவிட, அபியும், விபுவும் காரிலிருந்து இறங்கி ஒருவரை ஒருவர் துரத்தியபடி கிளுகிளுவென்ற பிள்ளைச் சிரிப்புடன் புதுக்கடைக்குள் ஓடினர்.

குழந்தைகள் இருவரும், ஓர் உரிமையோடு உள்ளே ஓடியது அவளை உறுத்தித் திகைக்க வைத்தது என்றால், அவர்களோடு பெரியவர்கள் யாரும் வராதது, மேலும் எதையோ உறுதி செய்தது.

அப்படியா அவள் ஏமாந்திருக்கிறாள்?

இருக்காது, இருக்காது. ஐயோ, இருக்காது என்று சௌமியாவின் மனம் பரிதவிக்கும் போதே அவர்களுடைய 'தினா ஸ்டோர்ஸ்' வந்துவிட்டது.

ஆட்டோவில் அவளைக் கண்டதும் சகாயம் ஓடி வந்து அவள் வாங்கி வந்த பொருட்களை எடுக்கலானான்.



ஆட்டோவுக்குப் பணத்தைக் கொடுத்துவிட்டு, "இதோ வருகிறேன் என்று அப்பாவிடம் சொல்லு" என்று சகாயத்தைப் பணித்துவிட்டு, புதிய கடையை நோக்கிச் சென்றாள்.

'பி ஆர் எலக்ட்ரானிக்ஸ்' என்ற அந்தக் கடையின் பெயர், புது அர்த்தத்தோடு அவளைத் தாக்கியது. பிரியரஞ்சனின் இரு பெயர்களின் முதல் எழுத்துக்களா?

...இது மூன்றாவது தலைமுறையின் கடை. பரந்தாமன், ரங்கநாதன் என்று அண்ணனும் தம்பியுமாகத் தொடங்கியதாம்... வழி வழியாக விருத்தி செய்து கொண்டே போகிறார்கள். பெயர் மட்டும் பி.ஆர்.தான். பையன்கள் பெயரில் இரண்டில் ஓர் எழுத்தாவது இருக்குமாம்...

புதுக்கடை வருகிறது என்றதும், யாரோ வந்து வம்பளந்தார்களே.

பிரியரஞ்சனுக்கு இரண்டு எழுத்துக்களுமே இருக்கின்றனவா?

ஆனால், விபு? சித்தப்பா பிள்ளை என்றானே. செல்லப் பெயர் 'விபு' பள்ளிப் பெயர் என்னவோ? அல்லது அவளை ஏமாற்றுவதற்காக அந்தப் பிள்ளையின் பெயரையே, பிரியரஞ்சன் விபு என்று மாற்றிச் சொன்னானோ, என்னவோ?

சேச்சே. அப்படி இருக்காது. எல்லாமே தப்பு. எல்லாவற்றுக்குமே, வேறு விளக்கம் இருக்கும்.

அவளுடைய ரஞ்சன் அவளை ஏமாற்ற மாட்டான். ஏமாற்ற மாட்டான்... ஏமாற்றவே மாட்டான்.

உருப்போட்டபடியே அந்தக் கடையினுள் அவள் செல்லுகையில் அந்தப் பிரியரஞ்சனையே, அவள் அங்கே காண நேர்ந்தது.

பணி புரிவோரின் மரியாதை கலந்த முறுவலை இயல்பாக ஏற்ற வண்ணம், அங்கங்கே அடுக்கப் பட்டிருந்த பொருட்களை லேசாக நகர்த்தியோ, திருப்பியோ அழகாக வரிசைப்படுத்தியவாறே, ஒவ்வொரு பகுதியாக மேற்பார்வையிட்டுக் கொண்டிருந்தான், அவன்.

கொஞ்சநஞ்சசந்தேகமும் இருந்து விடக்கூடாது என்று ''ஆள் என்ன கம்பீரமாக இருக்கிறான் பார்த்தாயா? அதெல்லாம் தலைமுறை தலைமுறையாக வருவது. எடுத்த எடுப்பில் முழுப் பொறுப்பையும் ஏற்றுப் பிரமாதமாக நடத்துகிறானாமே'' என்று பிரியரஞ்சனைக் காட்டி இருவர் பேசிக் கொண்டு போயினர்.

ஏன் நடத்த மாட்டான்?

ஏமாற்றும் கலையில் இவ்வளவு வல்லவன், வெற்றி பெறக் கேட்பானேன்?

என்ன மாதிரித் திட்டமடா, அப்பா.

முதல் நாள், 'தினா'வுக்கு முன்னால் குறுக்கும் நெடுக்குமாகப் பிரியரஞ்சன் நடை போட்டதே, கடையை நோட்டம் பார்க்கத்தானே.



தாமோதரன் இல்லாத நேரத்தில் கடைக்குள் வந்து என்னவெல்லாம் விசாரித்தான்.

தினகரனுக்கு வேறு தொழில் மேல் என்று யோசனை சொன்னதும், கடையை விற்று விடுவது நல்லது என்று கூறியதும்... அவள் சந்தேகப்படவே இல்லையே.

இன்னொரு கடை இருக்கக் கூடாது என்று திட்டமிட்டு அதை நடத்தி முடித்தே விட்டானே. பகடைக் காயாக, அவளையே பயன்படுத்தி.

மரணகாயம் பட்ட வலியை மறைத்தபடி, சாதாரணமாகக் காட்டிக் கொள்ள வேண்டிய கட்டாயம் அவளுக்கு. இத்தனை பேர் நடுவில் அழுது தவித்து அது வேறு கேவலமாகி விடக் கூடாதே.

ரஞ்சன் வேறு அடுத்து இந்தப் பக்கம் திரும்புவான் போலத் தோன்றியது.

தப்பு செய்த அவன், இப்போதும் சமாளித்து விடுவான். அதற்குத் தேவையான திண்ணக்கம் அவனுக்கு இருந்தது.

ஆனால் அவளால் முடியாது.

இப்போதே தொண்டையை அடைத்துக் கண்ணைக் கரித்துக் கொண்டு வருகிறது. இன்னும் நேரே பார்க்கும்படி ஆனால் அவ்வளவுதான்.

சட்டெனத் திரும்பி வேகமாக நடந்து, கடையை விட்டு வெளியேறினாள்.

இயல்பாகக் காட்டிக் கொள்ள, அவள் செய்த முயற்சி அவ்வளவாகப் பலன் தரவில்லை போலும்.

யாரோ அவளை, அதிசயமாகப் பார்ப்பது போல ஓர் உணர்வு. திரும்பிப் பாராமல் வேகமாகச் சென்று அந்தக் கடையை விட்டு வெளியேறிய பிறகே அவளால் நல்லபடியாக மூச்சு விட முடிந்தது.

தன் போக்கில் கால்கள் நேராக, அவளைத் 'தினா'வுக்குக் கொண்டு போய்ச் சேர்த்தன போலும்.

''என்னம்மா, எங்கே போனாய்?'' என்று தாமோதரன் மகளிடம் கேட்டார்.

ஒரு கணம் திகைத்து, ''தலைவலியப்பா. அதனால் கொஞ்சம் நடந்து பார்த்தேன்'' என்று சமாளிக்க முயன்றாள் அவள்.

''இந்த வெயிலிலா?'' என்று அவர் அதிசயப்படவும், ''வெளிக்காற்று பட்டால் நன்றாக இருக்குமே என்று நினைத்தேன். ஆனால்... ஆனால் அப்படி இல்லையப்பா. நான் வீட்டுக்கே போய் விடுகிறேன்'' என்று சௌமியா கடையை விட்டு வெளியே சென்றாள்.

வீட்டுக்குப் போக இவளுக்குப் பிடிக்கவில்லைதான். வீட்டுக்குப் போய் அறைக்குள் முடங்கினால், அறையின் தனிமையில் அழுகை வரும். ஆனால் அழக் கூடாது என்று சௌமியா நினைத்தாள். ஓர் ஏமாற்றுக்காரனுக்காக அழுதால், அது அவனுக்குக் கிடைக்கும் மிகப் பெரிய வெற்றி அல்லவா?



அப்பாவிடம் சொல்லிக் கடையை அவனுக்குக் கொடுக்க விடாமல் செய்தால் அவனது ஏமாற்று வேலைக்குத் தகுந்த அடியாகும்.

ஆனால் இனி அது நடக்குமா?

ஆனாலும் பிரியரஞ்சன் அவளை எப்படி ஏமாற்றி விட்டான்.

அவளிடமே விற்கும் பொருள் கேட்டு வாங்கி வைத்து, அவளிடமே விற்கும் சீசன் கேட்டுக் கடை தொடங்கி, இப்போது அவளிடமே பரிசுப் பைக்கும் ஏற்பாடு செய்கிறானா?

செல்லும் வழியெல்லாம் அவளுக்குக் கொதிப்புதான்.

வீட்டில் அவளைக் கண்டதும், தினகரனும், ஆனந்தியும் துள்ளிக் குதிக்காத குறை.

எப்போது வரப் போகிறாளோ, என்று ஏங்கிக் கொண்டு இருந்தவர்கள் ஆயிற்றே!

''கிளம்பு கிளம்பு போகலாம்'' என்று அவர்கள் இருவரும் அவசரப்படுத்த ''எங்கே?'' என்று திகைத்தாள் அவள்.

''கல்யாணத்துக்கு!'' என்று விட்டு நாக்கைக் கடித்த தினகரனை, ''உளறாதீர்கள்'' என்று முறைத்து விட்டு, ''பூஜை போடுவதற்கு வருகிறேன் என்றாயே, அதைக் கூடவா மறப்பாய்? வா. கிளம்பு'' என்று அவசரப்படுத்தினாள் ஆனந்தி.

முன்தினம் அவர்களிடம் 'வருகிறேன்' என்றது சௌமியாவுக்கு ஒருவாறு நினைவு வந்தது.

அப்போதிருந்த மனநிலை என்ன? ஒரு நாளைக்குள் எல்லாம் தலைகீழாகி விட்டதே.

''எனக்குத் தலைவலி அண்ணா! நான் வரவில்லை'' என்றாள் வெறுப்புடன்.

கணவன் மனைவி இருவரும், அப்படியே அதிர்ந்து போயினர்.

தினகரன் அழவே தொடங்கிவிட, ஆனந்தி ஆத்திரத்துடன் முறைத்தாள். ''எங்களை நாசமாக்கியே தீருவது என்று கங்கணம் கட்டிக் கொண்டு இருக்கிறாயா?'' என்று சீறினாள்.

''என்ன அண்ணி, இது? யாரோ பூஜை போடுவதில் கலந்து கொள்ளப் போகிறீர்கள். இதற்கு நான் வராமல் இருப்பதில் யாருக்கு என்ன பாதிப்பு நேர்ந்துவிடப் போகிறது?'' என்று அலுப்புடன் கேட்டாள் சௌமியா.

கணவனை முந்திக் கொண்டு ''பாதிப்புதான்'' என்றாள் அண்ணிக்காரி. ''உன் அண்ணனுக்குப் படம் எடுப்பதற்குப் பணம், ஆள் உதவி எல்லாம் செய்வதாகச் சொல்லியிருக்கிறார், அந்தப் பூஜை போடுகிறவர். ஆனால் சொல் மாறினால், கோபம் வந்துவிடும். மூன்று பேர் வருகிறோம் என்றுவிட்டு இரண்டு பேர் போனால், அப்படியே வெளியே நிறுத்தி விடுவார். எல்லாம் கெட்டு விடுமே என்றுதான் இவர் இப்படி அழுகிறார்'' என்றாள் அவள்.



''நீங்கள் அறியாத தொழிலில் இறங்குவது அப்பாவுக்குப் பிடிக்கவே இல்லை. இதை விட்டு விடுங்களேன் அண்ணா!'' என்றாள் தங்கை.

''மாமா அப்படிச் சொல்லவில்லையே. பயிற்சி வேண்டும் என்றார். இங்கே அதுவும் கிடைப்பதால் தானே, இந்த முயற்சி செய்யத் தொடங்கியதே. தயவு பண்ணி, எங்களோடு வா, சௌமியா. இதில் உனக்கு என்ன நஷ்டம். சொல்லு? உன்னோடு பிறந்தவருக்கு இந்த ஒரு சின்ன உதவி, நீ செய்யக் கூடாதா?'' என்று ஆனந்தி கேட்ட விதத்தில் சௌமியாவின் மனம் இளகியது.

இவர்களோடு சென்று வருவதில் என்ன பெரிய பிரச்சினை இருக்கப் போகிறது? சொல்லப் போனால் சௌமியாவுக்கு லாபம்தான். இவ்வளவு நேரம், இவர்களோடு பேசிக் கொண்டு இருந்ததில் அவளது தொண்டை அடைப்பும், கண் கரிப்பும் வெகுவாகக் குறைந்திருக்கிறது. அடுத்தவர் பிரச்சினையை ஆராய்ந்ததில் அவளது பிரச்சினை தானாகப் பின்னே போயிருக்கிறது.

இப்படியே நெஞ்சுக்கு இன்னும் கொஞ்சம் இடம் கிடைத்தால் நல்லதுதானே?

இடம் கிடைக்கிறதோ, இல்லையோ, குறைந்த பட்சமாக அவளது பிரச்சினையிலிருந்து இன்னும் கொஞ்சம் நேரம் தப்பிக்க முடியும் அல்லவா? பிரியரஞ்சனின் துரோகத்தை இன்னும் கொஞ்ச நேரம் மறந்திருக்கலாமே.

இப்படி எண்ணித்தான், அண்ணன் குடும்பத்தோடு செளமியா வெளியே கிளம்பிச் சென்றது.

ஆனால் அப்படிச் சென்றதினால், அவளது பிரச்சினை ஒன்றுமே இல்லை என்கிற மாதிரியான பெரும் இடும்பையில் போய்ச் சரியாக மாட்டிக் கொண்டாள்.

## 17

டாக்சி கிளம்பி, சற்று நேரத்திற்குள்ளாகவே, செளமியாவின் வேதனை, இரு மடங்காகத் திரும்பி விட்டது. பிரியரஞ்சனின் 'இன்னொருவன்' பேச்சும், ஒரே ஒருவனாக எண்ணியதும், திரும்பத் திரும்ப நினைவு வந்து அவளது நெஞ்சைக் கீறிக் கிளறி, ரணமாக்கின.

எளிமையாக ஏமாற்றி விட்டான்.

எவ்வளவு காலம் இப்படி ஏமாற்றுவதாக இருந்தான்?

'தினா ஸ்டோர்'சை மூடி, வாடகை ஒப்பந்தம் கையெழுத்தாகிற வரையிலுமா?

அதன்பின், அவளிடம் எப்படிச் சொல்லியிருப்பான்?

இன்னொரு பெண்ணை மணப்பதாகத் திருமண அழைப்பைத் தந்தா?



முகமறியாத அந்த இன்னொரு பெண்ணுடன் ரஞ்சன் பழகுவது போலப் பல்வேறு தோற்றங்களைக் கற்பனை செய்து தன்னையே வருத்திக் கொண்டாள் அவள்.

சற்று நேரம் நொந்தபின், அவளாகவே இது தப்பு, இப்படி நம்மை நாமே வதைத்துக் கொள்வது முட்டாள்தனம் என்று பிடிவாதமாக வேறு திசையில் மனதைத் திருப்ப முயன்றாள்.

வெளியே பார்த்தால் படம் எடுக்கக் கூடிய திரைப்படத் தளங்கள் இருக்கும் பகுதியைத் தாண்டிக் கார் சென்று கொண்டிருந்தது.

தினகரனை அழைத்து, ''அண்ணா, டிரைவரிடம் சரியாக விலாசம் சொன்னீர்களா? கார், எங்கோ போகிறதே'' என்று வினவினாள்.

''அது...'' என்று தினகரன் பேந்த விழிக்க, ஆனந்தி முகம் கடுத்தாள். ''ஏன், இந்த அளவுகூட, தினாவுக்குத் தெரியாது என்பதா, உன் நினைப்பு? எல்லாம் சரியாகத்தான் வண்டி போகிறது. நீ வாயை மூடிக் கொண்டு இரு'' என்று எரிந்து விழுந்தாள். ''எல்லாம் தனக்குத்தான் தெரியும் என்ற எண்ணம் எல்லாம், மாமா கொடுக்கிற இடம்'' என்ற முணுமுணுப்புடன் முடித்தாள்.

'சுருக்'கெனத் தைத்துவிட, ''படம் எடுக்கிற தளங்கள் இருக்கிற இடங்களைக் கடந்து போய்க் கொண்டு இருக்கிறோமே, என்று கேட்டேன். இதில்

என்ன அண்ணா, தப்பு?'' என்று அண்ணனிடம் கேட்டாள் சௌமியா.

வாவா என்று காலில் விழாத குறையாகக் கெஞ்சிவிட்டு, சரியென்று வந்த உடனேயே, இவள் பேசுவதைப் பாரேன், என்று ஆனந்தியிடம் ஆத்திரம் அவளுக்கு.

அவளைச் சமாதானம் செய்ய விரும்பியவனாய், ''தப்பு ஒன்றும் இல்லையம்மா. ஆனால் நாம்... நாம்...'' என்று தொடங்கிவிட்டு முடிக்க வராமல் தடுமாறினான், அவன்.

தினகரனின் குரலும் சற்று வெல வெலத்தாற்போலத் தோன்றவும், ''அண்ணா, உங்களுக்கு உடம்புக்கு ஒன்றும் இல்லையே. ஒரு மாதிரி இருக்கிறீர்களே. எதற்கும் திரும்பி வீட்டுக்குப் போய் விடுவோமா?'' என்று அக்கறையுடன் தங்கை கேட்கவும், அவன் ஆடிப் போய் விட்டான்.

''கண்ணம்மா...'' என்று குரல் தழுதழுக்க அவன் பேசத் தொடங்குகையில், ஆனந்தி இடைமறித்து ''என்னது திரும்பிப் போவதா? இவர் உருப்படவே கூடாது என்று நினைத்து விட்டாயா?'' என்று ஆத்திரத்துடன் கிரீச்சிட்டாள்.

''என்ன அண்ணி, பேச்சு இது? அண்ணனுக்கு உடம்பு சரியில்லாதபோது...''

நாத்தனாரையும் இடைமறித்து, ''அவருக்கு உடம்புக்கு ஒன்றும் இல்லை. வெறும் தொடை



நடுங்கித்தனம். அங்கே போய் வேப்பிலை அடித்தால் எல்லாம் சரியாகிப் போகும்'' என்று பல்லைக் கடித்துக் கொண்டு பேசினாள், ஆனந்தி.

என்ன நினைத்தாளோ, உடனேயே குரலைத் தணித்து, ''என்ன நீங்கள்? நாம் யாரைக் கெடுக்கிறோம்? எல்லோருக்கும் நல்லதற்குத்தானே, இந்தப் பாடு படுகிறோம்? எல்லாம் நல்லபடியாக முடியட்டும், உங்கள் அப்பாவே உங்களை 'ஓகோ' என்று பாராட்டுவார். பாருங்கள்'' என்று அவள் கூறவும், தினகரன் நிமிர்ந்து அமர்ந்தான்.

என்ன விஷயம் என்று சௌமியா அவர்களைக் கூர்ந்து நோக்கும்போதே டாக்ஸி நின்றது.

இறங்கும்போதே தினகரன் தடுமாறினான்.

பணத்தைக் கொடுத்து மீதி வாங்கினால் கை பதறி, அதில் ஒரு நோட்டைப் பறக்க விட்டான்.

ஐம்பது ரூபாய் நோட்டு பறந்து விடுமுன், அவசரமாக அதைப் பிடித்து சௌமியா அவனிடம் கொடுத்தால் அவளை நிமிர்ந்து பாராமலே வாங்கிப் பையினுள் திணித்தான்.

அதற்குள், 'கேட்' அருகே சென்று வாயிலில் காவலுக்கு நின்றவனிடம் பேசிவிட்டு, முக மலர்ச்சியுடன் திரும்பி வந்தாள் ஆனந்தி.

''என்ன இங்கேயே நின்று விட்டீர்கள்? அங்கிள் வந்து தயாராகியே நேரமாகி விட்டதாம்... இப்போது என்ன?'' என்று தினகரனின் முகம் மாறவும், சிடுசிடுப்புடன் கேட்டாள்.

''நீ... நீ அங்கிள் என்றாயே. பரசு சாரையா?''

''ஆமாம். அதற்கென்ன? சிறு வயதில் இருந்து அவரை அப்படிக் கூப்பிட்டுத்தான் எனக்குப் பழக்கம். இதைக் கேட்கவா, இப்படி ஆந்தை விழி விழித்தீர்கள்? வாருங்கள் சீக்கிரம் உள்ளே போவோம். நேரமா... அய்யோ இன்னும் என்ன?'' என்று எரிச்சலோடு கேட்டாள் அவள்.

'' உனக்கு 'அங்கிள்' என்றால், சௌமிக்கு எப்படி? எவ்வளவு வயது வித்தியாசம்? பதிமூன்று வயது வித்தியாசத்துக்கெல்லாம் அங்கிள் என்று அழைக்க மாட்டார்களே... வயது கொஞ்சம்தான் அதிகம் என்று பொ... பொய் சொன்னாயா?'' என்று தினகரன் கேட்கவும், இப்போது ஆனந்தி விழித்தாள்.

சௌமியாவும்...

இங்கே என்ன நடக்கிறது?

அதையே கேட்டுக் கொண்டு உள்ளிருந்து நடு வயது மனிதன் ஒருவன் வந்தான்.

செண்ட் வாசனை மூக்கைத் துளைத்தது.

பட்டு வேஷ்டி, பூ வேலை செய்த பட்டு ஜிப்பா, புலி நக டாலருடன் கூடிய கனமான சங்கிலி, ஒரு கையில் ஓர் அங்குல அகலத் தங்கச் சங்கிலியுடன் கூடிய பெரிய கைக் கடிகாரம். அடுத்த கையில் தங்கத்தை உருட்டித் திரட்டிச் செய்தாற்போல் ஒரு பிரேஸ்லெட். பெருவிரல் தவிர, எல்லா விரல்களிலும் பெரிய பெரிய கற்கள் பதித்த மோதிரங்கள்.



''உள்ளே வராமல், இங்கே என்ன பண்ணுகிறீர்கள்?'' என்றவன், சௌமியாவைப் பார்த்ததும், ''என்ன கண்ணு இப்படி வந்திருக்கிறாய்? பெண் அலங்காரம் பண்ணாமல் ஒரு பட்டுச் சேலை கூடக் கட்டாமல் இப்படிச் சுரிதாரைப் போட்டுக் கொண்டு... என்னா ஆனந்தி, ஒரு பட்டுச் சேலைக்கு உன் வீட்டிலே வக்கில்லையா? நான் தந்த பணத்திலே யாவது, வாங்கியிருக்கலாமில்ல? நல்லவேளை. நானும் வாங்கி வைத்தேன். போ கண்ணு போய் அதைக் கட்டிக்கிட்டு வா. முதலிலே எல்லோரும் உள்ளே வாங்க. டேய், பொண்ணு வீட்டு ஆளுகள் வந்தாயிற்று. வேலையைப் பாருங்கள். அய்யரைக் கூப்பிடு'' என்று அதட்டியபடி உள்ளே சென்றான்.

நம்ப முடியாத கதையாக ஓரளவு விஷயம் விளங்க, ''என்ன அண்ணா, இது?'' என்று வியப்பும் கோபமுமாகத் தினகரனைப் பார்த்தாள், சௌமியா.

பேச மறந்தவனைப் போலத் திகைத்து விழித்தான் அவன்.

''எல்லாம் உனக்கும், உன் அண்ணனுக்கும் நல்லதற்காகத்தான் உள்ளே வா'' என்று நாத்தனாரின் கையைப் பற்றி இழுத்தாள் ஆனந்தி.

எளிதாக உதறிக் கையை விடுவித்துக் கொண்டு, ''நல்லதை இப்படி பொய்யும், புளுகும் ஒளிவு மறைவுமாகச் செய்ய மாட்டார்கள். சொல்லுங்கள் அண்ணா! இது என்ன பைத்தியக்காரத்தனம் செய்து

கொண்டிருக்கிறீர்கள்? அப்பாவுக்குத் தெரிந்தால் என்ன சொல்லுவார்?'' என்று ஆத்திரத்துடன் அண்ணனைக் கேட்டாள் சௌமியா.

''ஐயோ, நான் இப்படி நினைக்கவில்லை, சௌமி. பதினைந்து வயது என்பது கொஞ்சம் கூடுதல்தான் என்றாலும், பார்க்க அப்படித் தெரியாது. பொருத்தமாக இருப்பார்கள். கோடிக் கணக்கில் பணம் வேறு. அந்த மாதிரிப் பணக்காரர்களுக்குச் சும்மாவே, பத்து வயது அதிகம். உடம்பை, அப்படிப் பேணு வார்கள். அது இது என்றாளம்மா. எனக்குப் படம் எடுக்கவும், முழு உதவி செய்வார் என்றதும்... நானும்... ஐயோ! என்ன தப்பு பண்ணிவிட்டேன். இப்போது இந்த ஆள் காலில் விழுந்து கேட்டால் கூட, விட மாட்டாரோ என்று பயமாக இருக்கிறதேம்மா'' என்று தினகரன் நடுங்கினான்.

''அதெப்படி விடுவார்? உங்களை நம்பி, இத்தனை ஏற்பாடுகளைச் செய்திருக்கிறாரே. இப்போது பின் வாங்கினால் விட்டு விடுவாரா? இரண்டு லட்சம் பணம் வேறு வாங்கியிருக்கிறீர்கள்...'' என்றாள் ஆனந்தி.

''பணம் உன்னிடம்தானேடி இருக்கிறது. பணத்தை வாங்கி வந்ததும் நீதான். அப்படியே திருப்பிக் கொடுத்து விடு.''

''அதெப்படி முடியும்? பாதிக்கு மேல் நகை, சேலை, சுரிதார் செட் என்று வாங்கிவிட்டேனே. அதை



எப்படிக் கொடுக்க முடியும்? அத்தோடு பட்டுச்சேலை, நகை என்று அங்கிள் வேறு நிறையச் செலவு செய்து வைத்திருக்கிறார். அவைகளுக்கு ஈடு கேட்டால், நம்மால் கொடுக்க முடியுமா? அவள் தலையில் எழுதியது இது என்று, திருமணத்தை நடத்தி விடுவதுதான் நல்லது.''

''ஊகூம். அப்பா முகத்திலே விழிக்க முடியாது ஆனந்தி. வேண்டாம்.''

''அங்கிள் தருகிற பணத்தை வைத்துப் பெரிய ஆளாகிவிட்டால் அப்புறம், அவர் முகம் என்ன, யார் முகத்திலும், நீங்கள் தைரியமாக விழிக்கலாம். கூடப் பிறந்த அண்ணன் வளர்ச்சிக்காக, உங்கள் தங்கை இது கூடச் செய்ய மாட்டாளா என்ன? அத்தோடு, அங்கிளுக்குக் கோபம் வந்தால் அவ்வளவுதான். என்ன செய்வார் என்றே சொல்ல முடியாது. அதனால், அசட்டுத்தனமாக உளறிக் கொண்டு இராமல், நல்ல வார்த்தை சொல்லி, உங்கள் தங்கையை உள்ளே அழைத்து வந்து, அங்கிளுக்கு அவளைக் கல்யாணம் செய்து வையுங்கள். அதுதான் எல்லோருக்கும் நல்லது'' என்றாள் ஆனந்தி சுயநலமே உருவாக.

''பொல்லாத நல்லது'' என்று ஆத்திரத்துடன் அண்ணிக்காரியை முறைத்தாள் சௌமியா. ''சும்மா பயப்படாதீர்கள் அண்ணா, நம்மை யாரும் எதுவும் செய்ய முடியாது. பேசாமல் என்னோடு வாருங்கள். நாம்

வீட்டுக்குத் திரும்பிப் போவோம்'' என்று சகோதரனுக்குத் திடமூட்டினாள்.

''அப்படிப் போடுன்னாளாம். என்னடா, ஆளுக உள்ளே வராமல், வாசலிலேயே இன்னும் என்ன செய்யறாகன்னு பார்க்க வந்தால், விஷயம் இப்படியா? போவீங்க. இங்கே இருப்பவன் கோழையாக இருந்தால், குடும்பத்தோடு எல்லோருமே தாண்டிப் போவீர்கள். ஆனால், நான் அப்படி விட்டுவிடுவேனா என்ன? ஏய், அவளைப் பிடித்து உள்ளே கொண்டு வந்து போடுங்கடா'' என்று அவன் அருகே நின்ற இரு குண்டர்களை ஏவினான், அந்தப் பரசு.

''சொன்னேனே'' என்று ஆனந்தி கூற, ''நில்லுங்கள்'' என்று அடியாட்களை அதட்டினாள்.

''பாருங்கள் மிஸ்டர் பரசு, சும்மா மிரட்டாதீர்கள். இதற்குப் பயந்து நான் உங்களை மணப்பேன் என்று நினைக்காதீர்கள். அது ஒரு போதும் நடக்காது'' என்றாள் உறுதியான குரலில்.

''ம்ம்ம்... நடக்காதா? ஏதோ, சொந்தக்காரப் பொண்ணாக இருக்குதே, தாலி கட்டிட்டுச் சேர்ந்து வாழலாமின்னு நினைத்தேன். கட்டிக்க மாட்டேன் னால், என்ன செய்யறது? சும்மாவே வச்சி வாழ வேண்டியதுதான். டேய். என்னடா, பார்த்துக்கிட்டு நிற்கிறீங்க? பிடித்து உள்ளே கொண்டு வந்து போடுங்டா. என்னோட உள் அறையில'' என்று பரசு உத்தரவிட, சௌமியாவே உள்ளூர நடுங்கி விட்டாள்.



''அண்ணா'' என்று அவள் அச்சத்துடன் நோக்க, தங்கையைக் காக்கும் கடமை, தினகரனைச் செயல் வீரனாக்கியது.

''சௌமீ, ஓடும்மா. நான் இவன்களைப் பார்த்துக் கொள்ளுகிறேன். நீ, திரும்பிப் பார்க்காமல் ஓடு'' என்றவாறு, பரசுவுடைய அடியாட்கள் மீது பாய்ந்தான் அவன்.

மின்னலெனப் பாய்ந்துவிட்டாள் சௌமியா.

மெல்லிய தேகவாகு. காலைத் தட்டிவிடாத சுடிதார், பள்ளிப் பந்தயங்களில் பரிசு வாங்கிய வேகம். சௌமியாவைப் பிடிக்க, யாராலும் முடியவில்லை.

புதிதாக வளர்ந்து கொண்டிருந்த குடியிருப்புப் பகுதி அது, ஆனால், வந்தவை பெரிய வீடுகள்.

அங்கொருவர், இங்கொருவர் தவிர, ஆள் நடமாட்டம் இல்லாத பிரதேசம்.

அடியாட்கள் யாரும் பின் தொடரவில்லை என்று நிச்சயமாகத் தெரிந்து கொண்டபிறகு, சற்று நிதானமான நடையுடன், அங்கங்கே நின்று, அண்ணனும் அண்ணியும் வருகிறார்களா என்று கவனித்தால், அவர்களையும் ஆளையே காணவில்லை.

ஆனந்தி சொந்தக்காரி. அத்தோடு அவனுக்கு ஆதரவு. அதனால், அந்தப் பரசு, அவளை ஒன்றும் செய்ய மாட்டான்.

ஆனால், தினகரன்? சௌமியாவைத் தப்புவித்தான் என்று அவனை என்ன பாடு படுத்துகிறானோ, பாவி.

திவாகரனைத் தூணில் கட்டி, பலர் சேர்ந்து அடித்துத் துன்புறுத்துவது போலவும், ரத்தம் வடிய அவன் நிற்பது போலவும் தோற்றங்கள் தோன்றி சௌமியாவை நடுங்க வைத்தன.

அவனை எப்படிக் காப்பாற்றுவது.

நடந்து நடந்து ஓரளவு ஜன நடமாட்டம் உள்ள பகுதிக்கு வந்து சேர்ந்திருந்த சௌமியாவின் கண்களில் அந்த டெலிஃபோன் பூத் பட்டது.

## 18

பி ஆர் எலக்ட்ரானிக்கிலிருந்து சௌமியா வெளியேறியபோது அவளைக் கண்டு வியந்து வாயைப் பிளந்தது தாமோதரனின் கடையை விலை பேச வந்த ராமசாமியே!

பிரியரஞ்சனுடைய தாத்தாவிடம் சிறு வயதிலேயே வேலைக்குச் சேர்ந்தவர் அவர். அந்தக் குடும்பத்தோடு வெகு காலமாக ஒன்றிப் பழகியவர். பொதுவாகக் குடும்பத்தில் அவர் அறியாத ரகசியம் இல்லை.

எனவேதான் சௌமியாவை அவர் கூடுதல் கவனத்துடன் பார்த்தது.

பார்த்த அளவில் அவருக்கு மிகவும் மகிழ்ச்சியே.



உள்ள நிலவரம் அறிந்திருந்தால், சௌமியாவை இந்தக் கடையில் பார்க்க, அவருக்கு ஆச்சரியமாக இருந்தது.

இந்தக் காலத்துப் பிள்ளைகள் என்று தம்முள் நகைத்தவர் கொள்முதல் பகுதியில் தாமோதரன் தந்த கணக்கை கொடுத்துவிட்டு பிரியரஞ்சனைத் தேடிச் சென்றார்.

''என்ன தம்பி கடைக்கே வரவழைத்துப் பேசத் தொடங்கி விட்டீர்கள்? அப்பா, தாத்தாவுக்கெல்லாம் தெரியுமா?'' என்று கேலியாகக் கேட்டார்.

''கடைக்கா? என்ன அங்கிள், நீங்கள் கூடப் புரளி பேசுகிறீர்களே!'' என்று சிரித்தான் அவன்.

''ஆகா இப்போது புரளி பேசுவது நீங்கள்தான். தம்பி, ஏன் வெளியே தெரியக்கூடாது என்று நினைக்கிறீர்களா?'' என்று அந்தப் பெரியவர் கேட்கவும் பிரியரஞ்சன் திகைத்தான்.

''நான் என் கண்ணால் பார்த்தேன். தம்பி, என்னைப் பார்த்து விட்டதாலோ, என்னவோ பாப்பா அவசரமாக வெளியே போயிற்று'' என்று அவர் விளக்கவும், ஏதோ தப்பு நடந்து விட்டது என்று பிரியரஞ்சனுக்குத் தெரிந்து போயிற்று.

சௌமியா, அவனைத் தவறாக நினைத்து விட்டாள்.

மற்றபடி, இவ்வளவு தூரம் வந்தவள், அவனிடம் பேசாமல் போக வேண்டியதில்லை. அவள் முட்டாளில்லை. இப்போதும், அவளிடம் விஷயத்தை அவனால் விளக்கி விட முடியும். ஆனால் என்னவோ அவனுக்கு மனம் கலங்கியது. உடனேயே அவளைப் பார்த்தாக வேண்டும் என்று ஒரு பதற்றம் உண்டாயிற்று.

தன் பிள்ளைகளை அழைத்துச் செல்வதற்காக வந்த சிறிய தந்தையிடம், கடையைக் கொஞ்சம் பார்த்துக் கொள்ளும்படி சொல்லிவிட்டு, பிரியரஞ்சன் தாமோதரனிடம் விரைந்தான்.

அவரது வரவேற்பு முறுவலை, கொஞ்சமும் சட்டை பண்ணாமல், ''சௌமியா எங்கே?'' என்று கேட்டான் அவன்.

'தலைவலி' என்று மகள் ஓடிய விதம் நினைவு வர, ''அவளைப் பற்றி நீங்க என்ன கேட்பது?'' என்று வினவினார் தாமோதரன்.

''பாருங்கள் மாமனாருக்கு உரிய மரியாதையெல்லாம், பார்த்துக் கொடுத்துக் கொண்டிருக்கிற நிலையில், நான் இப்போது இல்லை. இப்போதைக்கு, சௌமியாவுக்கு ஏதோ ஆபத்தோ என்று மனம் பதைக்கிறது. அவளுக்கு ஏதோ ஆபத்து, சார். அதிலிருந்து அவளைக் காப்பாற்ற வேண்டும். அப்புறம், என் அப்பா வந்து, உங்களிடம் பேசுவார். சொல்லுங்கள் சௌமி எங்கே?''



''வீட்டுக்குப் போனாள்'' என்றார் அவர் சுருக்கமாக. ''வீடு எங்கே என்றால்...''

''தெரியும்...'' என்ற சொல்லோடு காணாமல் போயிருந்தான் அவன்.

'வியப்பும், மகிழ்ச்சியும் கூடவே யோசனையுமாக அவன் சென்ற திசையைப் பார்த்துக் கொண்டு நின்றார், அந்தத் தந்தை. இப்படியா விஷயம்? அவருடைய சின்ன மகள் சௌமி குட்டிக்குக் கூடக் காதலா? அதுதான், அன்று இவன் அவ்வளவு உதவி செய்தானா? 'பிரியரஞ்சன்' என்று அவள் அவனது பெயர் சொன்னபோது, அவர் யோசித்திருக்க வேண்டும்.

எண்ணங்கள் ஓடும்போதே அவருக்கு மகளின் இறுகிய முகம் நினைவு வந்தது.

இருவருக்கும் இடையே ஏதோ ஊடல் போலும். சமாதானம் செய்ய ஓடுகிறான்.

மற்றபடி, வீட்டிற்குப் போன மகளுக்கு அப்படியென்ன ஆபத்து நேரக் கூடும்?

வீட்டிற்கு வந்து கொண்டிருக்கிறவனுக்குக் காஃபி பலகாரம் வைத்துக் கொடுக்கும்படி, மனைவியை ஃபோனில் அழைத்துச் சொல்லிவிட்டு புன்னகையோடு மகளின் திருமணம் பற்றித் திட்டமிடத் தொடங்கினார், தாமோதரன்.

தாமோதரனின் வீட்டுக்கு பிரியரஞ்சன் போய்ச் சேர்ந்தபோது அண்ணன் குடும்பத்தோடு சௌமியா வெளியே சென்று விட்டிருந்தாள்.

''எங்கே?'' என்ற கேள்விக்குப் பதில் தெரியாமல், திலகம் மலங்க விழிக்க பிரியரஞ்சனின் கலக்கம் அதிகரித்தது.

அண்ணன், அண்ணியோடுதானே சென்றிருக்கிறாள் என்று அவனால் நிம்மதியாக இருக்க முடியவில்லை.

அவன் அறிந்தவரையில், சௌமியாவுடைய அண்ணன் குடும்பம் அவ்வளவு சரியானது இல்லையே! உல்லாசமாய்ப் பொழுது போக்கவோ, சந்தோஷமாக 'ஷாப்பிங்' பண்ணவோ, அவளை உடன் அழைத்துப் போகிறவர்கள் அல்ல அவர்கள் என்பது சௌமியாவின் மற்ற பேச்சிலிருந்து அவனாக ஊகித்தறிந்தது.

இன்று மட்டும் அவளை உடனழைத்துப் போகிற மாதிரி என்ன வந்தது?

கல்யாணத்துக்குப் போகிற மாதிரி, மகனும் மருமகளும் பட்டாடை அணிந்திருந்தார்கள். கண்படும் போல, அழகாக இருந்தது. ஆனால் சௌமிதான், முசுடு மாதிரி பட்டுக்கட்ட மாட்டேன் என்றுவிட்டாள்... என்றெல்லாம், திலகம் சொல்லச் சொல்ல, காரணம் அறியாமல் அவனது கலக்கம் அதிகரித்தது.

தெரிந்தவர்கள் வீட்டுத் திருமணத்திற்குக் கூட, மூவருமாகச் சென்றிருக்கலாம். ஆனால் அப்படி எண்ணி அமைதியாக இருக்க, அவனால் முடியவில்லை.



சௌமியாவை நல்லபடியாக நேரில் பாராமல் அவனுக்கு நிம்மதி இல்லை என்று ஆயிற்று.

அவளைப் பார்த்தே ஆக வேண்டும்.

எப்படி என்று புரியாமல் ஒவ்வொரு வழியையும் யோசித்தவனுக்கு சௌமியாவின் வீட்டுக் காரை, அவர்கள் கடையருகே பார்த்த நினைவு வந்தது.

அப்படியானால், இந்த மூவரும் சென்ற விதம்?

காராக இருந்தால் இந்த அப்பாவிப் பெண்மணி, அதன் எண்ணைக் கவனித்திருப்பது சந்தேகம் ஆயிற்றே என்று உள்ளூர நிராசையுற்றபடியே விசாரித்தவனுக்குப் புதையல் சிக்கியது.

தினகரன் குடும்பம் சென்றது ஒரு 'கால் டாக்சி'யில்!

நல்லவேளையாக 'கால் டாக்சி' நிறுவனத்தின் பெயர், திலகத்திற்குத் தெரிந்திருந்தது.

நிறுவனத்தைத் தொடர்பு கொண்டு, ''சுமார் ஒரு மணி நேரத்துக்கு முன்பாக இந்த முகவரிக்கு உங்கள் டாக்சி ஒன்று வந்திருந்தது. முக்கியமான சாமானை விட்டு விட்டுப் போய் விட்டார்கள். மொத்தப் பணம் வைத்திருந்த பர்ஸ். கடையில் போய் விழிப்பார்கள். நல்ல விஷயமாக வாங்கப் போவதால் பணம் இல்லை என்று திரும்பி வந்தால் அபசகுனமாகப்படும். அவர்களை இறக்கிவிட்ட இடத்தைக் காரோட்டியிடம்

கேட்டுச் சொன்னால், பணத்தைக் கொண்டு போய்க் கொடுத்து விடலாம் என்று பார்க்கிறேன். அவர்கள் உங்களிடம் முன் பதிவு செய்தபோது, டெலிஃபோன் நம்பர் கொடுத்திருப்பார்களே. அங்கிருந்துதான் பேசுகிறேன். சந்தேகமாக இருந்தால் இப்போது நான் ரிசீவரை வைத்து விடுகிறேன். நீங்கள் கூப்பிட்டுச் சரி பார்த்துக் கொள்ளுங்கள்'' என்று ரிசீவரைத் தாங்கியில் வைத்தான் பிரியரஞ்சன்.

உடனேயே டெலிஃபோன் மணி அடித்தது.

டாக்சி நிறுவனம்தான்.

விவரம் கேட்டவர்கள் உண்மையானவர்களே என்று சரி பார்த்ததும், மறைக்காது சொன்னார்கள்.

ரிசீவரை வைத்ததும், வெகுளியாய் ''பணம் பற்றி, என்னிடம் சொல்லியிருந்தாலாவது நினைவு படுத்தியிருப்பேன். இப்போது பாருங்கள். உங்களுக்கு வீண் தொல்லை!'' என்றாள் திலகம்.

''பரவாயில்லை. தினகரனுக்காக, இது கூடச் செய்ய மாட்டேனா?'' என்றபடியே வெளியே நடந்தான் பிரியரஞ்சன்.

மிகுந்த வேகத்துடன்தான், பிரியரஞ்சன் காரை ஓட்டினான். ஆயினும் நேரமாகிறதே. நேரமாகிறதே' என்று அவன் மனம் தவித்தது.

வாடகைக் காரோட்டி சொன்ன குடியிருப்புப் பகுதியை நெருங்கிக் கொண்டிருந்தவனுக்கு இன்னொரு பிரச்சினை.



இந்தப் பகுதியில் ஒரு பெரிய வீட்டில் என்றுதான் காரோட்டி சொல்லியிருந்தான். அங்கே ஒவ்வொரு வீடாகத் தேட வேண்டும்.

எத்தனை வீடுகள் இருக்கின்றனவோ என்று அவன் யோசிக்கும்போது அவனது செல் ஒலி யெழுப்பியது.

இந்த நேரத்தில் யார், என்று எரிச்சலோடு செல்லை அணைக்கப் போனவன்தான். எதற்கும் இருக்கட்டும் என்று பார்த்தால் சௌமியா.

அவன் வந்திருந்த இடத்துக்கு வெகு அருகில்தான், சௌமியா பேசிய 'பூத்' இருந்தது.

அழைத்து ஒரிரு நிமிஷங்களுக்குள்ளாகப் பிரியரஞ்சனைக் காண, அவளுக்கும் அதிசயம்தான்.

ஆனால் அதிசயத்தை விட 'வந்து விட்டான்' என்கிற ஆறுதல் அதிகமாக இருக்க, அப்படியே அவன் தோளில் சாய்ந்து அழுது விட்டாள்.

அணைத்தவாறே, அவளைக் காருக்கு அழைத்து வந்து, உட்கார வைத்து ஆறுதல் படுத்தினான், பிரியரஞ்சன்.

அவள் சற்று தேறியதும், அவன் காரைத் திருப்பப் போனபோது, அவனைத் தடுத்து அண்ணன் மாட்டிக் கொண்டிருக்கும் விவரத்தைச் சுருக்கமாகச் சொன்னாள் அவள்.

''உன்னைக் காப்பாற்றுவதற்காக, மாட்டிக் கொண்டாரா? அப்படியானால் நிச்சயமாகக்

காப்பாற்றித்தான் ஆக வேண்டும். வருங்காலத்தில் மரியாதைக்குரிய உறவல்லவா...!'' என்று இலகுவாகப் பேசி, வழி காட்டச் சொன்னான் அவன்.

வழி சொல்லிவிட்டு, ''ஆனால் தனியாகப் போவது, ஆபத்து அல்லவா, ரஞ்சன்? துணைக்கு யாரையாவது அழைத்துக் கொண்டு போவோமே. அங்கே, அவனுடைய அடியாட்கள், இன்னும் எத்தனை பேர் இருக்கிறார்களோ?'' என்றாள் சௌமியா. பயத்துடன் அவனை ஒட்டி அமர்ந்தபடி.

ஒரு கையால், அவளை ஆதரவாய் அணைத்து முன்னே கிடந்த செல்ஃபோனைக் காட்டி, ''நம் துணை, இதோ இருக்கிறது!'' என்றான் அவன்.

சௌமியாவைக் கண்டதும், ஆட்களோடு ஆரவாரத்துடன் வந்த பரசுவிடமும், பிரியரஞ்சன் ஓர் அதிகாரத்துடனேயே பேசினான். செல்ஃபோனைக் காட்டி, ''சரியாக பத்து நிமிஷம். நாங்கள் திரும்பிப் போய்ச் சேர வில்லையானால், ஒரு போலீஸ் படையே இங்கு வரும். அதற்கான ஏற்பாட்டைச் செய்து விட்டுத்தான், இங்கே வந்திருக்கிறேன். எப்படி வசதி?'' என்று அலட்சியமாகக் கேட்டான்.

பல படிக்காத ரௌடிகளைப் போல, பரசுவுக்கும், 'போலீசி'டம் பயம் இருந்தது. அத்தோடு, அவன் வீட்டில் செய்யப்பட்டிருந்த திருமண ஏற்பாடுகளையும், அடியாட்களையும் என்னவென்று



விளக்க முடியும்? சௌமியா வேறு எதிராகப் புகார் கொடுப்பாள்.

''ஆனால், என் பணம்?'' என்று தணிந்துவிட்ட குரலில் கேட்டான் அவன். ''இரண்டு லட்சம் கொடுத்திருக்கிறேனே...''

''சற்றும் பொருத்தம் இல்லாமல், ஒரு சின்னப் பெண் மேல் ஆசைப்பட்டதற்குத் தண்டனை என்று வைத்துக்கொள்...'' என்ற பிரியரஞ்சனை இடைமறித்து, ''தந்து விடுகிறேன்'' என்றாள் ஆனந்தி.

''அந்தப் பணத்தில், நகையும், துணியும் வாங்கினேன். துணியைத் திருப்ப முடியாது. ஆனால் அந்த நகைகளோடு என் மற்ற நகைகளையும் விற்று அந்த இரண்டு லட்சத்தையும், முழுசாகத் திருப்பிக் கொடுத்து விடுகிறேன்...'' என்று அவள் சின்னக் குரலில் பேசியதைக் கேட்ட சௌமியாவுக்குத் தன் காதுகளையே நம்ப முடியவில்லை.

அண்ணியாவது, நகைகளை விட்டுக் கொடுப்பதாவது? அண்ணனுக்காகவா? அதுவும் ஆச்சரியம்தான்.

வியப்புடன் பார்த்தால், ஆனந்தியின் முகம் வீங்கி, தலை கலைந்திருப்பதும், தெரிந்தது. கன்னங்களில் விரல்களின் அடையாளம்.

தினகரனும், ஆள் கலைந்துதான் இருந்தான். அடி, உதை வாங்கிய தோற்றம்.

சௌமியாவைக் கூட்டி வரச் சொல்லி இருவரையும் அடித்தார்களோ?

கணவன் மனைவி இருவரும் அந்த இடத்தை விட்டு அகன்றுவிட ஆர்வம் காட்டவும், பணத்தைத் திருப்பித் தரும் விதம் பற்றிச் சுருக்கமாகப் பேசி முடித்து விட்டு பிரியரஞ்சன், மற்ற மூவரையும் காரில் ஏற்றிக் கொண்டு கிளம்பினான்.

கார் செல்லச் செல்லத்தான், ஆனந்தியின் மன மாற்றம் எப்படி நிகழ்ந்தது என்று புரிந்தது.

இருவருமே, எதையும் மறைக்காமல் சொன்னார்கள்.

சௌமியா ஓடத் தொடங்கியபோது, அவள் அப்படி ஒன்றும் தப்பிப் போய் விடுவாள் என்று யாரும் நினைக்கவில்லை. அவளைத் துரத்தியவர்களைத் தினகரன் தடுக்க முயன்றபோதும், அப்படித்தான்.

ஆளுக்கு ஓர் அறைவிடவும் தினகரன் சுருண்டு விட்டான். அவனை விழத்தட்டிவிட்டு, சௌமியாவைத் தொடர்ந்த அடியாட்களுக்கும் அவளுக்கும் இருந்த தூரம் அதிகப்பட்டுக் கொண்டே போய், இரண்டு மூன்று திருப்பங்களின் பின், அவளைக் கண்ணிலேயே காணவில்லை.

மணப் பெண்ணைக் கோட்டை விட்டு விட்டார்கள் என்று தெரிந்ததும், பரசுவுக்கு ஆத்திரம்



பொங்கி விட்டது. இரண்டு லட்ச ரூபாயை, உடனே வை என்று கத்தத் தொடங்கி விட்டான்.

'கூட்டி வந்த பெண்ணைக் கோட்டை விட்டுவிட்டு ரூபாயாவது மண்ணாங்கட்டியாவது?'' என்று அவள் ஏளனம் பேசவும், பரசுவுக்கு வெறிபிடித்து விட்டது.

''இரண்டு லட்சத்துக்கு எனக்கு ஒரு பொண்ணு. அவள் போய் விட்டாள் என்றால், அவளுக்குப் பதிலாக நீ என் அறையில் என் கூட விளையாடு'' என்று கண் சிமிட்டினான்.

முதலில் திகைத்த போதும், பரசுவின் பேச்சு உண்மையே என்று உணர்ந்து, முன் உதாரணமாக நாத்தனாரைக் கொண்டு ஆனந்தியும் ஓடிவிட முயன்றாள்.

குனிந்து நிமிர்ந்து ஒரு வேலை கூடச் செய்ததில்லை. இழுத்து பின் குத்தி, தரை தொட, தழையத் தழையக் கட்டிய பட்டுச் சேலை வேறு. பத்தடி ஓடுமுன், ஆனந்தி மாட்டிக் கொண்டாள்.

ஆத்திரம் தீர, இருவரையும் பந்தாடி விட்டு, ''என்னடி ஆளாளுக்கு என்னை ஏமாற்றப் பார்க்கிறீர்கள்? பணம் கைக்கு வரும்வரை, இவள் என் பெண்டாட்டியாக இருப்பாள். பணத்தைக் கொடுத்து விட்டு, அழைத்துப் போ'' என்று அவன் தினகரனிடம்

சொல்லிக் கொண்டு இருந்தபோதுதான் சௌமியா மீண்டும் அங்கே வந்து சேர்ந்தாள்.

''அவன் மனிதனே இல்லை. ராட்சஸன். அவனுக்கு உறவுக்காரி. திருமணம் ஆனவள், என்னைப் போய்... அந்த அரக்கனுக்கு உன்னைப் பலியாக்க எண்ணிய பாவத்துக்குக் கடவுள் எனக்குக் கொடுத்த தண்டனை இது. தயவு பண்ணி, என்னை மன்னிப்பாயா?'' என்று ஆனந்தி விசும்ப, சௌமியாவின் மனம் பாகாக உருகி விட்டது.

''சரி... சரி... அதையெல்லாம் இனி அடியோடு மறந்து விடுங்கள் அண்ணி'' என்று ஆனந்தியைத் தேற்றி சமாதானம் செய்தாள், அவள்.

வீட்டில் தினகரன் தம்பதியை இறக்கிவிட்ட பிரியரஞ்சன், சௌமியா இறங்குவதைத் தடுத்தான். ''உன்னிடம் பேச வேண்டும், சௌமி''

சற்றே விறைப்புற்று, ''ஏமாற்றுக்காரர்களிடம் பேச, எனக்கு எதுவுமில்லை'' என்றாள் அவள்.

''எனக்கு இருக்கிறது'' என்றான் அவன். ''அது, இங்கே உன் வீட்டில் என்றாலும் யார் முன்னிலையில் என்றாலும் எனக்கு ஒன்றும் இல்லை. ஆனால் என் நிலையை விளக்கிச் சொல்ல நீ, எனக்கு ஒரு வாய்ப்புக் கொடுத்தே ஆக வேண்டும்'' என்றான். அவளுக்கு மட்டுமே கேட்கும்படியான தணிந்த குரலில்.

அவள் உதட்டைக் கடித்துக் கொண்டு பேசாதிருக்கவும், சௌமியாவைக் கடையில் கொண்டு



விடுவதாகத் தினகரனிடம் சொல்லிவிட்டுக் காரைக் கிளப்பிச் சென்றான் பிரியரஞ்சன்.

''உங்கள் வாயில் பொய் வெகு இலகுவாக வருகிறதில்லையா?'' என்றாள் இவள் கசப்புடன்.

''அதைப் பொய் என்பதைவிட நிலைமையைச் சமாளித்தது என்று சொல்லலாம். 'பொய்மையும் வாய்மை இடத்து, புரை தீர்ந்த நன்மை பயக்குமெனின்' என்று வள்ளுவரே சொல்லியிருக்கிறாரே. யோசி, மற்றபடி உன் அண்ணன், அண்ணியைச் சேதமின்றி அந்தப் பரசுவிடமிருந்து காத்திருக்க முடியுமா?''

மீண்டும் அவள் மௌனம் சாதித்தாள்.

காரை, ஓர் ஓரமாக ஒதுக்கி நிறுத்திவிட்டு, அவள் புறம் திரும்பினான்.

''சற்று யோசி, சௌமியா...'' என்று அவன் தொடங்கும் போதே ''எதை?'' அவள் இடை மறித்தாள். ''என்னை ஏமாளியாக்கி, எப்படி என் வாயிலிருந்தே, எங்கள் கடையின் மூடு விழாவுக்கு வழி வகுத்தீர்கள் என்பதைத்தானே? நன்றாக யோசித்து விட்டேன். என்னிடமே எல்லா விவரமும் கேட்டு, அதை முழுமையாகப் பயன்படுத்தி... சே! எவ்வளவு முட்டாளாக இருந்து விட்டேன்.'' தன்னையே நொந்து கொண்டாள் அவள்.

''நான் யோசிக்கச் சொன்னது, உன்னைப் பற்றியல்ல. உன் தந்தையைப் பற்றி! என்னைப் பற்றி! யோசிம்மா. உன் தந்தையால் இன்னும் எத்தனை ஆண்டு

காலம் இந்தச் சிரமம் தாங்க முடியும்? தினகரன் துணை கிடைக்காது என்கிற நிலை. இப்போதும் கூட. அப்படியிருக்க, எவ்வளவு காலம் அவர் தனியாகக் கஷ்டப்பட முடியும்?''

''ஏன்? அப்பாவுக்கு உதவி நான் செய்வேன்.''

''நீ எப்படியும் திருமணமாகிப் போகப் போகிறவள்''

''மாட்டேன். நான் ஒரு போதும், திருமணமே செய்து கொள்ளப் போவதில்லை. கடையைக் கொடுக்க வேண்டாம் என்று தடுத்துவிட்டு, காலமெல்லாம் கன்னியாக இருந்து அவருக்கு உதவி செய்யப் போகிறேன்...''

''இதை, உன் அப்பாவிடம் சொல்லிப்பார். உடனே கடையை இழுத்து மூடி விடுவார். உன் திருமணத்துக்காகச் சேர்த்துக் கொண்டு இருப்பவர், அவர்.''

''பிறகு, என் தந்தை எப்படி வாழ்வார்?''

''இப்போது கிடைக்கும் பணத்தில் இரண்டு 'ஜெராக்ஸ்' மிஷினை வாங்கிப் போட்டுக் கொண்டால் பொழுதும் போகும். பணமும் கிடைக்கும். நிம்மதியான வாழ்வு. நாம் இருவரும் கூட, அடிக்கடி அவரைப் போய்ப் பார்க்கலாம்.''

''என்னது? நாம் இருவருமா? நான் உங்களை மணக்கப் போவதாக, யார் சொன்னது?''

''நான்தான்.''



''சொல்லிக் கொண்டே இருங்கள். சீக்கிரமே பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் கொண்டு போய்ச் சேர்ப்பார்கள். ஒரு துரோகியை நான் மணப்பது நடக்காத காரியம்'' என்றாள் அவள் ஆத்திரத்தோடு.

''உன் அப்பாவுக்கு இருக்கும் நியாய புத்தி உனக்கு இல்லையே. உன் அம்மாவைக் கூப்பிட்டு, எனக்கு உபசாரம் செய்யச் சொல்லுகிறார், அவர்...''

''என்ன நியாயம்? என்னை ஏமாற்றி, விவரங்களைத் தெரிந்து கொண்டு அதே உகாதியில் கடை தொடங்கினீர்களே... சைத்தான் வேதம் ஓதுகிற மாதிரி நீங்களெல்லாம், நியாயம் பற்றிப் பேசுவதா?''

''சௌமி, ப்ளீஸ். என்னைக் கொஞ்சம் முழுசாப் பேச விடேன். ராமசாமி என்னடா என்றால், 'ரொம்பவும் மரியாதை தெரிந்த பெண், தகப்பனார், அவ்வளவு உரிமை கொடுத்தும், எங்கள் பேச்சில், ஒரு வார்த்தை குறுக்கே பேசவில்லை' என்று உன்னை அப்படிப் புகழ்கிறார். நான் சொல்வதை முடிக்கவே விடமாட்டேன் என்கிறாயே'' என்று குறைப்பட்டான் பிரியரஞ்சன்.

வெட்டுவது போல நோக்கிவிட்டு, 'சொல்லு' என்பதைப் போலக் கையைக் கட்டிக் கொண்டு உம்மென்று உட்கார்ந்திருந்தாள், சௌமியா.

லேசாக முறுவலித்துவிட்டு, அவன் தொடங்கினான். ''என்னைப் பற்றியும் யோசிக்கச் சொன்னேன் அல்லவா? என் நிலையிலிருந்து யோசி.

அறுபது லட்சம் கொடுத்து: அந்த இடத்தை வாங்கி விட்டோம். மேலே பத்து லட்சத்தில் கடை வேலை நடந்து கொண்டு இருக்கிறது. கடை வெற்றிகரமாக நடப்பதற்கான தகவலைச் சேகரிப்பாயா, மாட்டாயா? அப்படியும் இரண்டு தரம் உன்னைப் பார்த்ததும், என் அப்பாவிடம் சொல்லி விட்டேன். சௌமியை மணக்கச் சம்மதம் கொடுத்தால், மேலே வேலையைத் தொடருகிறேன், அல்லது, வேறு யாரையாவது போட்டுக் கொள்ளுங்கள் என்று சொன்னேன். தாத்தா, அப்பா சம்மதம் கிடைத்த பிறகும், உன் அண்ணன் தினகரன் கடைக்கு வரப் போவது இல்லை என்று நிச்சயமான பிறகுதான் வேலையைத் தொடர்ந்தேன்...''

அவள் சந்தேகமாக நோக்க, அவளது கையைப் பற்றி, ''சத்தியம், கண்மணி. முதல் பார்வையிலேயே எனக்குத் தாக்கம்தான். அதனால், உன் வீடு, உன் குடும்ப நிலைமை எல்லாம் முழுவதாக விசாரித்து அறிந்த பிறகுதான் அதிலும் தினகரனுக்கு வியாபாரம் சரிவராது என்று தெரிந்த பிறகுதான், நான் அடுத்த அடி எடுத்து வைத்தேன். மற்றபடி, புது வருஷப் பிறப்பன்று, தினகர் பெயர், எனக்கு எப்படித் தெரியும் சொல்லு?'' என்று கேட்டான் அவன்.

இது பற்றி யோசித்ததும், வெளியிலிருந்து கேட்டிருப்பான் என்று முடிவு செய்ததும், சௌமியாவுக்கு நினைவு வந்தன.



ஆனால், அவர்களுக்காக அவன் என்ன முடிவு எடுப்பது? கடந்த ஆறேழு மாதங்களாக தந்தை பட்ட மன வேதனை நினைவுவர, அவள் முகம் கடுத்தது.

அவள் முகத்தையே பார்த்துக் கொண்டு இருந்திருப்பான் போலும்.

''என்னடா? என்று கனிந்த குரலில் கேட்டான்.

அந்தக் குரலிலேயே, அவளுக்குத் தொண்டை அடைத்தது.

ஆனால் இவன் வாய்ச்சாலகம் உடையவன். கருமமே கண்ணாகக் காரியம் சாதிப்பவன். இவனை ஒரேயடியாக நம்பக் கூடாது.

''சொல்லும்மா. எதுவானாலும், மனதில் உறுத்துவதை, உடைத்துக் கேட்டு விடு. கதவுக்குப் பின்னால் இருப்பது பூதமா, பூவா என்று திறந்து பார்த்தால்தானே, தெரியும்?''

''இவ்வளவு நாள் அப்பா எவ்வளவு வேதனைப்பட்டிருப்பார்? அதை நினைக்கவில்லையே?'' என்று கோபமாகப் பேச நினைத்தும் முடியாமல், கம்மிய குரலில் கேட்டாள்.

தலையசைத்தான் பிரியரஞ்சன். ''கஷ்டப் படாமல், காரியம் நடக்காது சௌமி. 'மூழ்காமல் முத்தெடுக்க முடியாது. வலிக்காமல் பிள்ளை பெற முடியாது' என்பார்கள். யோசி. அவ்வப்போது விரக்தியில் பேசினாலும், மகன் தன்னோடு

வியாபாரத்தக்கு வந்து விட மாட்டானா, வந்து விட மாட்டானா, என்று ஏங்கி வரவில்லையே என்று சோர்ந்து, வாய் வார்த்தை தடித்து... குடும்பமே உடைந்திருக்குமே. உன் அண்ணன் எந்த அளவுக்குப் போகக் கூடியவன் என்பது, இப்போது உனக்குப் புரிந்திருக்கும். இதெல்லாமும்கூட, மாமாவுக்குத் துன்பம் தானே? முடிவே இல்லாத துன்பம். எத்தனை ஆண்டுகள் நீடித்திருக்குமோ? ஆனால் இதையெல்லாம் அப்போது நான் வந்து சொன்னால், ஒரு வார்த்தை ஒத்துக் கொள்ளாமல், விரட்டியடித்திருப்பீர்களா, இல்லையா? சொல்லு. தானாக உணரும் நிலை வரும்வரை காத்திருந்தேன். நீ வந்து சொன்னதுமே, என் வீட்டுப் பெரியவர்களிடம் பேசி, ராமசாமியை அனுப்பி விட்டேனே. இப்போது மாமா முகம் தெளிந்திருப்பதை நீயும் பார்க்கிறாய்தானே? இல்லை என்று உன்னால் மறுக்க முடியுமா, சொல்லு?''

எப்படி மறுக்க முடியும்? தந்தை முகத்தில் பத்து வயது குறைந்து தெரிவதைப் பார்த்துக் கொண்டே, எப்படி மறுக்க முடியும்? அந்தப் பத்தை ஏற்றியவனும், பெருமளவு அவனாகவே இருக்கலாம். ஆனால், அவனே இப்போது குறைத்து விட்டான் என்பதை ஒத்துக் கொண்டுதான் ஆக வேண்டும்.

இன்னும், இவன் சொல்வதைப் பார்த்தால்... மாமா என்று வேறு முறை கொண்டாடுகிறான்.



தன் கரம், இன்னும் பிரியரஞ்சனின் பிடியில் இருப்பதை ஒரு திகைப்புடன் உணர்ந்தாள் சௌமியா. இரு கைகளும் பிணைந்திருப்பது, எவ்வளவு பொருத்தமாக இருக்கிறது.

இருந்துதான் ஆக வேண்டும்.

பிரியரஞ்சன் மேல் அவ்வளவு கோபம் இருந்த போதும், அவளது அந்த இக்கட்டான நேரத்தில் அவள் போலீசையோ, பெற்றவரையோவா, கூப்பிட்டாள்? அவனைத்தானே?

ஏதோ தோன்றி, அவனிடம் கேட்டாள். ''நீங்கள் எப்படி அங்கே வந்தீர்கள்?''

வாய்ப்பை விடாமல் அவன் சொன்னான். ''உன்னைப் பற்றிய என் எண்ணம், எங்கள் பக்கத்தில் முக்கியமான எல்லோருக்கும் தெரியுமா, 'பிஆரி'ல் உன்னைப் பார்த்து விட்டு, ராமசாமி கேலி செய்தார்...'' என்று எல்லா விவரமும் சொன்னான்.

தொடர்ந்து, ''இப்போது நான் சொல்வதை நீ நிச்சயமாக முழுமையாக நம்ப வேண்டும். கண்ணம்மா... என்னைப் பொறுத்த வரையில், உன் பிரியனாகவோ, உனக்கு ரஞ்சனாகவோ இருப்பதுதான் என் தலையாய விருப்பம். மற்றதெல்லாம் பின்னாடிதான். அத்தோடு...'' என்று நிறுத்தினான்.

''அத்தோடு?''

''இந்த மாதிரி, மூக்கு நுனியை... உதட்டை... ஒரு விரலால் தொட்டுவிட்டு, அதிலேயே பத்து நாட்கள்

மகிழ்ந்து கொண்டு இருப்பதெல்லாம், இனித் தாங்காது. எனக்கு நிறைய வேண்டும்'' என்றான் அவன் சன்னச் சிரிப்புடன்.

அவனது கண்களைச் சற்று நேரம், நேராகப் பார்த்துவிட்டு, ஆறுதலுற்றவளாய், அவன் தோளில் சுகமாகச் சாய்ந்தாள், சௌமியா.

வாய்ப்பை விடாமல் தன் கை வளையத்துக்குள் அவளை இருத்திக் கொண்டான் அவளுடைய பிரியன்... அல்லது ரஞ்சன்.